பக்கங்கள்: இருபத்து எட்டு +6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 05 புதன்கிழமை (21.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 025



தமிழ் மக்களின் உரிமைகளை தாரைவார்த்து கொடுத்துவிடமாட்டோம் 14



மீனவர்கள் ராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் 21



அச்சுறுத்தல் தொடரும் 25

## எம்மக்களை ஒருபோதும் கைவிடோம் நீதிக்காக இறுதிவரை போராடுவோம்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விசேட செவ்வி



கொழும்பு, டிசெ.21

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதி மோதலில் இடம் பெற்ற பொதுமக்களின் உயிரிழப்புக்காக, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதிவரை அரசியல் ரீதியாகப் போராடும். எமது மக் களை நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம்.

- இவ்வாறு 'உதயனு'க்குக் கருத்துத் பக் 27

## புலிகளின் பாணியில் கூட்டமைப்பு பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு

### பத்திரிகையாளர் சந்திப்பில் ஜனாதிபதி காட்டம்



கொழும்பு, டிசெ.21

அரசுடனான தீர்வுப் பேச்சுகளின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், விடுதலைப் புலிகளின் பாணியையே பின்பற்றுகின்றனர். தனித்தீர்மானம் எடுக்கமுடியாமல் வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் சக்திகளால் அவர்கள் தடுமாறுகின்றனர். நாமும் பொறுமையாகப் பேசுகிறோம். எமது பொறுமைக்கும் ஓர் பக் 27

# அறிக்கை முழுமையற்றது; அமெரிக்காவும் நிராகரிப்பு

### போர்க் குற்றங்களுக்குப் பதிலளிக்க இலங்கையிடம் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 21

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட படிப்பினைகள் ஆணைக்குழுவின் நல்லிணக்கத்துக்கான அறிக்கையை அமெரிக்காவும் நிராகரித்துள்ளது. சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை அமையவில்லை என்று அது தெரிவித்துள்ளது.

''போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முழுமையான பதில் அளிக்கப்படவில்லை'' - என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் அம்மையார் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கை அர்த்தமற்றது என்று கூறி தமிழர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே நிராகரித்துள்ளது. சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இந்த அறிக்கை பக்கச்சார்பானது, முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்று கூறி நிராகரித்துள்ளன. இந்த நிலையிலேயே அமெரிக்காவின் கருத்தும் வெளியாகி உள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து மேலும் முழுமையாகப் பதிலளிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

வோஷிடங்னில் செய்தியாளர்களிடம் பேசிய பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் பக் 27

## இலங்கை மீது மட்டும் அமெரிக்காவின் அழுத்தம் ஏன்? - ஜனாதிபதி கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.21

இறுதிப் போரின் போது பொது மக்களின் இலக்குகள் மீது படையினர் திட்டமிட்டு தாக்குதலை நடத்தவில்லை என்று நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தெளிவாகக் கூறிய பின்னரும் கூட இன்னமும் போர்க் குற்றச்சாட்டு எனும் கயிற்றில் அமெரிக்கா தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருப்பது ஏன் என்று புரியவில்லை. இவ்வாறு அமெரிக்காவை விமர்சித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அமெரிக்கா நிராகரித்தமை தொடர்பாகவே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிப் போரில் நடைபெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமெரிக்கா இலங்கை பக் 27

## அமெரிக்காவின் கருத்து அநீதியானது

### அமைச்சர் பீரிஸ் பதிலடி

கொழும்பு, டிசெ.21

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டுள்ள பிரதிபலிப்புகள் அநீதியானவை என்று இலங்கை அரசு நேற்று தெரிவித்திருக்கிறது.

பத்திரிகை ஆசிரியர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு நேற்றுக்காலை அலரிமாளிகையில் நடைபெற்றபோது அரசின் இந்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் நாம் சமர்ப்பித்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்துகள் எம்மைக் கவலையடையச் செய்துள்ளன. முழுமையான விசாரணைகள் நடைபெறவில்லையென்று அமெரிக்கா கூறுவதற்கான அடிப்படை என்னவென்று தெரியவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை சபை பக் 27

## ஆணைக்குழுவின் அறிக்கையை ஆஸ்திரேலியாவும் ஆராய்கிறது

கொழும்பு, டிசெ.21

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உன்னிப்பாக ஆராயப்பட்டு வருவதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஆஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரை அமுலாக்கம் தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு மதிப்பீடு செய் பக் 27

## கூட்டமைப்பின் செயற்பாட்டுக்கு எதிராக சிங்களவர்களைத் திரட்டிப் போராடுவோம்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.21

கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு எதிராக சிங்கள மக்கள் கொதித்தெழவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது - என்று எச்சரிக்கை விடுத்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி நாடளாவிய ரீதியில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளது.

கூட்டமைப்பின் செயற்பாடுகள் எல்லை தாண்டியுள்ளன. இனியும் சிங்கள மக்கள் அமைதி காக்கக் கூடாது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு எமது சமூகம் கிளர்ந்தெழ வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர அழைப்பு விடுத்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை சிபாரிசுகளை நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பக் 26

## நெடுந்தீவுக் கடலில் நேற்றும் தமிழக மீனவர்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

நெடுந்தீவுக் கடற்பகுதியில் தத்தளித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 6 பேரை நேற்று இலங்கைக் கடற்படையினர் மீட்டு கரைசேர்த்தனர்.

கடற்றொழிலுக்காக வந்த போது சீரற்ற காலநிலையால் இவர்களின் படகுகள் பழுதடைந்ததால் நெடுந்தீவு கடற்பகுதியில் தத்தளித்துக்கொண்டிருந்த போதே இவர்கள் மீட்கப்பட்டனர்.

தற்போது இந்த 6 தமிழக மீனவர்களும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இன்று காலை இவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.(ங-319)

## மர்மப்பொருள் வீழ்ந்ததால் வேலணையில் நேற்று பரபரப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

வேலணைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வீடொன்றின் முன்னால் திடீரென வானிலிருந்து கூவிக்கொண்டு வந்து வீழ்ந்த மர்மப்பொருளால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கவிதாசன் என்பவரது வீட்டில் இந்த மர்மப்பொருள் வீழ்ந்ததால் வீட்டு முற்றத்தில் பெரும் குழி ஒன்று உருவாகி உள்ளதாகவும் எனினும் வேறெந்தச் சேதங்களும் ஏற்படவில்லை எனவும் வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்துமேலும் தெரிய வருவதாவது:-

குறித்த வீட்டில் நேற்று மாலை பெரியவர்கள் எவரும் இருக்கவில்லை. பத்து வயதுடைய சிறுவன் ஒருவன் வீட்டில் படித்துக் கொண்டிருந்த போது, பிற்பகல் 3.30 மணியளவில் கிழக்குப் பக்கமாக பெரும் வெடியோசை ஒன்றை அவன் கேட்க நேர்ந்தது. அதன் பின்னர் கூவிக்கொண்டு விரைந்து வந்த பொருள் ஒன்று அவர்களின் வீட்டு முற்றத்தில் பலத்த சத்தத்துடன் வீழ்ந்தது. குறித்த பகுதியில் குடியிருப்புகள் குறைவு என்பதால் ஏனையோ பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.

# பெரும் சலசலப்போடு நடந்த முடிந்த அமைச்சுகளுக்கான விவாதங்கள்

வெறிச்சோடிப் போனது நாடாளுமன்றம் விவாதத்துக்கு விடப்பட்ட விடயங்களைப் பேசுவதற்கு சபையில் உறுப்பினர்கள் அநேகர் இருக்கவில்லை உறுப்பினர்களின் பெயரை ஏலம் போடுவதுபோல் பல முறை கூவியழைத்தும் அமைச்சர்களைக்கூட சபையில் காண முடியவில்லை.

நவம்பர் 21 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி வரவு செலவு திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதன்போது ஜனாதிபதியின் முன்னிலையிலே ஆளும் கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்கள் சிலரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல்களை நத்தினர். என்றுமில்லாத புதுமையாக அன்று போத்தல் வீச்சுக்களும் இடம் பெற்றன.

இதன் எதிரொலியாக ஆளும் தரப்பில் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவுக்கு ஒருவாரகாலத்தடை விடுக்கப்பட்டது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசன்னம் இல்லாமலே 2012 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சியாகஏழு வேலை நாள்கள் வரவு செலவுத்திட்ட உரை மீதான விவாதம் இடம் பெற்றது. வரவு- செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு தமது நன்றி விசுவாசத்தைக் காட்டும் வகையில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் முஷ்டியை முறுக்கிக் கொண்டு சண்டித்தனம் காட்டினர். அதேபோல் இந்த விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரையாற்றும் போது ஆளும்கட்சியினர் தொடர்ச்சியாக குழப்பம் விளைவித்துக் கொண்டே இருந்தனர். என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து டிசெம்பர் முதலாம் திகதி முதல் ஒவ்வொரு அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலைவிவாதங்கள் ஆரம்பமாகின .குழுநிலை விவாதத்தின் போதும் இந்த அட்டகாசங்கள் ஓயவில்லை. சபை நிகழ்வுகளை நடத்திய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் ஆகியோர் சபையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு பெரிதும் சிரமப்பட்டனர். ஆயினும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வரும் இடைக்கிடையே இவர்களுக்கு கை கொடுத்து உதவினார்.

### நிகழ்ந்தேறிய முக்கிய விடயங்கள்

இந்த வரவு-.செலவுத்திட்ட விவாத காலத்தில் சபைக்குள் பல முக்கியமான விடயங்கள் இடம் பெற்றன.

* ஜனாதிபதியின் முன்னிலையிலேயே ஆளும் கட்சி உறுப்பினர்கள்.எதிர்கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.
* நாடாளுமன்றத்தின் இறமை, மரபு, ஒழுக்கம் என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.
* ஆளும் கட்சியின் பிரதி அமைச்சர் ஒருவர் மீது ஒருவார காலத் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வளவும் நடந்த பின்னரும் சபையில் ஆளும் தரப்பினரது ஆர்ப்பாட்டம் ஓயவில்லை.

நாடாளுமன்ற ஒழுக்கம் தொடர்பான தெரிவுக்குழு அமைக்கப்பட்டு இரண்டே தினங்களில் நாடாளுமன்றத்தில் மற்றும் ஒரு தாக்குதல் சம்பவமும் இடம் பெற்றது.

ஜனாதிபதிவருகைதந்தபோது நாடாளுமன்ற சபா மண்டபத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் நடைபெற்றது. அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில் ஜனாதிபதியின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் உத்தியோகத்தர்கள் பகுதியில் அமர்ந்திருந்தார்.

இப்படியான சூழ்நிலையில் ஆளும்கட்சி உறுப்பினர் பெர்னாண்டோ, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர், பாலித்த ரங்கே பண்டாரவை சபா மண்டபத்துக்கு வெளியே




வைத்து தாக்கினார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான சிறப்புரிமை பிரேரணை ஒன்றும் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று 21 ஆம் திகதி வரவு செலவுத்திட்டம் தொடர்பான இறுதி விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறும்.

இதில் ஜனாதிபதியும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று 20ஆம் திகதி சிரேஷ்ட அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீடுகளுடன், குழுநிலையில் விவாதிக்கப்பட்ட 21 அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதம் நடைபெற்ற வேளையில் ஒரே நேரத்தில் பத்து உறுப்பினர்களைக்கூட சபையில் காணமுடியவில்லை பேசும் உறுப்பினர்களும் வெற்று நாற்காலிகளைப் பார்த்துப் பேசிவிட்டு எழுந்து போய்விட்டனர். நாடாளுமன்றம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

வழமையாகவே நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் சபாநாயகர் கலரியில் இருந்து அவதானிப்பர்.

ஆனால் இம்முறை வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு போன்ற பிரதான அமைச்சுகள் தொடர்பான விவாதத்தின் போது கூட சபாநாயகர் கலரியில் இராஜதந்திரிகள் எவரையும் காணமுடியவில்லை.

நேற்று நாடாளுமன்ற விவாதத்தின் போது நாடாளுமன்ற ஒழுக்காற்றுக் குழுவின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான டி.யூ.குணசேகர இந்த விடயத்தை வெளிப்படையாகவே சபையில் கூறினார்.

''நாடாளுமன்றத்தில் அமைச்சுகள் தொடர்பான விவாதங்கள் நடைபெறும் போது எவரும் அமைச்சுகள் தொடர்பாகப் பேசவில்லை. தேவையான ஆலோசனைகளையும் கூறவில்லை.

ஆனால் ஒருவர் மீது மற்றொருவர் சேறு பூசுவதிலேயே காலத்தைச் செலவிட்டனர். இப்படியான கோமாளிக் கூத்துக்களினாலேயே வெளிநாட்டு இராஜதந்திரிகள் நாடாளுமன்ற விவாதங்களை அவதானிக்க வருவதில்லை'' என்றுசிரேஷ்ட அமைச்சர். டி.யூ.குணசேகர வேதனையுடன் கூறினார்.

இப்படியான பல கசப்பான சம்பவங்களுடன் அமைச்சுகள் மீதான விவாதங்கள் முடிவடைந்தன.

## ஆழியவளையில் மினி சூறாவளி: கூரைகள் பறந்தன

வடமராட்சி,டிசெ. 21

வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென வீசிய மினி சூறாவளியால் அப்பகுதியில் உள்ள சில வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. கடலும் பெரும் கொந்தளிப்பாகக் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் கடற்பகுதியிலிருந்து கரை நோக்கி வீசிய மினி சூறாவளியால் கடற்கரையை அண்மித்த 7 வீடுகள், பொதுமண்டபம் மற்றும் பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக போடப்பட்ட கொட்டில்கள் என்பன சேதமாகின . வீடுகளின் கூரைகள் சுமார் 500 மீற்றர் தூரம் வரை பறந்து சென்றன. மினி சூறாவளியை அடுத்து 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள்வேறுபகுதிக்குஇடம்பெயர்ந்து சென்றுள்ளன. (ஒ-323-190)

# யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் 1403 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக 1403 குடும்பங்களைச் சேர்ந்த 5,675 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாகக் குடாநாட்டில் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக யாழ். மாவட்டத்தின் தாழ் நிலப் பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்தப் பகுதிகளில் வசித்த மக்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர் வீடுகளிலும், ஆலயங்கள், பொது மண்டபங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 22 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 153 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 823 பேரும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பகுதியில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 542 பேரும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் குட்பட்ட பகுதியில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மழை தொடர்ந்து நீடித்தால் வெள்ளத்தினால் இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடும் மழையினால் நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்துக்கு அருகில் உள்ள 64 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த வருடம் அத்துமீறிக் குடியேறி வசித்து வரும் குடும்பங்கள் அமைத்துள்ள தற்காலிக கொட்டில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இங்குள்ள 64 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் குழுமி தமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினர்.

பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் தலைமையிலான குழுவினர் இடத்தைப் பார்வையிட்டதாகத் தெரதிவிக்கப்பட்டது.

(த-15-236-207)

# நிகழ்வுகள்

**ஒளிவிழா**

நல்லூர் பிரதேச செயலக ஒளிவிழா இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும். நத்தார் தின செய்தி கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (த-7)

**நேர்முகப் பரீட்சை**

குரும்பசிட்டி, கீரிமலை, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் உள்ள தபால் நிலையங்களுக்கு பதில் உப அஞ்சல் அலுவலர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை யாழ். பிரதான தபால் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

பதில் உப அஞ்சல் அலுவலர் பதவிக்கு விண்ணபிக்க விண்ணப்ப தாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம் அறிவித்துள்ளார். (த-313)

**செட்டிகுளம் பொலிஸில் பெண்கள், சிறுவர் முறைப்பாட்டு பிரிவு**

செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான தனிப்பிரிவு முதல் தடவையாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த தனிப் பிரிவு இன்று புதன்கிழமை முதல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

**முத்தமிழ் விழா**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. முத்தமிழ் மன்றத் தலைவர் மு.நவநீதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (த-38)

**கிராம அலுவலர் அலுவலகம் திறப்பு**

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்ந்த மாவிட்டபுரம் பகுதிக்கு கிராம அலுவலர் அலுவலகம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கிறார். (த-38)

# பேராற்றுக் கரையில் வசிக்கும் 200 குடும்பங்கள் இடம்பெயர்வு

## முத்துஐயன்கட்டு கதவுகள் திறக்கப்பட்டன

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய குளமான முத்துஐயன்கட்டுக் குளத்தின் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுவதால் பேராற்றங்கரையில் வாழும் குடும்பங்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டுக் குளத்தின் மொத்த நீர்க் கொள்ளளவு 23 அடியாகும். தற்போது 22 அடிக்கு நீர் நிரம்பியுள்ளது. கடும் மழை காரணமாகப் பெருமளவு நீர் குளத்துக்கு வந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் குளத்தின் இரண்டு கதவுகள் திறந்து விடப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது.

குளத்திலிருந்து வெளியேற்றப்படும் மேலதிக நீர் பேராற்றில் கலக்கும்போது வெள்ள அபாயம் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையால் பேராற்றங்கரையில் வசிக்கும் சுமார் 200 குடும்பங்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

மிகவும் வறிய நிலையில் உள்ள இந்த மக்கள் இந்த அறிவிப்பால் அச்சமும் கவலையும் அடைந்துள்ளனர்.

இதேவேளை -

முத்துஐயன்கட்டுக் குளத்தின் பிரதான வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு நீர் வெளியேறியதால் அந்தப் பகுதியில் வசித்த 09 குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

(க-500)

# பழுதடைந்த குழாய்க் கிணறுகள் அவலப்படும் அப்பாவி மக்கள்

துணுக்காய், டிசெ.21



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான குழாய்க் கிணறுகளில் இருந்து நீரைப் பெறமுடியாத நிலையில் மக்கள் அவலப்படுகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழ்ந்த போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நேரடிக் கண்காணிப்புடன் பல குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. இவற்றிலிருந்து மக்கள் குடிதண்ணீரைப் பெற்று வந்தனர்.

தற்போது அவற்றின் பாவனைக் காலம் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகின்றது. ஏனென்றால் மல்லாவி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள குழாய்க் கிணறு உட்பட அனிஞ்சியன், யோகபுரம், பாரதிநகர், செபஸ்ரியார் கோயிலடி, அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு அருகில், துணுக்காய் சந்தி, 4 ஆம் யூனிட் திருநகர் ஆகிய இடங்களில் உள்ள மொத்தம் எட்டுக் குழாய் கிணறுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இதில் சில குழாய்க் கிணறுகளில் இருந்து மிகவும் சிரமத்தின் மத்தியில் நீரைப் பெற வேண்டியுள்ளது. சில குழாய்க் கிணறுகளின் நீர் மண் நிறமாகவும் மாற்றம் அடைந்து காணப்படுகின்றது. இந்த நிலை தொடருமானால் மக்கள் நீருக்காக நீண்ட தூரம் அலைய வேண்டிய நிலை தோன்றும்.

எனவே பழுதடைந்த குழாய்க் கிணறுகளைத் திருத்தி அமைத்து வழங்க வேண்டுமெனக் குழாய்க் கிணற்றுப் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-415)

## லலித் குமார, குகனை விடுவிக்கக் கோரி கொழும்பில் பேரணி

காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவும் மக்கள் போராட்ட அமைப்பும் ஒன்றிணைந்து இன்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தவுள்ளன.

காணாற்போனோர்கள் தொடர்பில் அரசு உரிய பதிலை வழங்க வேண்டும் எனக் கோரியும், லலித்குமார, குகன் ஆகியோரை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தியுமே மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு கெம்பல் மைதானத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகி விகாரமாதேவி பூங்காவை வந்தடைந்த பின்னர் கண்டனக் கூட்டம் நடைபெறும்.

### துன்பத்திலும் துன்பம்...



*வெள்ளத்தின் போக்கிடம்: கிளிநொச்சி ஜெயபுரம் வீதியை வெள்ள நீர் குறுக்கறுத்துப் பாய்வதால் பிரயாணிகளும், வாகனங்களும் பெரும் அவலங்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.* (6)

## சூரியவெவ பிரதேச சபையின் பட்ஜெட் தோல்வி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்திற்குட்பட்ட சூரியவெவ பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்துக்கு எதிராக 4 வாக்குகள் அளிக்கப்பட்ட போதிலும் ஆதரவாக சபைத்தலைவரின் வாக்குமாத்திரமே கிடைத்திருந்தது.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மூவர் வரவு செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டமை வரவேற்கத்தக்கது

## பொதுநலவாய நாடுகள் அமைப்பு அறிவிப்பு

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் என பொதுநலவாய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

வெளிப்படைத்தன்மையுடன் இலங்கை அரசு குறித்த முழு அறிக்கையையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளமையும் வரவேற்கப்பட வேண்டிய விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு முழுமையாக அமுல்படுத்தப்படும் என்ற அரசின் உத்தரவாதம் பாராட்டுக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற காரணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு முழுமையான ஆதரவினை வழங்கும் எனவும் உறுதியளித்துள்ளார். (ங-சி)

# சிறுவர்கள் மீதான உரிமை மீறல்களை சர்வதேச அமைப்புகளிடம் முறையிடலாம்

சிறுவர்கள் தமக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து தாமே நேரடியாக சர்வதேச அமைப்புகளிடம் முறைப்பாடு செய்வதற்கு வழி செய்யும் ஏற்பாடு ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறார் உரிமைகள் குறித்த ஐ.நா சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய பிரிவு ஒன்றை அங்கீகரித்ததன் மூலம் ஐ.நா பொதுச் சபை இந்த அதிகாரங்களை சிறுவர்களுக்கு வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய மனித உரிமை மீறல்களான, சிறார்களை விற்றல், சிறார் விபச்சாரம், சிறார் ஆபாசப்படங்கள் மற்றும் சிறாரை போர்ப் படைக்கு சேர்த்தல் ஆகியவை குறித்து அவர்கள் நேரடியாகவே சர்வதேச அமைப்புக்களுக்கு முறையிட முடியும்.

இத்தகைய முறைப்பாடுகளை சர்வதேச அமைப்புக்களுக்கு கொண்டுவரக்கூடிய ஏனைய அதிகாரம் மிக்கவர்களுடன், தற்போது சிறாரும் தமக்கெதிரான உரிமை மீறல்கள் குறித்து முறையிடும் அதிகாரத்தை பெறுவதாக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவியான நவநீதம் பிள்ளை கூறியுள்ளார்.

இந்தப் புதிய சரத்துக்கான பிரேரணை கடந்த ஜூன் மாதத்தில் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இத்தகைய முறைப்பாடுகள் சிறாரிடம் இருந்து நேரடியாகவே கிடைக்கும் பட்சத்தில் குறித்த குற்றங்கள் சிறார் உரிமைகளுக்கான சாசனத்தை மீறுகிறதா என்பதை ஐ.நாவின் சிறார் உரிமைக்கான குழு ஆராயும் என்றும், அதில் இருக்கக் கூடிய சிறாரை பாதிக்கக்கூடிய சிக்கலான விடயங்களை அது கவனமாகக் கையாளும் என்றும் அதன் மூலம் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அது நடவடிக்கை எடுக்கும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் கூறியுள்ளார்.

இத்தகைய முறைப்பாடுகளை விசாரிக்கும் அதேவேளையில், அந்தக் காலகட்டத்தில் அந்த சிறுவனுக்கோ அல்லது சிறுமிக்கோ திருத்த முடியாத பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் இடைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய நாட்டின் அரசை ஐ.நா. கோரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-சி)

# நீர்த் தடுப்பணைகள் உடைந்து தகர்ந்ததால் வெள்ளத்தில் மூழ்கின நெற்பயிர்கள்

அக்கராயன், டிசெ.21

அக்கராயன் குளத்தின் வான் கட்டுப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தடுப்பணை உடைந்து தகர்ந்ததால் குளத்திலிருந்து பெருமளவு நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட நீர்த்தடுப்பணைகளின் அடிப்பாகத்தில் அரிப்பு ஏற்பட்டு கிரவல் மண் முழுவதும் குடமுருட்டி ஆற்றில் படிந்துள்ளதால் இதனூடாகப் பாய்ந்து செல்ல வேண்டிய நீர் சமாதானபுரம் வயல் வெளிகளூடாகப் பாய்ந்து செல்கின்றது. இதனால் சமாதானபுரத்திலுள்ள சுமார் 200 ஏக்கர் வரையான நெல் வயல்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

ஸ்கந்தபுரம் - கிளிநொச்சிப் பிரதான வீதியில் சுமார் நான்கு அடி நீர் பாய்ந்து செல்வதால் போக்குவரத்துக்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் - பூநகரி வீதியில் பாலியாறு, மண்டைக்கல்லாறு என்பன வீதியை மூடிப் பாய்கின்றன. அத்துடன் பூநகரி - பரந்தன் வீதியில் குடமுருட்டி ஆறும், பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் இரணைமடுக் குளத்து நீரும், மூங்கிலாறு உடையார் கட்டை அண்மித்த இடங்களிலும் வீதியை மேவிப் பாய்வதால் பெரும் போக்குவரத்துச் சிரமங்கள் தோன்றியுள்ளன.

இதேவேளை பேராறு, கனகராயன்குளம் ஆறுகளிலிருந்து பெருமளவு நீர் இரணைமடுக் குளத்துக்கு வந்து சேருகின்றது.

(க-410)

# கனரக வாகனப் போக்குவரத்தால் அணைக்கட்டு உடையும் அபாயம்

அக்கராயன், டிசெ.21

துணுக்காய் பிரதேசத்திலுள்ள உயிலங்குளம் அணைக்கட்டு கனரக வாகனங்கள் பயணிப்பதால் சேதமடைந்து வருவதாகக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அணைக்கட்டு வீதியில் 800 மீற்றர் தூரத்துக்கு ஊர்திகள் பயணிப்பதால், அணைக்கட்டு சேதமடைந்து வருவதாகவும் மழை பெய்து கொண்டிருப்பதன் காரணமாகக் குளம் உடைப்பெடுக்கக் கூடிய அபாயம் உள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். உயிலங்குளம் கிராமத்தில் போக்குவரத்துப் பாதைகள் இல்லை. இதன் காரணமாக அணைக்கட்டு வழியாகவே போக்குவரத்து இடம் பெறுகிறது.

உயிலங்குளத்தின் கீழ் 100 ஏக்கர் வரையான நெற்செய்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

உதயன்
21 டிசெம்பர் 2011 புதன்கிழமை

# மன்னாரில் தொடரும் கடும் மழை; வெள்ளத்தில் அவலப்படும் மக்கள்

மன்னார், டிசெ.21

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையின் காரணமாக மாவட்டத்தின் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து அடைமழை பெய்துவருகின்றது. இதனால் பல கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் மழை நீரை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது தொடர்ந்து மழை பெய்து வருகின்றமையினால் எமில் நகர், சாந்திபுரம், கோந்தைப்பிட்டி, போன்ற கடற்கரையோரக் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் நகர்ப் பகுதியின் பல வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. குறித்த வெள்ள நீரை வெளியேற்றும் முகமாக மன்னார் நகரசபை துரித நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.



மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் கட்சிப் பாகுபாடுகள் இன்றி வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடும் மழையின் காரணமாக மீளக் குடியமர்ந்த மக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சன்னார், ஈச்சலவக்கை, பெரிய மடு ஆகிய கிராம மக்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் அனைவரும் காடுகளுக்கு மத்தியிலேயே அரசால் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகளை அரசு வழங்காததால் இவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து அக்கிராமத்துக்குச் செல்லும் பாதைகள் அனைத்தும் மழை நீரினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் தமது கிராமத்தில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணிக்க முடியாத நிலையில் உள்ளனர். (க-601)

# வவுனியா, முல்லைத்தீவில் இறப்பர் செய்கைக்கு முயற்சி

## ஹெக்டேயருக்கு ஒன்றரை லட்சம் ரூபா மானியம்

கொழும்பு, டிசெ.21

அம்பாறை, வவுனியா தெற்கு மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 2012 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இறப்பர் பயிர் செய்கை மேற்கொள்ளப்படும். பயிரிட முன்வருபவர்களுக்கு ஒரு ஹெக்டேயருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா மானியமாக வழங்கப்படும் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

ஆளும்கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் இறப்பர் பயிர்ச்செய்கை தொடர்பாக அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினர்.

இறப்பர் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் சிறு தோட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றதா? அவர்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் என்ன என்று கூறமுடியுமா?, என்று அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் மஹிந்த சமரசிங்க நீண்ட பதில் ஒன்றை அளித்தார்.

''பழைய மரங்களை நீக்கிவிட்டு மீள் நடுகை செய்ய ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா மானியம் வழங்கப்படுகிறது. புதிதாக பயிர் செய்கை மேற்கொள்பவர்களுக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்; இடைப் பயிராக (ஊடு பயிர்) றப்பர் நடுவோருக்கு ஹெக்டேயருக்கு 4 ஆயிரம் ரூபாவும் மானியமாக வழங்கப்படுகின்றது'' - என்றார் அமைச்சர்.

அமைச்சரின் இந்தப் பதிலைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டத்தின்போது வட பகுதியில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டது. அதனை எங்கே எப்போது செயல் படுத்தப் போகின்றீர்கள் என அஸ்வர் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அறிக்கை இந்தப் பிரதேசங்களில் இறப்பர் நடுகை மேற்கொள்ள முடியும் என சிபார்சு செய்துள்ளது. இதன்படி வவுனியா தெற்கு, அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களில் 2012 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இறப்பர் பயிர் செய்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் பதில் அளித்தார். (உ-2)

# அரிசி ஆலையும் எரிபொருள் நிலையமும்

அக்கராயன், டிசெ.21

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பனங்காமம் பற்றுப் ப.நோ.கூ.சங்கம் அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

மேலும் இந்தச் சங்கம் வன்னிவிளாங்குளம் நான்காம் கட்டைப் பகுதியில் எரிபொருள் நிலையம் ஒன்றையும் அமைக்கவுள்ளது.

இதேவேளை துணுக்காய் உயிலங்குளம் கிராம மக்கள் நூலகம் ஒன்றை அமைத்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் ஆரோக்கியபுரம் கிராமத்தில் ப.நோ.கூ. சங்கத்தின் கிளைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

(க-410)

## குடிப்பது எதனை...?



*நீருக்கு நீரினால் அவலம்: தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாகக் கற்சிலைமடுவிலுள்ள கிணறு ஒன்றினுள் வெள்ளநீர் நிறைந்து காணப்படுகின்றது.* (500)

# முல்லைத்தீவிலும் 12,800 பேர் நிர்க்கதி

கிளிநொச்சி,டிசெ.21

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 982 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 800 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும்அவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு, சிறாட்டிக்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளுக்குமான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-6)

# ஆறுகள் பெருக்கெடுப்பு; போக்குவரத்து பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.21

பரந்தன் - முல்லைத்தீவு வீதியூடாக ஆறுகள் பெருக்கெடுத்தோடுவதால் போக்குவரத்தில் பாதிப்புக்கள் தோன்றியுள்ளன.

தற்போது புதுக்குடியிருப்பிலிருந்து கற்சிலைமடு ஊடாக ஒட்டுசுட்டான் வந்தடைந்து முல்லைத்தீவுக்கான போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன.

பேராறு, நாவலடியாறு, காளிகோயிலாறு, மூங்கிலாறு, நாயாறு, மாணிக்கப்பிள்ளையார் ஆறு, நெத்தலி ஆறு என்பன பெருக்கெடுத்து ஓடுவதாலேயே இந்த நிலையேற்பட்டுள்ளது.

மேலும் கற்சிலைமடு ஊடாக அதிக வாகனங்கள் செல்வதால் இங்குள்ள வீதியும் பாதிக்கப்பட்டுள்ளது. (க-500)

# கிளிநொச்சியில் பெருக்கெடுக்கும் வெள்ளம் நேற்றுவரை 14 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

## இரணைமடு வான் கதவுகள் திறப்பு கண்டாவளையில் கிராமங்கள் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.21

வன்னிப்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் கிராமங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசலைகள் மற்றும் பொதுஇடங்கயிலும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். வீதியில் வெள்ளம் தேங்கிநிற்பதால் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்புக்கு உள்ளான 3 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 229 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி போன்ற பிரதேசங்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளன. குறிப்பாக கண்டாவளைப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்கள் பல மூழ்கியுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது வெளியிட்ட தரவுகளின் படி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை 12 நலன்புரி நிலையங்களில் 579 குடும்பங்களைச் சேர்ந்த 2212 அங்கத்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

தட்டுவன்கொட்டி அ.த.க.பாடசாலை,உமையாள் புரம் அ.த.க. பாடசாலை,பரந்தன் சிவபுரம் பொதுநோக்கு மண்டபம், குமாரசாமிபுரம் அ.த.க.பாடசாலை,தருமபுரம் பரிலூக்கா தேவாலயம்,மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை,கல்லாறு அ.த.க.பாடசாலை, புளியம்பொக்கணை பொதுநோக்கு மண்டபம், புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம், கட்டைக்காடு அ.த.க.பாடசாலை, காஞ்சிபுரம் பொதுநோக்கு மண்டபம் ஆகியவற்றிலேயே மக்கள் தங்கியுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 467 குடும்பங்களைச் சேர்ந்த 1658 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து 7 இடைத்தங்கல் முகாங்களில் தங்கியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 106 அங்கத்தவர்கள் இரு இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவில் 276 குடும்பங்களைச் சேர்ந்த 981 அங்கத்தவர்கள் 6 இடைத்தங்கல் முகாங்களில் தங்கியுள்ளனர்.

பள்ளிக்குடாவில் 3 நலன்புரி நிலையங்களிலும் மற்றும் நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, நல்லூர், முற்கொம்பன் பகுதிகளில் இரு இடைத்தங்கல் முகாங்கள் ஆகியவற்றிலும் மக்கள் தங்கியுள்ளனர். (ஒ-436-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு, கிழக்கில் இராணுவம்; அமைச்சரின் நியாயப்படுத்தல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்கள் ஒருபோதும் அகற்றப்படமாட்டா. நாடு முழுவதிலும் இராணுவ முகாம்கள் உள்ளன. அவற்றை அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் என்று கூறமுடியாது.

வடக்கு, கிழக்கில் உள்ள பல அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு, படையினர் தங்கியிருந்த கட்டடங்கள் மற்றும் வீடுகள் கூட மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

இந்தியாவின் சகல மாநிலங்களிலும் இராணுவ முகாம்கள் உள்ளன. அவற்றை அகற்றுமாறு யாராவது கேட்கமுடியுமா? எமது நாட்டுக்கும் அது பொருந்தும். இங்கும் இராணுவ முகாம்கள் மாகாணங்களில் இயங்குவது அவசியம்.

இவ்வாறு அரச தரப்பின் பிரதம கொறடாவும் மூத்த அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனா நாடாளுமன்றில் அறிவித்திருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு, படை முகாம்கள் எல்லா மாகாணங்களிலும் அமைந்திருக்க வேண்டியது அவசியம் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது. ஆனால், மாகாணங்களின் மக்கள் எண்ணிக்கை அவற்றின் விஸ்தீரணம் ஆகியவற்றுக்கு ஏற்ற விகிதாசாரத்தில் அமைவதே உகந்தது.

ஒரு மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் அமைதிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் குந்தகம் உண்டாகும் போது ஏனைய மாகாணங்களில், மாவட்டங்களில் இருந்து படையினரைத் தருவித்து அமைதி நிலைநாட்டப்படுவதும், அதன் பின்னர் உரிய இடத்துக்கும் அனுப்பப்படுவதும் இந்தியாவில் மட்டுமன்றி எல்லா ஜனநாயக நாடுகளிலும் பின்பற்றப்படும் வழிமுறையாகும்.

ஒரு மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் வன்செயல்கள் மோதல்கள் அல்லது கலவரங்கள் நீடித்தால் அந்தப் பகுதியில் அமைதி திரும்பும் வரை, அல்லது அதன் பின்னர் அதிக காலத்துக்கு, வழமை நிலை தோன்றும் வரை மேலதிக படையினர் குறிப்பிட்ட பிரதேசத்தில் அல்லது மாகாணத்தில் நிலை கொள்வதும், அமைதியை நிலைநாட்டுவதும் ஒன்றும் புதியதல்ல. ஜனநாயக நாடுகளில் அந்த நடைமுறை கையாளப்படுவது வியப்புக்கு உரியதும் அல்ல; வியப்பு எதுவும் இல்லை.

அவற்றுக்குப் புறம்பாக, அசாதாரண சூழ்நிலைகளில் ஒரு பிரதேசத்தின் பாதுகாப்புக்கும் மக்களின் உயிர்களுக்கும் ஆபத்துச் சூழும் வேளைகளில், கடும் இராணுவ நடவடிக்கைகள் அத்தியாவசியம் என்று கருதப்படும் வேளைகளில், ஆயுதப் படையினரின் பிரசன்னம் மிக நீண்ட காலத்துக்குத் தேவைப்படும். அது தவிர்க்கப்படக் கூடியதும் அல்ல.

அந்த வகையில் நோக்கும் போது, இந்நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இப்போது பூரண அமைதி நிலவுகிறது. ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனால் தாம் இன்னும் படையினரால் சூழப்பட்டுள்ளனர் என்று கருதும் அளவுக்கு, வெளியே புலப்படாத ஒரு வகையான அச்ச உணர்வுடன் மக்கள் வாழ்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் மேலேழுந்த வாரியாக அமைதியும் சமாதானமும் உருவாக்கப்பட்டுவிட்டதாகத் தென்பட்டாலும், நாளாந்த வாழ்வின் பல அம்சங்களிலும் தாம் விரும்பாத ஒருவகைச் செல்வாக்கு தம்மீது திணிக்கப்படுவதாக மக்கள் அகத்தே உள்ளூர உணர்கிறார்கள்; புழுங்குகிறார்கள். ஆனால் புறத்தே வெளிப்படுத்த அஞ்சுகிறார்கள், தயங்குகிறார்கள்.

தமது அன்றாட வாழ்க்கைப் பரிமாணங்கள் பலவற்றிலும், தாம் வருந்தித்தானும் அழைக்காத சக்திகள் உட்புகுந்து தேவையற்ற சங்கடங்களை கொடுத்தாலும் அவற்றை அடுத்தவரிடம் கூறி ஆறுதல் பெறவும் முடியாத சங்கடம் மக்களுக்கு. எந்தப் பாம்பு எந்தப் புற்றுக்குள் இருக்குமோ என்ற பரவலான அச்சம்.

வடக்கு, கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயங்கள் உட்பட இராணுவ முகாம்கள் இன்னமும் பரவலாக இயங்குகின்றன. ஏற்கனவே இருந்த அடர்த்தி நிலை சுமாராகத் தளர்த்தப்பட்டுள்ளது. அவ்வளவு தான். மக்களுக்கும் படையினருக்கும் இடையே அகன்றிருந்த உறவு நிலை இப்போது சுருங்கியுள்ளது. ஆயினும் அன்னியோன்யம் உருவாகவில்லை.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் படையினரின் பாதுகாப்பு போன்ற காரணங்களைக் காட்டி வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையான பாடசாலைகள் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

இவை ஒரு புறமிருக்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நில, நீர், கடல் வளங்கள் நிறைந்த பிரதேசங்கள், உயர்பாதுகாப்பு வலயங்களாக முடக்கப்பட்டு அவற்றைக் குறிப்பிட்ட பிரதேச மக்கள் பெற்று அனுபவிக்காதிருக்க, அண்டாதிருக்கச் செய்யும் வாய்ப்பாடுகளும் வகுக்கப்பட்டு வருகின்றன.

உதாரணத்துக்கு, வலி.வடக்குப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளில் படைத்தரப்பினர், தாம் நினைத்தவாறு அங்குள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலைகளில் வடக்கு, கிழக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களையும், இராணுவ முகாம்களையும் அகற்றாது இருப்பதே தமது சொந்த நிலைப்பாடு எனக் கூறாமல், இந்தியாவை உதாரணம் காட்டித் தமது செயற்பாடுகளைச் சரிப்படுத்த அல்லது நியாயப்படுத்த அரசு முனைகிறது. அவ்வளவே.

# ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் நாளை வெளியாகும்

கொழும்பு,டிசெ.21

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை முடிவுகள் நாளை வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பரீட்சை முடிவுகளுக்கமைய வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான அனுமதிக்காக நேற்று விவரங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட இருந்ததாகவும் மேலும் பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுச் சபையின் அனுமதி பெறப்பட்டதும் பெரும்பாலும் நாளை குறிப்பிட்ட பரீட்சை முடிவுகளை வெளியிடக் கூடியதாகவிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-ரு)

# விரல் அடையாளத்தைப் பதிவு செய்யத் தவறிய சேமலாப ஊழியருக்கு மீண்டும் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

வடமாகாணத்தில் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் டிசெம்பர் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விரலடையாளம் பெறுதல்,தேசிய அடையாள அட்டையின் விம்பத்தினைப் பெறுதல், புகைப்படம் எடுக்கும் செயற்பாட்டின் போது ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் பலர் கலந்து கொள்ள முடியவில்லை என்பது தெரியவந்துள்ளதாகப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்கு தொழில்தருநர்கள் உரியவகையில் ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்தாமை, குறிப்பிட்ட காலத்தில் அங்கத்தவர்கள் உரிய பிரதேசத்தில் இல்லாமை மற்றும் தேசிய அடையாள அட்டை தெளிவில்லாமை போன்றன முக்கிய காரணங்களாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே அவ்வாறு தவறிவிடப்பட்டவர்களுக்கு மீண்டுமொரு முறை சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் தேவையான தகவல்களினை திரட்டவேண்டியுள்ளது.விரலடையாளம் பெறும் செயல் திட்டத்தில் பங்கெடுக்க முடியாமல் போனவர்கள் தமது பெயர்,முகவரி, ஊழியர் சேமலாபநிதி இலக்கம், தொலைபேசி இலக்கம், பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றை ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் தாங்கள் வசிக்கும் மாவட்டத் தொழில் அலுவலகத்திலோ அல்லது இல.133, நாவலர் வீதியில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(த-26)

# ஆசிரிய ஆலோசகர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.21

வடமாகாணத்தின் கல்வித் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் புதிய ஆசிரிய ஆலோசகர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு,வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களில் ஆசிரிய ஆலோசகர்களாக நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோர் உள்வாங்கப்படவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மாகாண கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-319)

# பாடசாலைகளில் அனுமதிக்குப் பணம் அறவிட்டால் முறையிடுவதற்கு வசதி

## வட மாகாணக் கல்விக் குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

மாணவர்களைப் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்குப் பணம் அறவிடும் அதிபர்கள் தொடர்பாக பெற்றோர்கள் உடன் முறைப்பாடு செய்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம்,மானிப்பாய் வீதியில் இலக்கம் 142/1 என்ற முகவரியில் அமைந்துள்ள வடமாகாணக் கல்விக்குழு செயலகத்தில் பெற்றோர்கள் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்ளலாம் என வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது.

அத்துடன் மாணவர்களைப் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்கு நன்கொடை, அன்பளிப்பு, உதவித்தொகை, அனுமதிக்கட்டணம் என்ற பெயர்களில் பணம் வசூலிப்பது உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த பாடசாலை அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது எனவும் கல்விக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(த-14)

# மாநகர சபை உதவி மேயராக ரமீஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உதவி மேயராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதியான சட்டத்தரணி எம். ரமீஸ் நியமிக்கப்படுவார் எனத் தெரிகின்றது.

மேற்படி கட்சியுடன் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு செய்த உடன்படிக்கைக்கமைய இதுவரை உதவி மேயராக பதவி வகித்த எஸ். இளங்கோ தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இதனை அடுத்து உறுப்பினர் ரமீஸ் உதவி மேயராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(த-7)

# தேசிய பாதுகாப்புத் தினம் மட்டக்களப்பில்

தேசிய பாதுகாப்புத் தினம் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த வருடம் தேசிய பாதுகாப்பு தினத்தை அரசு மட்டக்களப்பில் அனுஷ்டிக்கிறது. அன்று காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரை நாடுதழுவிய ரீதியில், அனர்த்தங்களின் போது உயிரிழந்தவர்களுக்காக மௌன பிரார்த்தனை நடைபெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

(த-15)

## நாளை

கார்த்திகை 06 வியாழக்கிழமை 22.12.2011

திதி: திரயோதசி பி.இ. 3.46 வரை

நட்சத்திரம்: விசாகம் பி.ப. 12.17 வரை

சுபநேரம்: 7.55-9.25வரை, ராகு காலம்: 1.55 -3.25 வரை

உதயன்
21 டிசெம்பர் 2011 புதன்கிழமை

# யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான நேரடித் தபால் சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையேயான நேரடித் தபால் சேவை இன்று புதன்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்படும் என்று யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம் தெரிவித்தார்.

இதன்மூலம் யாழ்.குடாநாட்டில் தினமும் சேகரிக்கப்படும் தபால்கள் அனைத்தும் பாரவூர்தி மூலம் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அனுராதபுரம் தபாலகத்துக்குத் தினமும் வந்துசேரும் குடாநாட்டுக்கான தபால் பொதிகள் பாரவூர்தி மூலம் யாழப்பாணத்துக்கு நேரடியாக எடுத்துவரப்படும்.

இந்த நேரடித் தபால்சேவை மூலம் குடாநாட்டு மக்களுக்கான தபால் சேவை மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகக் குடாநாட்டுக்கான தபால்கள் அனைத்தும் கொழும்பில் இருந்து தபால் ரயில் மூலம் தினமும் ஓமந்தைக்கு எடுத்து வரப்பட்டன.

இந்தத் தபால் ரயில் காலையில் தாமதமாக ஓமந்தையை வந்தடைகின்றமையால் அங்கிருந்து தபால் பொதிகளை வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து தரம் பிரித்து விநியோகப்பதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. மறுநாளே இத்தபால்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தன.

இந்தத் தாமதத்தை நீக்குவதற்காகவே இப்போது நேரடித் தபால் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்தத் துரித தபால் சேவை மூலம் மக்கள் தமக்குரிய தபால்களை 24 மணி நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (த-26)

# நாவற்குழி - கேரதீவு வீதி அகலிக்கப்பட்டு 'காப்பெற்'

## வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 21

நாவற்குழி- கேரதீவு வீதியும் அகலிக்கப்பட்டுக் 'காப்பெற்' வீதியாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுத்துள்ளது.

இந்த வீதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. சேதமடைந்த பகுதிகள் கிரவல், கல் என்பவற்றைப் போட்டுச் சீர் செய்யப்பட்டுள்ளன. இதனால் இந்த வீதியினூடான போக்குவரத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டின் பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக இந்த வீதி உள்ளமையால் இந்த வீதியையும் அகலித்துக் 'காப்பெற்' போடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தப் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரி வித்தன. (த-26)

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.21

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையை யாழ்.பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகள் போலத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நடைபெற்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை தற்போது வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அருணா புண்ணியமூர்த்தியின் தலைமையில் சிறப்பாகக் கட்டுக்கோப்புடன் இயங்கி வருகின்றது. இந்த வைத்தியசாலையில் தற்போது 4 வைத்திய அதிகாரிகளும் ஒரு பல் வைத்திய நிபுணரும் கடமையாற்றி வருகின்றனர்.

தீவகத்தில் மிக முக்கிய வைத்தியசாலையாகிய இந்த ஆதார வைத்தியசாலை அடுத்த வருடம் சீனாவின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

மேலும் இங்கு வெளி நோயாளர் பிரிவுக் கட்டடத்தை அமைப்பதற்கான முன்மொழிவுகளும் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு மேலும் பல விடுதி வசதிகள் செய்யப்பட வேண்டும். இந்த வைத்தியசாலையில் மனித வளம் மற்றும் ஏனைய வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (த-51)

# நெல் வயல்கள் வெள்ளத்தில்

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழையினால் பெரும்பாலான நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வயல்களில் அதிகளவு வெள்ளம் தேங்கியுள்ளதால் அந்த வெள்ளத்தை அகற்றுவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல்களிலேயே இவ்வாறு வெள்ளம் அதிகளவில் தேங்கியுள்ளது.

வெள்ளம் இவ்வாறு தொடர்ச்சியாகத் தேங்கி நின்றால் நெற்பயிர்கள் பாதிக்கப்படலாம் என விவசாயிகள் தெரிவித்தனர். (த-26)



சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் புதிதாகஅமைக்கப்பட்ட இரு மாடி விடுதிகளின் திறப்புகளை பின்லாந்து செஞ்சிலுவைச் சங்க செயலாளர் நாயகம் கிரிஸ்ரினா வைத்தியசாலை அத்தியட்சகரிடம் கையளிக்கிறார். (த-207)

# உரிமையாளர் இல்லாத காணிகளிலும் டெங்கு ஒழிப்பு

உரிமையாளர்கள் இனங்காணப்படாத காணிகளில் பொலிஸாரின் உதவியுடன் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதாக யாழ். மாநகர பிரதம பொது சுகாதார பரிசோதகர் கே.ஏ. ஜீவநாதன் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சுகாதார பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது.கவனிப்பாரின்றிப் பற்றைகள் வளர்ந்து டெங்கு நோய் பரவக்கூடிய நிலையில் காணப்படும் காணிகளைத் துப்புரவு செய்வது தொடர்பாக பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

டெங்கு நோய் பரவக் கூடிய நிலையில் காணப்படும் வியாபார நிலையங்கள், பொது இடங்கள் குறித்துப் பரிசீலனை செய்து அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (த-7)

# வடமராட்சி கிழக்கின் பல பகுதிகள் மழையால் வெள்ளத்தில் மூழ்கின

## மீளக்குடியமர்ந்த மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.21

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.இதனால் அப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கில் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளமையால், பல குடும்பங்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளன.

மதகுகளும், வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மருதங்கேணி-பருத்தித்துறை பிரதான வீதியூடான போக்குவரத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பல பகுதிகளே மழையால் வெள்ளத்தில் மூழ்கின. செம்பியன்பற்று வடக்கு, மருதங்கேணி, தாழையடி, வத்திராயன், உடுத்துறை,ஆழியவளை, வெற்றிலைக்கேணி,முள்ளியான் ஆகிய பகுதிகளில் பல இடங்கள் மழையினால் வெள்ளக்காடாகின.

மீளக்குடியமர்ந்த மக்களின் தறப்பாள் குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் கடும் காற்றினால் குடிசைகளின் கூரைகளும் தூக்கிவீசப்பட்டன.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைப் புள்ளி விவரங்களின்படி அடைமழையால் 2071க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 39 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் வெள்ளம் மோசமாகப் பாதித்த வெற்றிலைக்கேணிப் பகுதியில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்காக சமைத்த உணவு உதவி அரசஅதிபர் பணிமனையினால் வழங்கப்படுவதாக உதவி அரசஅதிபர் எஸ்.திருலிங்கநாதன் தெரிவித்தார். (த-236)

# வளலாய் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மீனவக் குடும்பங்களையும் குடியேற்றுக

## இடம்பெயர்ந்து வாழும் அவர்கள் கோரிக்கை

அச்சுவேலி, டிசெ.21

வளலாய் கிராம அலுவலர் பிரிவில் குடியேற அனுமதிக்கப்படாத மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்கள் தங்களையும் மீள்குடியேற்றுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

வலிகாமம் கிழக்கில் நீண்டகாலமாக மீள்குடியமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டாமல் இருந்து வந்த வளலாய், இடைக்காடு கிராம அலுவலர் பிரிவுகளில் பொதுமக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு வசதியாக குறித்த பிரதேசத்தில் புதையுண்டுபோயுள்ள மிதிவெடிகளை அகற்றும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

மீள்குடியேற்றத்துக்குப் பதிவு செய்த இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 116 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேரும் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வளலாய் கிராம அலுவலர் பிரிவில் குடியேறுவதற்குப் பதிவு செய்த 329 குடும்பங்களில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 643 பேர் மட்டும் மீள்குடியேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வளலாய் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 119 குடும்பங்கள் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

வளலாயில் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத குடும்பங்கள் முழுவதும் மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களே எனக் கூறப்படுகின்றது. வளலாய் கிராம அலுவர் பிரிவில் மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களில் ஒன்றுகூட மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

வளலாய் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்கள் மணற்காடு, அம்பன், குடத்தனை, பருத்தித்துறை, முனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நீண்டகாலமாக இடம்பெயர் நிலையில் தங்கியுள்ளன. இவர்கள் முழுமையாக மீன்பிடித் தொழிலையை மேற்கொண்டு வருவதால் பொருத்தமாக தொழில் வசதி இன்றி மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இடைக்காடு கிராம அலுவல் பிரிவில் உள்ள மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்கள் அனைத்தும் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் வளலாய் கிராம அலுவலர் பிரிவில் உள்ளவர்கள் அனுமதிக்கப்படாமல் இருப்பது சம்பந்தப்பட்ட தொழிலாளர் மத்தியில் பெரும் உளத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமது குடும்பங்களின் நீண்டகாலப் பாதிப்பு மற்றும் சமகாலத்தில் தாம் எதிர்கொண்டுவரும் பாதிப்புகளையும் நெருக்கடிகளையும் சுட்டிக் காட்டி தம்மையும் மீள்குடியேற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு அந்தக் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (த-11)

# தொடரும் மழையை அடுத்து பரவுகின்றது வயிற்றோட்டம்

## தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

தொடரும் மழை காரணமாகப் பெரும் எண்ணிக்கையானோர் வயிற்றுழைவு, வயிற்றோட்டம் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் இடம்பெற்று வருவதா கவும் யாழ். மாநகர சபை பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ஏ.ஜீவநாதன் தெரிவித்தார்.

சுற்றாடல் பொலிஸ் உத்தியோகத்தர்களுடனான இணைந்த சேவை குறித்த கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சுகாதாரப் பணிமனையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2010 ஆம் ஆண்டில் 143 பேர் நெருப்புக் காய்சலினால் பாதிக்கப்பட்டனர். 2011 இல் இன்று வரை 40 பேர் நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். நெருப்புக் காய்ச்சல் நோயைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

உணவு நிலையங்களில் பணியாற்றும் 1430 பேருக்கு தடுப்பு மருந்துகள் போடப்பட்டுள்ளதுடன் உணவு தயாரிக்கும் இடங்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. உணவு தயாரித்து வழங்குபவர்களுக்கும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் மூலம் இது வரை 125 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வண்ணார்பண்ணை, யாழ். பெரிய கடைப் பகுதி, நல்லூர்ப் பகுதிகளில் 15 இற்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொற்று நோய் தடுப்புக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டுள்ளன- என்றார். (த-7)

## யாழ்ப்பாணத்திலும் குளங்கள் நிரம்பின

வலி. வடக்கு, டிசெ. 21

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையினால் பல குளங்கள் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல குளங்கள் தூர் வாரப்படாமல் சேறும் சகதியுமாகக் காணப் படுவதுடன் வாய்க்கால்களும் துப்புரவு செய்யப்படவில்லை. இதனால் வெள்ளம் குளங்களில் நிரம்பும் சந்தர்ப்பங்களில் வழிந்து கடலுக்குச் செல்ல முடியாத நிலையும் உள்ளது.

வெள்ளம் குளங்களில் நிரம்பும் சந்தர்ப்பங்களில் அயலில் உள்ள வீடுகள் கடுமையாக ப்ாதிப்படையும் நிலை காணப் படுகின்றது.

யாழ்ப்பாண நகரப்பகுதியில் உள்ள ஆரியகுளம், வண்ணாங்குளம், மற்றும் நரிக்குண்டுக்குளம் எனப் பல குளங்களும் நிரம்பி வழியும் நிலையில் உள்ளன. (த-86)

## முற்றவெளியை சீரமைக்கும் பணி

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். முற்றவெளிப் பகுதியை மண் போட்டு நிரப்பிச் சீர் செய் யும் பணிகள் தற்போது நடை பெற்றுவருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள தாழ்ந்த இடங்களுக்கு மண் கொட்டப்பட்டு அந்தப் பகுதியில் தேங்கியுள்ள வெள் ளத்தை அகற்றும் நட்வடிக்கை யில் மாநகரசபை ஈடுபட்டுள் ளது.

அத்துடன் அங்கு மேடாகக் காணப்படும் மண் திட்டுக்கள் கனரக வாகனம் மூலம் அகற்றப் பட்டு நிலம் சீர் செய்யப்படுகிறது. அத்துடன் தனியார் பஸ்தரிப்பு நிலையத்தில் வெள்ளம் தேங்கியுள்ள பகுதிகளும் மண் கொட்டப் பட்டுச் சீராக்கப்படுகின்றன. (த-26)

தொடரும் அவலம்...



விடிவு இல்லை: மணியம்தோட்டம் கிராமத்தில் பல வீதிகள், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (த-135)

## மத்தியஸ்தர்களுக்கு நியமன கடிதம்

வலி.வடக்கு, டிசெ.21

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நீதி அமைச்சினால் மத்தியஸ்தர் சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலாளர் கே.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலக மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக ஜெயந்தி நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் மற்றும் 27 பேர் நியமனம் நீதி அமைச் சினால் செய்யப்பட்டுள்ளது. (த-86)


## ‘முகிழ் 2011’ ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். பல்கலைக்கழக கலைவட்டம் நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் சித்திரமும் வடிவமைப்பும் அலகின் 4 ஆம் வருட மாணவர்கள் நடத்தும் ‘முகிழ்- 2011’ ஓவியக் கண்காட்சி இன்று புதன் கிழமை ஆரம்பமாகின்றது.

யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இந்தக் கண்காட்சி இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைக்கவுள்ளார்.



இந்தக் கண்காட்சியில் இடம் பெறும் படைப்புக்கள், சித்திரமும் வடிவமைப்பும் அலகின் 4 ஆம் வருட மாணவர்களின் இறுதி வருடக் கற்கையின் ஒரு பகுதியாகப் பல்கலைக் கழகக் கலையகத்தில் வைத்து உருவாக்கப் பட்டவை.

கண்காட்சி தினமும் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம் பெறும். (த)

## தபால் சேகரிக்கும் நேரத்தை பிற்பகலுக்கு மாற்றக் கோரிக்கை

தென்மராட்சி, டிசெ.21

யாழ்.மாவட்டத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் உள்ள தபால் சேகரிக்கும் நேரத்தை முன்னரைப் போன்று பிற்பகல் வேளைக்கு மாற்ற முடியாதா என மக்கள் வினவுகின்றனர்.

தபால்கள் அனுப்புவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகப் பிற்பகல் 2.30 மணியில் இருந்து மாலை 4 மணிவரை இருந்த தபால் எடுக்கும் நேரம் பிற்பகல் 1 மணியில் இருந்து 2.30 மணியாகக் குறைக்கப்பட்டது. தற்போது நாட்டு நிலைமை சீரடைந்து வருவதையடுத்து இந்த நேரத்தைப் பழைய நேரத்துக்கு மாற்ற முடியாதா என மக்கள் கேட்கின்றனர்.

வாகனங்களில் அனுப்பப் படும் தபால்களுக்காக அவற்றை நேரத்துடன் எடுப்பதை வரவேற்கும் மக்கள் தபால்கள் எடுக்கும் நேரத்தை மாற்றியமைத்து இரு தடவைகள் தபால் எடுக்க முடியாதா எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதாகத்தெரிவித்தனர். (த-207)

## கதிரிப்பாய் சுனாமி குடியிருப்பில் இராணுவமுகாம் அமைக்கத் திட்டம்

### பிரதேச சபையிடம் அனுமதிகோரும் படையினர்

யாழ்ப்பாணம், டிசெ.21

தொண்டமானாறுப் பிரதேசத்தில் உள்ள தம்பாலை கதிரிப்பாயில் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் சுனாமி வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட இடத்தை உயர்பாதுகாப்பு வலயம் என்று தெரிவித்து வீட்டுத் திட்டத்தை முன்னர் இடைநடுவில் குழப்பிய இராணுவத்தினர் தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில் அந்தப் பகுதியில் இராணுவமுகாம் அமைக்கத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

சுனாமியால் பாதிக்கப்பட்ட தொண்டமானாறு, தம்பாலை, கதிரிப்பாய் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு, 2005ஆம் ஆண்டு அப்போதைய மாவட்ட அரச அதிபராக இருந்த கே.கணேஷின் வேண்டுகோளுக்கிணங்க ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இங்கு 100 வீடுகள் அமைப்பதற்குத் திட்டமிட்டு ஒரு தொகுதி வீடுகளின் கட்டடப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்தவேளையில் இராணுவத்தினர், இந்தப் பகுதிகளில் மக்களைக் குடியமர்த்த முடியாது. இது உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் எனத் தெரிவித்ததால் வீடமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது யுத்தம் முடிவடைந்த சூழ்நிலையில் மேற்படி பகுதிகளில் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கத் திட்டமிடப்படுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அச்சுவேலியில் அமைந்துள்ள பிரதான படைத்தளத்தையே மேற்படி பகுதியில் அமைப்பதற்கு இராணுவத்தினர் கோப்பாய் பிரதேச செயலகத்திடம் அனுமதி கோரியுள்ளனர்.

மேற்படி அரச காணியில் இராணுவமுகாம் அமைப்பதற்கான அனுமதி பிரதேச செயலகத்தினால் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-15)

## வலி.கிழக்குப் பிரதேச சபையின் சோலை வரி வீதம் அதிகரிப்பு

அச்சுவேலி, டிசெ.21

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் பிராந்தியத்தில் சோலை வரி மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைப் பிரதேச சபை நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. இதன்படி சோலை வரி வீதம் அதிகரிக்கப்படவுள்ளது.

பிரதேச சபையின் சோலை வரி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அதிகரிக்கப்படாமல் இருந்து வருகின்றது. இதனால் பிரதேச சபைக்கு வருடாந்தம் கிடைக்க வேண்டிய வருமான வீதம் மிகக் குறைவாக உள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏற்புடையதாகச் சோலை வரி வீதத்தை அதிகரிப்பதற்கு வலி.கிழக்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

சோலை வரியை அதிகரிப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டு கட்டணங்களை மீள் பரிசீலனை செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை உரிய திணைக்களம் ஊடாக மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், புதிய மதிப்பீட்டுப் பணிகளுக்கு அமைய 2012 ஆம் ஆண்டு முதல் சோலைவரிகளை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் அறிவித்துள்ளார். (த-11)

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றுக்கு, திருநெல்வேலி, கொக்குவில் பகுதியில் அமைதியான சூழலில் அமைந்த வீடு வாடகைக்குத்தேவை.

தொடர்பு: 0750716859

# இடஞ்சுழிப்பிள்ளையார் மாயம்

தென்மராட்சி, டிசெ.21

தென்மராட்சி கிழக்கு, கரம்பகம் பிள்ளையார் ஆலய விநாயகர் விக்கிரகம் கடந்த வாரம் இனந்தெரியாதோரால் திருடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் ஏனைய விநாயகர் விக்கிரகங்களை விட, தும்பிக்கை இடது பக்கம் சாய்ந்துள்ள நிலையில் இருந்ததால் இடஞ்சுழிப்பிள்ளையார் என அழைக்கப் பட்டு வந்தது. குறித்த விக்கிரகத்தின் பாதத்தில் சிறிய சேதம் ஒன்று உள்ளதாகவும், இந்த விக்கிரகத்தை யாரேனும் காண நேர்ந்தால் அது குறித்து ஆலய பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் மக்களால் யாழ். குடாநாட்டில் அமைக்கப் பட்டு வரும் கோயில் களுக்குமலிவு விலை யில் வழங்கவென திருடர் கூட்டம் ஒன்று ஆலயங் களில் விக்கிரகங் களைத் திருடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ங-207)

**Personal Class**

தரம் 6 - (A/L)வரையான மாணவர்களுக்கு English Per sonal & group class உம் Spoken with grammar கற்க விரும்புபவர்களுக்கும் (No age limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை) (Spoken with grammar கற்பவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்பு: பலாலி வீதி, திருநெல்வேலி.

T.P.: 0772734184

**நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......**

★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒருவருட உத்தரவாதத்துடன் அழகிய கைத் தொலைபேசி ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே)

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
(மலாயன் கபே முன்பாக)

T.P: 021 222 9399

**இன்று முதல் மூன்று நாட்கள்**

# முகிழ்-2011
## ஓவியக்கண்காட்சி

கலைத்துவத்தில் முகிழ்ந்தவர்களின் படைப்புக்களின் புடைப்பு

காலம்: 22, 23, 24 ஆம் திகதிகளில்

தினமும் காலை 10.00 மணிமுதல், மாலை 4மணி வரை கண்காட்சியை பார்வையிடமுடியும்

இடம்: யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்

இன்று 21.12.2011

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
(துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)
அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது.

அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்

ஊடக அனுசரணை www.nationtravels.com

NATION POPULAR TRAVELS & TOURS

இந்தியா சென்றுவர LKR 1600/= மட்டுமே

Hotline 0214 920 920

மாதாந்த கொடுப்பனவு முறை

HNB VISA Cretit card holder only

#82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம் Tel: 0214 920 505
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Fax: 0217 538 325

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி ஜெகநாதன் சிவவதனி

[ஆசிரியை, கிளிநொச்சி உருத்திரபுரம், மகாவித்தியாலயம்.]



அன்னையின் மடியில் 1977.04.17

ஆண்டவன் மடியில் 2006.12.21

ஐந்தாண்டுகள் ஆனாலும் உன் அன்பு முகம் பாராமல் எம்மனதில் நீங்காது நிலைத்து நின்று அன்புக் கதை பேசுதம்மா வையகம் வந்தொரு கால் உன் அன்பு வதன மதனைக் காட்டி எம் வாழ்வில் வளம் ஒருகால் நீ தரத்தான் மாட்டாயா? சொல்லாமல் சென்றதேனம்மா சொல்லொணாத்துயரத்தில் மூழ்கியிருப்பது உனக்குப் புரியாதா?

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில். (11875)(6-7-8)

துயரத்தில் மூழ்கிய
அம்மா, அப்பா, சகோதரர்கள்.

**தேவை**

**அலுவலக உதவியாளர்**

எமது நிறுவனத்திற்கு க.பொ.த உயர்தரம் அல்லது சாதாரணதரம் தகமையுடைய, ஆங்கிலம் சரளமாக எழுத, வாசிக்க, கதைக்க தெரிந்த 30 வயதிற்கு குறைந்த ஆண் , பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையோர் 28/12/2011 அன்று காலை 10 மணி முதல் 2 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு தகுதிச் சான்றிதளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு சமூகமளிக்கவும்.

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில்)
தொ.பே :- 021 222 8060

**Computer Express**

Institute of Information Technology

**O/L எடுத்த மாணவர்களுக்கு அதிரடி கட்டணக் கழிவு**

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

இறுதி ஆண்டில் ஓர் அரிய சந்தர்ப்பம் அனுமதிக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள் University of Madras Bsc பட்டதாரிகளினால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 21.12.2011:- 9 am or 3Pm Batch II 23.12.2011:- 9 am or 3Pm
Batch III 24.12.2011:- 9 am or 3Pm Batch IV 25.12.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**

ஒரு குழந்தை தன் தாய்மொழியைப் பேசப் பழகுவதற்காக இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில்லை. மாறாகத் தன் குடும்பத்தில் உள்ளவர்கள் பலரும் பேசும் வசனங்களை அவதானித்தே தானும் அதுபோலப் பேசப்பழகுகிறது. ஒரு மொழியை பேசப்பழகுவதற்கான சரியான வழி இதுபோன்ற பழக்கப்படுத்தலே.

எமது ஆங்கிலக் கற்பித்தல் முறையும் இதுபோன்றதே. இங்கு இலக்கணப் பயிற்சியோ எழுத்துப் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி ஏனையவர்களுடன் உரையாடல் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலம் 3 மாதத்தில் பழக்கப்படுத்தப்படுகிறது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான இப்பயிற்சி நெறியில் இணைந்த அனைத்து மாணவர்களுமே தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புகிறீர்களா?

பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், கிராமசேவகர்கள் 25.12.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10 பிரிவு II மு.ப. 10 - 12 பிரிவு III பி.ப. 01 - 03 பிரிவு IV பி.ப. 03 - 05

பயிற்சிநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பித்தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். TEL:0776214567

3 மாத பயிற்சிநெறிக் கட்டணம் 3000/=
(அடுத்த ஆண்டிலிருந்து - 6500/=) (11876) (5-6)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2012 ஆம் ஆண்டுக்கான
## மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 23.12.2011 நண்பகல் 12 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 26.12.2011 மு.ப. 10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 26.12.2011 மு.ப. 11 மணி
4. கேள்வி தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித்திகதி : 28.12.2011

**2012 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாது) (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை (01) | 590,000.00 | 5,900.00 | 1,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை (02) | 590,000.00 | 5,900.00 | 1,000.00 |

குறிப்பு: மேலதிக விவரங்களை 10.11.2011 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.

நகராட்சி மன்றம்,சாவகச்சேரி.
20.12.2011.

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C/2892)(6,7,8)

# மரண அறிவித்தல்

## கந்தையா கருணாகரன்

(உரிமையாளர்-M.R.M. Rice Mill-ஊரெழு)



72/11, செம்மணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாகரன் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெனிதன், டிலோயன், தாரகா, மாதங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/11, செம்மணி வீதி,
நல்லூர். (11917) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# வியளம் கேட்டீர்களா?

## காஞ்சிரங்காய் எப்பவேனும் தேங்காயாய் மாறுமே பாருங்கோ!

என்ரை பேரப் பெடியன் ஒருத்தன் தென்பகுதிக்கு வெளிக்கிட்டான்.ஏதோ நிறுவனம்கூட்டிக் கொண்டு போகுதாம். வடக்குக்கும் தெற்குக்கும் உறவுப்பாலம் அமைக்கத்தான் கூட்டிக்கொண்டு போகினையாம். ஆனானப்பட்ட இரும்புப் பாலமெல்லாம் உடைஞ்சு விழுகிற இந்தக் காலத்திலை, செயற்கையாய் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பாலங்கள் நிலைக்குமோ எண்டதுதான் என்ரை சந்தேகம்.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானாம் எண்டொரு பழமொழி கூறுவினை. சிறுபான்மை இனங்களின்ரை பிரச்சினையளிலை தீர்க்கக்கூடிய சின்னச் சின்னப் பிரச்சினையளுக்குக் கூடத் தீர்வு காண மனமில்லாத நிலையிலை எப்பிடி பெரிதாய்ப் புரையோடிப் போன இனப் பிரச்சினைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து தருவினமோ எண்ட அங்கலாய்ப்பு எல்லாரிட்டையும் வந்திட்டுது. வட்டுக்கோட்டையிலை 76இலை தனிநாடு கேட்ட பின்னர் மாவட்ட சபையை 81 இலை தந்தினை. அது சரிவராது எண்டு இந்தியாக்காரனிட்டை அழ, அவன் வடக்கு, கிழக்கை தற்காலிகமாய் இணைச்சு, கொஞ்சக் கொஞ்ச அதிகாரங்களை கிள்ளித் தெளிச்சு மாகாண சபையைத் தந்தான்.

அது சரியில்லையெண்டு புலி குத்தி முறிஞ்சு இந்தியாக்காரனோடை முரண்டு பிடிக்க, உது தேவையில்லாத வேலை எண்டு நாங்கள் சில பேரும் கத்தினம். பிறகு மாகாணசபையை ஆண்டவையும் அது உப்புச்சப்பில்லாத சபை எண்டதை வெளிப்படுத்திச்சினை. இப்ப என்னடாவெண்டால் அதையும் ரண்டாய்ப் பிரிச்சாச்சுது. இப்ப அரசாங்கத்தோடை பேசிறவையைப் பார்த்து உந்தக் காணி,பொலிசு அதிகாரங்களைக் கேட்டு வில்லங்கப்படக்கூடாது எண்டு ஊடக அமைச்சர் அறிவிச்சும் போட்டார். அரசியலிலை உறவுப் பாலம் இப்பிடியிருக்குது.

ஆனா இஞ்சை நாலு பேரையும், அங்கை நாலு பேரையும் கூட்டிக் கொண்டு போய் வந்தால் உறவுப் பாலம் அமைச்சிடலாம் எண்டு சில அமைப்புகள் நினைக்கினை.



அவை நினைக்கிறதும் பிழையில்லை. சேது அணை கட்டேக்கை வானர சேனையளோடை சேர்ந்து சின்ன அணில் பிள்ளையும் மண் சுமந்துதாம். அதின்ரை சேவையைப் பார்த்திட்டு இராமபிரான் அதைத் தூக்கித் தடவி விட்டவராம். அதாலை தான் அணில் பிள்ளைக்கு முதுகிலை மூண்டு கோடாம். நான் சின்னப்பிள்ளை யாய் இருக்கேக்கை பாட்டி சொன்ன கதை இது.

ஆனா முழு அர்த்தத்திலை சமாதானமும்,இன சௌஜன்யமும் இயல்பாய் வர வேணும் கண்டியளோ! அந்தக் காலத்திலை றெயினிலை போகேக்கை தொடங்கின என்ரை சிங்களச் சினேகிதன்ரை நட்பு இண்டை வரைக்கும் இருக்குது பாருங்கோ.எப்ப எப்ப பேச்சு வார்த்தையும், பாதை திறப்பும் நடக்குதோ அப்பவெல்லாம் அவன்ரை குடும்பமும், என்ரை குடும்பமும் வந்து போய்க் கொண்டுதானிருக்குது.

மூண்டு நாலு இனங்கள் கொண்ட இலங்கையிலை எல்லாருக்கும் இடையிலை நல்லுறவு இருக்கிறது அவசியம். அந்த நல்லுறவு எண்டது சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதாய், எல்லாரும் சம நிலையிலை நிக்கிறதாய் அமைய வேணும்.மற்றவருக்குப் பயந்தோ, உள்ளுக்கை வன்மத்தோடை இருந்து கொண்டு, வெளியிலை புன்னகைச்சுக் கொண்டோ நல்லுறவை ஏற்படுத்தேலாது. அந்தக் காலத்திலை ரெயில் பயணங்கள் நல்லுறவை வளர்த்திச்சுது.நாடு தழுவிய இடமாற்றங்கள் சௌஜன்யத்தை உருவாக்கிச்சுது. கலாசாரப் பரிவர்த்தனைகள் உறவைப் பலப்படுத்திச்சுது. அவை இயல்பாய் ஏற்பட்டவை.

இடையிலை அரசியல்வாதிகள் காறி உமிழ்ந்த இனவாத எச்சில் கூவம் ஆறாயல்லோ நாறிக் கொண்டு கிடக்குது. உந்த நாத்தத்தை நீக்க வேணுமெண்டால் துப்பினவை ஏதாயினுஞ் செய்ய வேணும்.அப்பிடிச் செய்யாத வரைக்கும் இந்தப் பயணங்கள் பயனில்லாப் பயணங்களாகவே இருக்கும். எந்த நிலத்திலை வித்து நட்டாலும் காஞ்சிரங்காய் தேங்காயாகாது எண்டு ஒரு முதுமொழி உண்டு. அதைப்புரிஞ்சு கொண்டால் சரி.

விழிச்சான் குஞ்சு.

# நுவரெலியாவிலும் தமிழ் எம்.பிக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கச் சதி

## மலையக சமூகத்தை விழிப்புடன் இருக்கக் கோருகிறார் மனோ

கொழும்பு,டிசெ.21

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு சதித் திட்டம் தீட்டப் படுகிறது. ஏனவே, இது குறித்து மலையகக் கட்சிகளும், மக்களும் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்சமயம் நுவரெலியா மாவட்டத் தின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர் களில் ஐவர் தமிழர்களாக இருக்கிறார் கள். இந்த நிலைமையை மாற்றி நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு மாற்றுவழியில் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது.

இது தொடர்பாக நுவரெலியாமாவட்ட தமிழ்மக்களும், மலையகக் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். ஆளுமையுடன் செயற்பட்டு வரும் ஆபத்து களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர் காலத்தில் வாய்மூடி மௌனிகளாக இருப்பதற்குக்கூட நமது மலையக அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கும் நாடாளுமன் றத்தில் இடமிருக்கப்போவதில்லை என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தனது பிறந்த தினத்தையிட்டு தன்னைச் சந்தித்த முன்னணியின் நுவரெலியா மாவட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தலைமையிலான மலையக ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு காலத்தில் யாழ். மாவட்டத்தில் பன்னிரண்டாக இருந்த ஒட்டுமொத்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்று ஆறாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு வாக்காளர் தொகையில் ஏற்பட்ட குறைவு காரணமாகக் காட்டப் பட்டுள்ளது. இது ஒட்டு மொத்த தமிழ் இனத் திற்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பாகும்.

### பெரும்பான்மையினரை குடியேற்ற முடியும்

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் மாற்று வழிகளின் மூலமாக தமிழ் நாடாளுமன் றப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்குத் திட்டம் தீட்டப்படுகிறது என நம்பகரமான தகவல்கள் கிடைத்துள் ளன.

தகுதியுள்ள தமிழர்களை வாக்காளர் களாகப் பதிவு செய்வதில் குளறுபடிகளை ஏற்படுத்தி தமிழ் வாக்காளர் தொகை அதிகரிக்கப்படாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தை தளமாகக் கொண்டு மலையகம் முழுக்க தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில் திட்டமிட்டுப் பெரும்பான்மையினரைக் குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தமிழர்கள் செறிவாக வாழ்வதைத் தடுப்பதன் மூலம் எதிர் காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடிய புதிய தேர்தல் முறையின்கீழ் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை நுவரெலியா மாவட் டத்திலிருந்து தெரிவுசெய்வதில் பெரும் நெருக்கடி ஏற்படும்.

### வாய் திறக்க அச்சம்

அரசுக்குள்ளே அமைச்சர்களாகவும், ஆதரவு அணியினராகவும் செயற்படும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கும், மலையக அரசியல் கட்சிகளுக்கும் இது தொடர் பிலே பெரும் பொறுப்புகள் இருக்கின்றன.

ஆனால், நமது மலையக தமிழ்ப் பிரதிநிதிகள் மலையகத்தில் தமிழ்ச் சமூகம் எதிர் நோக்கும் ஆபத்துகளை உணர்ந்திருக்கின்றார்களா என்பது புரியவில்லை. வாயைத் திறந்து பேசினால் ஜனாதிபதி கோபித்துக் கொள்வார் என்பதற்காக நமது மலையகப் பிரதிநிதிகள் வாயைத் திறப்பதில்லை.

அரசுக்கு ஆதரவளிப்பதன் மூல மாக நமது இனம் நன்மை பெற வேண்டும். ஆனால், ஆதரவையும் வழங்கிவிட்டு, நமக்கெதிராக நிகழ்த் தப்படும் அநீதிகளையும் கண்டு வாய் மூடி மௌனிகளாக இருப்பதில் அர்த்தமில்லை. அதை விட எதிரணியில் அமர்ந்து உண்மைகளைத் துணிச்சலுடன் எடுத்துக்கூறுவது சாலச்சிறந் ததாகும் - என்றார். (ஒ-சி)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா?

## அமெரிக்க நீதிவான் கேள்வி

கொழும்பு,டிசெ.21

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா என்று அமெரிக்க மாவட்ட நீதிவான் கொலட் கோட்லி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்க நீதிமன்றில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரக்கூடிய சாத்தியம் குறித்து அறிவிக்குமாறு இராஜாங்கத் திணைக்களத்துக்கு அவர் பணித்துள்ளார்.

இறைமையுடைய நாடொன்றின் ஜனாதிபதியாகச் செயற்பட்டு வரும் ஒருவருக்கு எதிராக வழக்குத்தொடர முடியாது. ஏனைய நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாததனைப் போன்றே இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியாது என்று சட்டத்தரணி மிச்சல் மேர்சரி நீதிவானிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

ஜப்பான் அரசுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து அமெரிக்க அரசிடம் கருத்துக் கோரப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணியின் அறிக்கையை பரிசீலனை செய்த நீதிவான் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரக்கூடிய சாத்தியம் குறித்து ஆராய்ந்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# யூரோ நாணயத் தாள்களை சட்டவிரோதமாக கொண்டு சென்றவர் கைது

கொழும்பு,டிசெ.21

யூரோ நாணயத் தாள்களை சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குக் கொண்டு செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 51 லட்சம் ரூபா பெறுமதியான யூரோ நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டதாக விமான நிலையத்தின் சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பணத்தை சிங்கப்பூருக்குக் கொண்டு செல்வதற்கு முயற்சித்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்ட இந்த நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

(ச)

# அதிவேக நெடுஞ்சாலையில் சொகுசு பஸ் சேவை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அடுத்த வருடம் முதல் சொகுசு பஸ் சேவை இடம்பெறும் என்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாடுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் பி.டி. கே.பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையும் முதற்கட்டமாக 48 ஆசனங்களைக் கொண்ட 4 பஸ்களை வழங்கவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். பயணிகளின் கோரிக்கைக்கமைய காலியிலிருந்து கொட்டாவ வரையான நுழைவாயிலுக்கு பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக பஸ்கள் ஒழுங்கு படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச)

# சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட 225 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெ.21

இந்த வருடம் இதுவரை சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனை மற்றும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 225 பேருக்கு எதிராக யாழ். மதுவரித் திணைக்களம் வழக்குத் தாக்குதல் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் யாழ். மதுவரித் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள பிரதேசங்களில் மேற்படி 225 பேரும் இந்த வருடம் கைது செய்யப்பட்டு ஊர்காவற் றுறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றின் நீதிவான் கோர்ஜ் மகிழ் மகாதேவா வழக்கினை விசாரிந்து 11 லட்சத்து 45 ஆயிரத்து, அறுநூற்று ஐம்பது ரூபா தண்டப்பணமும் ஒருவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

இவர்களில் ஜனவரி மாதம் 7பேருக்கு நான்காயிரத்து ஐந்நூறு ரூபாவும், பெப்ரவரி மாதம் 9 பேருக்கு 15 ஆயிரம் ரூபாவும், மார்ச் மாதம் 13 பேருக்கு 15 ஆயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபாவும், ஏப்ரல் மாதம் 22 பேருக்கு 15 ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாவும் மே மாதம் 20 பேருக்கு 42 ஆயிரத்து தொளாயிரம் ரூபாவும், ஜூன் மாதம் 22 பேருக்கு ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபாவும், ஜூலை மாதம் 20 பேருக்கு 53ஆயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபாவும் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும், ஓகஸ்ட் மாதம் 11 பேருக்கு 39 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் செப் ரெம்பர் மாதம் 23 பேருக்கு 6 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், ஒக்ரோபர் மாதம் 24 பேருக்கு 70 ஆயிரம் ரூபாவும், நவம்பர் மாதம் 32 பேருக்கு 84 ஆயிரம் ரூபாவும், டிசெம்பர் மாதம் 22 பேருக்கு 80 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் கைது செய்யப்பட்ட 89 பேர் 21 வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தும் சிகரெட் மற்றும் மதுபானம் விற்பனை செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த வருடம் 185 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு 19 லட்சத்து 27 ஆயிரத்து ஐந்நூற்றி ஐம்பது ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக யாழ். மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.கிருபாகரன் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் கசிப்பு உற்பத்தி செல்வோர் எண்ணிக்கை அதிகமாக இருந்தது ஆனால் இந்த வருடம் கசிப்பு உற்பத்தி குறைவடைந்து இருந்தாலும் 21 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் சிகரெட் விற்பனை மதுபானம் விற்பனை, பாவனையாளர்களாக அதிகமாக கைது செய்யப்பட்டனர். இவர்கள் குறிப்பாக யாழ். நகர் பகுதிகளின் பிரபல பாட சாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் என்பது குறிப்பி டத்தக்கது - என்றார்.

(வ-313)

# சவூதி ரியால் கடத்திய இலங்கையர் சென்னை விமான நிலையத்தில் கைது

சட்டவிரோதமான முறையில் சவூதி அரேபியர்களைக் கடத்திச் சென்ற இலங்கைப் பிரஜை ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் இரவு இலங்கையில் இருந்து ஒரு விமானம் சென்றது. இதில், பயணித்தவர்களை சென்னை விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, இலங்கையை சேர்ந்த கிராத் முகாரி (வயது 50) என்பவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்துள்ளனர்.

விசாரணையில், அவர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளார். இதையடுத்து, அவருடைய உடைமைகளை அதிகாரிகள் சோதனை செய்ததில், ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள சவூதி ரியால் (இந்திய மதிப்பில் ரூ.14 லட்சம்) இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

. இதையடுத்து, சுங்கத்துறை அதிகாரிகள் அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் (வ)

# சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூ.ச.வெள்ளிவிழா போட்டி

வடமராட்சி, டிசெ.21

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டை ஒட்டி நடத்தப்படும் சதுரங்க சுற்றுப்போட்டி இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை பருத்தித்துறை தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி மட்டத்தில் 8வயது தொடக்கம் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்கான இந்தப் போட்டி 10 பிரிவுகளாக இடம்பெறும்.

இன்று புதன்கிழமை தொடக்கம் நாளை வியாழக்கிழமை வரை 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் பிரிவுகளுக்கான போட்டிகளும் ஏனைய பிரிவுகளுக்கான போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறு நாள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் என்று மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் லயன் கே. தங்கராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் நா.சோதிநாதன் தலைமையிலான மத்தியஸ்தர் குழு இந்தச் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது. (வ-236)

## சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இந்திய பிரஜை கைது

இலங்கையில் விசா எதுவும் இன்றிச் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருதானைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக மருதானைப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆலயத்துக்கு சுற்றுமதில்

பண்ணாகம் ஆலடி வைரவர் ஆலயத்துக்கு வெளிப்பிரகார சுற்று மதில் கட்டும் வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. பண்ணாகம் மாதர் அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினரின் மேற்பார்வையில் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன.

மேலும் வடக்குப் பக்க மேற்குப்பக்க சுவர்கள் கட்டுவதற்கான வேலைகள் இந்த மாதத்தில் நிறைவுபெறவுள்ளன. (வ-28)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை
திருமதி ஞானகலை நவரட்ணராஜா அவர்களின்
பாசமிகு மாமி
திருமதி வேலுப்பிள்ளை பார்வதி
அவர்களின் மறைவில் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை — பாடசாலைச் சமூகம்.

(11861)(6-8-7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்



மலர்வு: 21.07.1940



உதிர்வு: 21.12.2007

பாசத்தின் உறைவிடமே! பண்பின் ஒளிவிளக்கே!
அறிவின் இருப்பிடமே!ஆண்டுகள் நான்கு ஆகியும்
ஆறவில்லையே எம் மனம்
போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
சின்னையா என்று நாம் இனி யாரை அழைப்பது?
ஆறுதல்கள் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

அல்வின் றோட், காரைநகர்.

த. ஐயாத்துரை[காந்தி] குடும்பத்தினர்.

(11849)(6,7,8)

**வாகனம் உடன் விற்பனைக்கு**

NISSAN Car N17 2006 B/New EX Sal oon KC xxxx air bag excellent condition உடன் விற்பனைக்கு.
T.P: 0718052281

**ஆசிரியர் தேவை**

கொழும்பிலுள்ள பிரபல தனியார் ஆண்கள் பாடசாலை ஒன்றிற்கு உயர்தர வகுப் பிற்கு உயிரியல் பாடத்தை கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர் தேவை. தகுதியுடை யவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பிரதிஅதிபர்: அருட்சகோதரர் புரவீன். T.P. 0718278709

**சாய் சங்கீதா**



42,500/= Upwards — 5,250/= Upwards — 5,950/= Upwards — 4,750/= Upwards

இசைக்கருவிகள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

U.G. 53, பீப்பிள்ஸ் பார்க், காஸ் வேக்ஸ் வீதி, கொழும்பு - 11.

Tel : 011 2384222 / 2445102

**தலைநகரில் தங்குமிட வசதி**

Rooms A/C, Non A/C, Attached Bath room, T.V, புகையிரத நிலையம் , பஸ்தரிப்பு நிலையம் , பொதுச் சந்தை மிக அருகில், சகல வசதிகளையும் கொண்ட (New Oasiss rest) ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும்.

இல.135, மெலிபன் வீதி,
கொழும்பு-11
தொ.பே: 0112338437,
0112323449,
0112470209.

(10693)(6-19-8)

## Shamrock - Academy EACHCHAMODDAI அறிவித்தல்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி,ஈச்சமோட்டை வீதி இல.20 (8) இல் இயங்கிவரும் **Shamrock - Academy** எனும் தனியார் கல்வி நிறுவனத்தின் உரிமையாளரும், இயக்குநருமாக இருந்து 16.11.2011 அன்று காலமான தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம் அவர்களைத் தொடர்ந்து இதன் உரிமையாளரும், இயக்குநருமாக, அன்னாரது மனைவியாகிய திருமதி மேரி செலஸ்ற் செல்வராணி விஜயசிங்கம் ஆகிய நானே பணியாற்றி வருகின்றேன் என்று நிறுவன ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் மற்றும் அனைவருக்கும் இத்தகவலை அறியத் தருகின்றேன். ஆகையால் இந்த நிறுவனம் தொடர்பாக என்னுடனேயே சகல தொடர்புகளையும் வைத்துக்கொள்ளுமாறு சகலரை யும் கேட்டுக்கொள்கின்றேன்.

இல.7/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி M.S.S.விஜயசிங்கம், Shamrock - Academy.

(சி/6991)(2-6-7)

## 24 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சீ. செல்லத்துரை
[முன்னாள்மேற்பார்வையாளர், யாழ். போதனா வைத்தியசாலை]



தோற்றம்: 09.02.1937



மறைவு: 21.12.1987

எம் இனிய அப்பாவே எமையெல்லாம் விட்டு இறைவன் திருவடி சேர்ந்ததேனோ. ஆறாத் துயருடன் தேடுகின்றோம் ஆறுதல் சொல்ல யாரும் இல்லை ஆண்டுகள் பல சென்றாலும் ஆறமறுக்கிறது எம்மனம் உங்கள் பிரிவால் வேதனைப்படும்

ஈஸ்வரி வாசம் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

அன்பின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(11863)(6.7.8)

# பாதுகாப்பு அமைச்சு விவாதத்தில் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

## சபையில் ஒரே கூச்சல், குழப்பம்

கொழும்பு, டிசெ.21

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒடுக்கீட்டு குழுநிலை விவாதத்தின்போது சபையில் ஒரே பரபரப்பு, கூச்சல், குழப்பங்கள்.ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுக்கான குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

வழமைபோல் எதிர்க்கட்சித் தரப்பில் விவாதம் ஆரம்பிக்கப்பட்டது. புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ரங்கபண்டார விவாதத்தை ஆரம்பித்தார்.

அவர் பேச ஆரம்பித்த நேரம் முதல் ஆளும்தரப்பினர் இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தனர்.

அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினை என்றும் சிறப்புரிமை என்றும் குறுக்கீடு செய்தனர்.

சில சந்தர்ப்பங்களில் பிரதி சபாநாயகர் என்ன கூறுகிறார். பேசும் உறுப்பினர் என்ன கூறுகின்றார் என்பதைக் கூட கேட்க முடியாத அளவுக்கு கூச்சல் கடுமையாக இருந்தது.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் ரங்கே பண்டார தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.ஆளும்தரப்பினர்களின் குறுக்கீடுகளுக்கும் கேள்விகளுக்கும் சுடச் சுட பதில் அளித்துக் கொண்டே பேசினார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், ரங்கேபண்டாரவின் நேரம் முடிந்துவிட்டது எனச் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க எதிர்க்கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் 18 நிமிடங்களை ரங்கே பண்டாரவுக்கு வழங்குவதாகக் கூறினார்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதி சபாநாயகர் ரங்கே பண்டாரவைத் தொடர்ந்து பேச அனுமதித்தார்.

ரங்கே பண்டார தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது ஆளும்கட்சிப் பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தன பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றை எழுப்பினார்.

'' எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியதைத் தொடர்ந்து பிரதமர் பேச வேண்டிய நேரம் வந்து விட்டது. எதிர்க்கட்சியினர் திட்டமிட்டே பிரதமரின் நேரத்தைப் பெற முயற்சிக்கின்றனர்.

கௌரவ உறுப்பினர் ஏற்கனவே 55 நிமிடம் பேசி விட்டார். அவருக்குத் தொடர்ந்தும் இடமளிக்கக் கூடாது என்றும் பிரதமரைப் பேச இடமளிக்க வேண்டும்'' - என்றார்.

எதிர்க்கட்சிகளின் நேரத்தில் பேச அனுமதிக்கும் படியே ரங்கே பண்டாரவுக்கு கூடுதல் நேரம் வழங்கினேன் என்றும் அவருக்கு மேலதிகமாக ஐந்து நிமிடம் வழங்கினேன் என்று கூறிய பிரதி சபாநாயகர் ரங்கே பண்டாராவைப் பேசும்படி கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து நின்று கூச்சல் இட்டனர்.

### சபையில் ஒரே குழப்பம்,கூச்சல்

ஆளும்கட்சி உறுப்பினர்களும் எதிரணியினரும் கடும் சொற்போர் நடத்தினர்.

உறுப்பினரால் பேச முடியவில்லை. பேசினாலும் அதைக் கேட்கக் கூடிய நிலையில் எவரும் இல்லை.

ஆளும்கட்சியினரின் இந்த அமளியைத் தொடர்ந்து எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோன் அமரதுங்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கூட சுதந்திரமாகப் பேச முடியாத நிலை என்றும் கூறினார்.

'' இது ஓர் உறுப்பினரின் அடிப்படை சிறப்பு உரிமை மறுக்கப்பட்டதாகவே அமைந்துள்ளது. எனவே நாம் வெளிநடப்பு செய்கிறோம்'' என்று கூறி சபையைவிட்டு வெளியேறி னார். அவரைத் தொடர்ந்து ஐக்கிய. தேசியக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர்.

இந்த வேளையில் ரங்கே பண்டார தனது மேசையில் இருந்த ஆவணங்களை அடுக்கிக் கொண்டிருந்தார். அப்போது சபைக்குப் பின்வரிசையில் இருந்த ஆளும்தரப்பினர் அவரை வம்புக்கு இழுத்தனர்.

ரங்கே பண்டார ஒரு கதவு வழியாக வெளியேறிய போது ஆளும்கட்சி உறுப்பினரான அருந்திக்க பெர்னாண்டோ மறு கதவு வழியாக எழுந்து ஓடினார்.அவரின் பின் அவரது சகாக்களும் ஓடினர். ஓடிய வேகத்தில் முஸ்டியை முறுக்கிக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டனர் யாரை யார் தாக்கியது என்று தெரியவில்லை. கதவுகள் திறந்து இருந்ததால் அவை பார்வையாளர் பகுதியிலிருந்தவர்களால் அவதானிக்க முடிந்தது. (உ-02)

# தமிழக மீனவர்கள் நான்கு பேர் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ.21

நெடுந்தீவுக் கடற்கரையில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு தமிழக மீனவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நெடுந்தீவுக் கடற்கரையை அண்மித்துள்ள முருகை கற்பாறைப் பகுதியிலேயே இந்த மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டிணத்தைச் சேர்ந்த இப்ராகிம் ரகுமான் கான் (வயது-26), கறுப்பையா விஜயகுமார் (வயது-47), லட்சுமணன் பெருமாள் (வயது-55) ஸ்ரீனிவாசன் தேவதாஸ் (வயது-55) ஆகிய மீனவர்களே மீட்கப்பட்டவர்களாவர்.

பின்னர் இவர்கள் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இந்த மீனவர்கள் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்டபோது இவர்களை 21 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலை யில் தங்கவைக்கும்படி நெடுந் தீவுப் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி கடற்தொழிலுக்காகப் புறப்பட்ட இவர்களின் ட்றோலர் படகில் உடைவு ஏற்பட்டு கடல் நீர் உட்புக ஆரம்பித்தது. அதனாலேயே அவர்கள் நடுக்கடலில் தத்தளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஊடாக மீனவர்களை மீளவும் புதுக்கோட்டைக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ங-14)

# ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சர்வதேசம், எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்

கொழும்பு, டிசெ.20

தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள சிபாரிசுகளை நடைமுறைப் படுத்த சர்வதேசமும் எதிர்க் கட்சிகளும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத்திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பூரண அமைதியை ஏற்படுத்தித் தந்த பாதுகாப்பு அமைச்சுக்கும் படையினருக்கும் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்காலத்தில் இந்நாட்டுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் நாம் செயற்படவேண்டும்.

யுத்தத்தின் பின் கிழக்கில் அனைத்துத் தேர்தல்களையும் நடத்தி நாம் அங்கு பூரண சுதந்திரத்தை ஏற்படுத்தினோம். வடக்கிலும் அதேபோல் செய்வதே எமது நோக்கம்.

இவற்றையெல்லாம் செய்வதற்கு எமது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வழிகாட்டியாக அமைந்துள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவை நாம் ஸ்தாபித்தபோது புலர் கிண்டல் செய்தனர். இது மீண்டும் காலத்தைக் கடத்தும் செயல் என்றும் இதன் அறிக்கை வெளியிடப்படமாட்டாது என்றும் கூறினர். இந்த ஆணைக் குழு மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்று சர்வதேசம் கூறியது.

ஆனால், அந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டது. அதை நாம் நன்கு ஆராய்ந்தோம். அது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நல்ல வழிகாட்டியாக இருக்கின்றது.

அறிக்கையில் உள்ள குறைபாடுகளைப்பற்றிப் பேசுவதைத் தவிர்த்து அதில் உள்ள நல்ல விடயங்களைப்பற்றி மாத்திரம் பேசுவோம். அந்த நல்ல விடயங்களை நடைமுறைப்படுத்த முனைவோம்.

ஆகவே, அந்த அறிக்கையில் உள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு சர்வதேசமும் உள்ளூர் அரசியல் கட்சிகளும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

# இளைஞருக்குப் பிணை

சாவகச்சேரி வைத்திய சாலை விடுதியில் தங்கியிருந்த நோயாளரைத் தாக்கிய இளைஞர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை அனுமதி அளித்துள்ளார். (ங-207)

# பொன்சேகாவின் விடுதலைக்காக அரசுடன் பேசுகிறோமே தவிர மன்னிப்புக் கோரவில்லை

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படும் திகதி குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை. அவரின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியுடன் நாம் தொடர்ந்தும் பேச்சு நடத்துவோம்.

- இவ்வாறு ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனவரி மாதம் முதலாம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளார் என செய்திகள் வெளியாகின.

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும், ஜனாதிபதிக்குமிடையில் சுமார் இரண்டு மாத காலமாக இடம்பெற்றுவந்த சுமுகமான பேச்சையடுத்தே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டிரான் அலஸிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாகத் தொடர்ந்தும் பேச்சு நடத்தி வருகின்றோம்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு நாம் கோருகின்றோமே. அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரவில்லை.

முன்னாள் இராணுவத் தளபதியின் விடுதலையை வலியுறுத்தி பேச்சுகள் தொடர்கின்றன. ஆனாலும், விடுதலை செய்யப்படும் திகதி எதுவும் இன்னும் அறிவிக்கப்படவில்லை - என்றார். (ங-சி)

# சர்வதேச விசாரணையையே காங்கிரஸும் வலியுறுத்துகிறது

இறுதிப்போரில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் மட்டுமல்லாது கடந்த 60 வருடங்களாக நிகழ்த்தப்பட்டு வந்த இனஅழிப்பு நடவடிக்கை பற்றி சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் அவசியம் என்பதே எமது நிலைப்பாடு என்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக அக்கட்சி சார்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை முற்றாக நிராகரிக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்புத் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தி, அதற்குரிய தண்டனைகளை வழங்கி அரசியல் ரீதியாகத் தமிழ் இனத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சர்வதேசத்துக்கு உண்டு-என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ங-319)

# வரவு - செலவுத்திட்ட அறிக்கை மக்கள் பார்வைக்கு

வலிகாமம் கிழக்கு, புத்தூர் பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை பிரதேச சபையின் உப அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் டிசெம்பர் 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை பொதுமக்கள், வரியிறுப்பாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் பார்வையிட்டு வரவு - செலவு மதிப்பீட்டு அறிக்கையை அறிந்துகொள்ளலாம் எனச் சபையின் தவிசாளர் அ.உதயகுமார் அறிவித்துள்ளார். (எ-11)

# நத்தார் தின வழிபாடுகள்

வடமராட்சி, டிசெ.21

பருத்தித்துறை - கட்டைவேலி சேகரப் பிரிவில் உள்ள மெதடிஸ்த தேவாலயங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நத்தார் ஆராதனை, சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

சேகர பிரதம குரு அருட்திரு சி.சே.தங்கராசா தலைமையிலான அந்தந்தப் பகுதி தேவாலய உதவிக் குருவானவர்கள் ஆராதனைகளையும் வழிபாடுகளையும் நடத்துவார்கள்.

(எ-236)

# சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டாலே சுயநிர்ணயம், தேசியம் சாத்தியமாகும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தாதீர்கள் என தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரியோருக்கு புளொட் சாட்டை

கொழும்பு, டிசெ. 21

தீர்வுத்திட்ட விடயத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த கருத்துடன் செயற்பட்டால் மாத்திரமே தேசியம், சுயநிர்ணயம் ஆகியவை சாத்தியப்பாடுள்ளவையாகும் என புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனை மனதிலிருத்தி பொது அமைப்புகளும், புத்திஜீவிகளும், மதத்தலைவர்களும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றுபடுத்த முயலவேண்டுமேயொழிய ஒற்றுமையைப் பலவீனப்படுத்துவதற்கு முயலக்கூடாது என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்ச் சமூகத்தின் ஒருசாரார் விடுத்த 'கூட்டமைப்புக்கான பகிரங்க விண்ணப்பம்' என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில அம்சங்கள் தொடர்பாக புளொட்டின் நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்தி புளொட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

புதுடில்லியில் கடந்த ஒகஸ்ட் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இந்திய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து தமிழ்க் கட்சிகள் மாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளடங்கிய தீர்மானத்தை புளொட் அமைப்பு எதிர்த்தது என தமிழ் சிவில் சமூகம் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவலாகும் என்பதை நாம் தெரியப்படுத்துகின்றோம். அந்த மாநாட்டில் இந்திய நாடாளுமன்றத்துக்கு பொதுவாக சமர்ப்பிக்கவென மாநாட்டில் பங்குபற்றும் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாகத் தீர்மானமொன்றை இயற்றித்தருமாறு சுதர்சன நாச்சியப்பனால் கோரப்பட்டது.

அதற்கமைய அனைத்துக் கட்சிகளின் கருத்தையும் உள்வாங்கி தீர்வொன்றை வரையும் பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பிண் சுமந்திரனிடமும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடமும் விடப்பட்டது. அதன்படி வரையப்பட்ட தீர்மானம் சுதர்சன நாச்சியப்பனால் பரிசீலிக்கப்பட்டபோது, தமது நாடாளுமன்றத்துக்கு கொண்டுசெல்லக் கூடியவகையில் தீர்மானத்தில் உள்ள 'சுயநிர்ணயம்' என்கின்ற பதத்தை மாத்திரம் மாற்றித் தருமாறு அவர் கேட்டிருந்தார்.

அதனையடுத்து கட்சிகளுக்கிடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது புளொட் அமைப்பினராகிய நாம் தனிக் கட்சியாக இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு பங்குபற்றியிருந்தாலும்கூட நாம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டு வருவதன் அடிப்படையில் இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டையே நாமும் கொண்டிருப்போமென எமது பிரதிநிதிகளால் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடம் அக்கூட்டத்தில் பகிரங்கமாகவே கூறப்பட்டது.

### புளொட் பொறுப்பு அல்ல

இறுதியில் அனைத்துக் கட்சிகளும் ஒரு பொதுநிலைப்பாட்டிற்கு வர முடியாமற்போன காரணத்தினால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பொதுத் தீர்மானமொன்றை சுதர்சன நாச்சியப்பனிடம் கையளிக்க முடியாமல் போனது. இதற்குப் புளொட் அமைப்பு எவ்வகையிலும் பொறுப்பாகாது என்பதைப் பகிரங்கமாகத் தெரியப்படுத்து கிறோம்.

தேசியம், சுயநிர்ணயம் ஆகியவற்றை முன்னிறுத்தியே எமது அமைப்பு 70களின் கடைக்கூறுகளில் உருவாக்கப் பட்டது. சுயநிர்ணயம், தேசியம் என்கின்ற சொல்லாடல்கள் எமக்குப் புதியனவையும் அல்ல, வேறு எவரேனும் கூறி அதன் அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டியவையும் அல்ல. தவிரவும், தமிழ் இனத்தின் தேசியம், சுய நிர்ணயம் தொடர்பாக எம்மிடம் எந்தவித விட்டுக்கொடுப்புகளோ அல்லது மாற்றுக்கருத்துகளோ ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக இவையே எமது அடிப்படைத் தீர்வுக்கான மூலோபாயமாகக் கருதி நாங்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம்.

இந்த நிலைப்பாட்டையே 1985இல் நடந்த திம்பு பேச்சுகள், 2009 நவம்பரில் சூரிச்சில் நடைபெற்ற அனைத்து சிறுபான்மை இனக்கட்சிகளின் மாநாடு உள்ளிட்ட தீர்வு தொடர்பான அனைத்து கலந்துரையாடல்களிலும் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தீர்க்கமாகக் கூற விரும்புகின்றோம்.

### திரிபுபடுத்தல் வேண்டாம்

மேலும் தமிழ் சிவில் சமூகத்தினர் எனக் கையெழுத்திட்டுள்ள எவரேனும் புதுடில்லி மாநாட்டில் பங்கேற்றவர்களல்லர். அத்துடன், புதுடில்லியில் நடந்தவை பற்றி எமது அமைப்பிடம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கருத்துக்கேட்டவர்களுமல்லர். இந்நிலையில், தான்தோன்றித்தனமாகவோ அல்லது சிலரின் தூண்டுதலாலோ எமது அமைப்பின் நிலைப்பாடு தொடர்பாகத் தவறான கருத்துகள் குறிப்பிடப்பட்டிருப்பதைச்சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நிகழ்வுகளைத் திரிபுபடுத்தும் இவ்வாறான செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேலும், தமிழ் மக்களின் ஒற்றுமை ஒன்றே விடிவை நோக்கிய பயணத்தைப் பலப்படுத்தும் என்ற நம்பிக்கையுடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே தீர்வு விடயத்தில் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்துடன் செயற்படும்போது மட்டுமே தேசியம், சுயநிர்ணயம் என்பவை சாத்தியப்பாடுள்ளவையாகும். இதனை மனதிலிருத்தி பொது அமைப்புகளும், புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் ஒன்றுபடுத்த முயல வேண்டுமேயொழிய தற்போது காணப்படுகின்ற ஒற்றுமையைப் பலவீனப்படுத்தும் வகையிலான கருத்துகளை வெளிப்படுத்துவது அனைத்து வகையிலும் நலிந்து போயுள்ள எமது தமிழ்ச் சமூகத்துக்கு எந்த வகையிலும் உதவி செய்யாது என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.(ஒ-சி)


# நீங்கா நினைவில் ஓராண்டு....



## விஜயகுமார் சரோஜினிதேவி

| மனதில் மகிழ்வெழ | மனதில் இடிவிழ |
| --- | --- |
| 24.05.1956 | 01.01.2011 |

சோலைக் குயிலுந்தன் பார் விட்ட பயணத்தில்
நொருங்கிப் போனதெம் மனது
எம் உணர்வில் பூத்த உதிரக் கொடியே!
எம் மனங்களில் நீ....
உதிராத மலராய் இருக்கின்றாய்
உயர்த்தி வைத்த இமயத்தின் பிறப்பே!
உன்னால் நாம் உயர்வுகள் கண்டோம்
எம்முயிர் உள்ளவரை.....
உனக்கிங்கு இறப்பென்பதில்லை
மனங்களில் நீ வாழுவாய்.

நாவலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(சி/7000)(2-6-7)

### கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்

# மூதூர், கிண்ணியா கல்வி வலயங்களுக்கு திருமணமாகாத ஆசிரியர்கள் மாற்றம்

திருகோணமலை,டிசெ.21

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின்போது மூதூர், கிண்ணியா கல்வி வலயங்களுக்கு திருமணமாகாத ஆசிரிய, ஆசிரியைகளை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்கு கல்விமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ. புஷ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் சமமின்மையை நீக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள ஆசிரியர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்.

வெளிவலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் கூடுதலாக பெண் ஆசிரியர்கள் உள்ளடங்குகின்றனர். இவர்கள் கல்வி அமைச்சுக்கு மேன் முறையீடு செய்துள்ளனர். இவர்களின் மேன்முறையீடுகள் சாதாரண முறையில் பரிசீலிக்கப்படுகின்றன.

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் சில கல்வி வலயங்கள் கவனத்தில் எடுக்காமை காரணமாக கூடுதலான பெண் ஆசிரியைகள் இந்த இடமாற்றத்துக்கு உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலைமை ஏற்படக் காரணமான கல்வி வலயப் பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டு இடமாற்றப் பட்டியல்கள் சீர் செய்யப்படுகின்றன.

பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள், நோய் வாய்ப்பட்டுள்ளோர், குடும்ப தாய்மார்கள் ஆகியோர் மூதூர், கிண்ணியா போன்ற கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவது தவிர்க்கப்பட்டு அவர்களது இடத்திற்கு திருமணமாகாத ஆசிரியைகள், ஆசிரியர்கள் அனுப்பிவைக்கப்படுவர்- என்றார். (ச)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

அம்பாறை,டிசெ.21

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பெரிய உல்லை பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த நபரொருவரை நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஏ.எல்.எம். ஹில்மி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொத்துவில் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஏ.எல்.எம். ஹில்மி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே, நீதிவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து இவர் கடந்த ஞாயிற்றுக்கிமை கைது செய்யப்பட்டதுடன், 10 கிராம் கஞ்சாவும் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. (ச)

## ரூ.37 மில்லியன் செலவில் வீதி அபிவிருத்தி

காத்தான்குடி, டிசெ.21

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜெய்க்கா வேலைத்திட்டத்தின் கீழ் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 37.1 மில்லியன் ரூபா செலவில் ஐந்து வீதிகளை அபிவிருத்தி செய்யும் பெயர்ப் பலகை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் கே.பி.எஸ். ஹமீட் தலைமையில் இடம் பெற்றது. (ச)



திருகோணமலையில் பெய்துவரும் பெருமழை காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதனால் மக்கள் பெரும் சிரமம்.

## ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் ஊவா பாடசாலைகள் உள்வாங்கல்

### முஸ்லிம் கல்வி அபிவிருத்தி மையம் தெரிவிப்பு

அரசின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் மூன்று பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன என்று முஸ்லிம் கல்வி அபிவிருத்தி மையம் தெரிவித்துள்ளது.

அரசின் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் மூன்று முஸ்லிம் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் இதற்கு முஸ்லிம் கல்வி அபிவிருத்தி மையம் அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமைப்பின் பொதுச் செயலாளர் ஹஸன் ஹசனார் தெரிவித்தார்.

பின்தங்கிய மொனராகலை மாவட்டத்தில் இரு முஸ்லிம் பாடசாலைகளும், பதுளை மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் பாடசாலையும் உள்வாங்கப்பட்டு எதிர்வரும் 2013ஆம் ஆண்டுக்குள் பூரணமாக அபிவிருத்தி செய்ய எல்லா ஏற்பாடுகளையும் கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது என்று முஸ்லிம் கல்வி அபிவிருத்தி மையத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## நிந்தவூர் பிரதேசத்தில் மர நடுகைத் திட்டம்

அம்பாறை, டிசெ.21

நிந்தவூர்ப் பிரதேசத்தில் பசுமை தரும் மர நடுகைத் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நிந்தவூர்ப் பிரதேசத்தை அழகுபடுத்தவும், பிரதேசத்தின் முக்கிய பகுதிகள் உட்பட கடற்கரை வீதிகளில் பசுமைச் சூழலை உருவாக்கவுமே இந்த பசுமை மர நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர், தமது முன் மாதிரி செயற்றிட்டமாக இதனை நடைமுறைப் படுத்த முன்வந்துள்ளதுடன், இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், முதற்கட்டமாக ஆயிரம் பசுமைதரும் மரக் கன்றுகளை நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் தாஹிர் தெரிவித்தார்.

நடப்படும் பசுமை மரக் கன்றுகளைப் பாதுகாப்பதற்கான கூடுகள், மற்றும் பராமரிப்பு தொடர்பில் நிந்தவூர்ப் பிரதேச வர்த்தக சமூகத்தினரதும், பொதுமக்களினதும் ஆதரவும் பெறப்படவுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தைப் பசுமையும், செழிப்புமிக்க பிரதேசமாக காலக் கிரமத்தில் மாற்றுவதற்கான இந்தப் பசுமை மர நடுகைத் திட்டம், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-30)

## மக்களுக்கான தேவையை முன்னிலைப்படுத்தி வரவு-செலவுத் திட்டம் அமைய வேண்டும்

### கல்முனை மாநகர பிரதி முதல்வர் கூறுகிறார்

அம்பாறை, டிசெ.21

கல்முனை மாநகரசபைப் பிரிவில் வாழும் மக்களுக்கான தேவைகளை முன்னுரிமைப்படுத்தியே 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் அமைய வேண்டும். இவ்வாறு கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் முஹம்மட் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைவு தொடர்பாக மாநகர சபை உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான விசேட சபைக் கூட்டத்தில் ஆலோசனைகளைத் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நமது சபையின் புதிய வரவு செலவுத் திட்டம் தொடர்பாக நாம் ஆலோசனைகளை முன்மொழிவதற்காக இந்த விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும்.

ஏறத்தாள 174 மில்லியனை மொத்த வருமானமாக இந்த வரவு- செலவுத் திட்டம் பொழிவு கொண்டுள்ளது. உண்மையில் நம் புதிய சபையின் வரவு -செலவுத் திட்டம் அனைவருக்கும் பெருமை தரும் வகையிலேயே அமையும்.

இது வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும், வரப்பிரசாதமாகவும் கல்முனை மாநகரம் வாழ் மக்களுக்கு அமையுமென நம்புகின்றோம். கடைசியாகக் கிடைக்கும் பணம் மற்றும் மொத்த சபை நிதிவளம் தான் கவனத்திற்கொள்ளப்பட்டு மக்கள் சேவையை முன்னெடுக்கலாம். எனவேதான் உள்ள நிதியை மையமாகக் கொண்டே நமது சேவைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இதற்கமைய நிரந்தர பயன் தரத்தக்க திட்டங்களையே நாம் முன்வைக்க வேண்டும். இந்த வகையில் வெள்ளப்பாதிப்பு, குப்பைகளை அகற்றல் போன்ற இரு பெரும் சவால்கள் நமது சபைக்கு உள்ளன. குறைந்தது நான்கு வருடங்களுக்காவது மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதே பெரும் சேவையாகும். பிரதேச சபையாகவிருந்து மாநகர சபையாக்கப்பட்ட நமது பிரதேச மக்கள் மத்தியில் மாநகர சபை சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சில பிண்ணடைவுகள் ஏற்படலாம். எனினும் மாநகரசபைச் சூழலுக்குள் பழக்கப்பட்ட நிலைக்கு மக்களைக் கொண்டுவர கால அவகாசமே தேவையாகும் - என்றார்.(ச-30)

## பெண்கள் பாடசாலையாக அல்-ஹம்றா வித்தியாலயம்

கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரிவைச் சேர்ந்த மருதமுனைப் பிரதேசத்தில் தனியான பெண்கள் பாடசாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பில், இருந்து வந்த இழுபறி நிலைக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

இதற்கமைய மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தை அடுத்த மாதம் முதல் தனியான பெண்கள் பாடசாலையாக மாற்றுவதற்கு ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.என்.துல்கர் நயீம் தெரிவித்தார்.

நீண்ட காலமாக மருதமுனைப் பிரதேசத்தில் பெண்களுக்கான தனியான பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல்வேறு அமைப்புகளாலும் விடுக்கப்பட்டு வந்ததுடன் இழுபறி நிலையிலும் இருந்து வந்தது. இதே வேளை பெண்கள் பாடசாலை மாற்றம் காணவிருக்கும் இந்தப் பாடசாலையை 1சி பாடசாலையாகத் (1C)தரமுயர்த்தவும், ஜி.சீ.ஈ. உயர் தர கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவுகளை இங்கு ஆரம்பிக்கவும், தாம் வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன்ஆவன செய்வதாகவும் மாகாணசபை உறுப்பினர் துல்கர் நயீம் உறுதியளித்தார். பாடசாலைக்கு மேலும் வளங்களைப் பெற்றுத்தரவும் தாம் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார் (ச-30)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
எதிலும் தைரியம், துணிச்சலுடன் செயற்படும் நாள். நண்பர்களுடன் சேர்ந்து சில நல்ல காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். தாய் வழி உறவினர்களால் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். ஓய்வாக இருக்க நினைத் தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடி களைச் சந்திக்கலாம். பொறுப்பு, வேலைப்பளு கூடும் நாள்.



**இடபம்:**
எதிலும் தர்மம், நியாயமாக நடந்து கொள்ள முற் படுவீர்கள். தொல்லை கொடுத்த சிலர் தோள் கொடுக்க முன்வருவர். கடந்த காலத்தில் உதவி செய்த உறவினர் ஒருவர் இப்போது உங்களிடம் பதில் உதவியை எதிர்பார்ப்பர். கடும் அலைச்சலை கொடுக்கும் என்று, நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். ஆதாயகரமான நாள்



**மிதுனம்:**
எதிர்பாராத உதவிகளைப் பெறலாம். அவசரப்பட்டுச் சில தவறுகளைச் செய்துவிட்டு அதை நினைத்து பெரிய அளவில் பயப்படுவீர்கள். வியாபாரிகள் வாடிக் கையாளர்களிடம் கடுமையாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள்.



**கடகம்:**
பயணங்கள் மகிழ்ச்சி, உற்சாகம் தருவதாக அமைய லாம். எதிர்காலத் திட்டங்கள் பற்றி சக ஊழியர்களுடன் கலந்து ஆலோசிப்பீர்கள். சோர்வாக இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் பரபரப்பாக செயற்படுவீர்கள். உற வினர் ஒருவர் தங்களின் வேலை ஒன்றை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். சில வேலைகளில் தடை ஏற்படலாம்.



**சிங்கம்:**
திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும் நாள். செல வுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள். நேற்று எதிர்பாராத விதமாகத் தடைப்பட்ட வேலை ஒன்று இன்று வெற்றிகரமாக முடி வுக்கு வரும். நண்பர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். சிலரிடம் மனம் விட்டுப் பேசும் வாய்ப்பு கிடைக்கும். பணவரவு உண்டு.



**கன்னி:**
சிறிய விடயத்துக்காக குடும்ப உறுப்பினர்களிடம் கோபித்துக் கொள்ளலாம். நம்பிக்கைக்கு உரியவர் என்று நினைத்த ஒருவர் உங்களைக் கைவிடலாம். நீங் கள் பெருந்தன்மையாக செயற் பட்டாலும், சிலர் சுய நலமாகச் செயற்படுவது கண்டு கோபம் அடையலாம். பழகிய சிலரின் வார்த்தைகளை மீற முடியாமல் கட்டுப்பட்டு நடக்கலாம்.



**துலாம்:**
மதிப்பு, கௌரவம் மேம்படும். முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும். சில நாள்களாக வராமல் இழுத் தடித்த பணவரவு ஒன்று இன்று எளிதாகக் கிடைக்கும். செலவில்லாமல் சில வேலைகளை முடிப்பீர்கள். பெண்கள் வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.



**விருச்சிகம்:**
தொழில் ரீதியாக சிலர் விமர்சிப்பதால் எரிச்சல் அடை யலாம். விரோதமாகச் செயற்படுவோரை பழிவாங் கும் எண்ணம் அதிகரிக்கும். உங்களுக்காக மற்றொரு வர் செலவு செய்யலாம். பிரியமான ஒருவர் உங்களு டன் பேச முற்பட்டும், கடும் வேலைப்பளு காரணமாக நீண்ட நேரம் பேச முடியாமல் தவிக்கலாம். மறதியால் அவதியுண்டு.



**தனுசு:**
புத்துணர்ச்சியுடனும், உற்சாகமாகவும் செயற்படுவீர் கள். உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். கடந்த காலத்தில் உங்களைப் பழிவாங்கிய ஒருவர், சிக்கலில் மாட்டிக் கொண்டது கண்டு சந்தோஷம் அடைவீர் கள். உடல் உபாதைகள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.



**மகரம்:**
கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டு வீர்கள். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சில ரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். மாமன், மைத்துனர்கள் வருகை யால் வீட்டில் கல கலப்பு, சந் தோஷம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனு கூலமாக முடிவுக்கு வரும். உத்வேகம் கூடும் நாள்.



**கும்பம்:**
நண்பர் ஒருவருக்காக நீங்கள் மற்றொருவரிடம் உதவிகள் கேட்கலாம். உங்களின் செயற்களால் உங்கள் வேலைகள் மட்டுமின்றி, மற்றொருவரின் வேலையும் தடைப்படலாம். விருந்தினர்கள் வருகை யால் வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சோம்பல் கூடும்.



**மீனம்:**
கசப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த காரியம் ஒன்றில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தங்கள் பிரச்சினைகளைச் சொல்லி தொந்தரவு கொடுக்கலாம்.

# தமிழ் மக்க[ள்] உரிமைகளை தாரைவார்த்[துக்] கொடுத்துவி[...]

**கேள்வி:- அரசு - கூட்டமைப்புப் பேச்சால் ஒரு பயனும் இல்லை என்று காரசாரமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் என்னதான் செய்கிறீர்கள்?**

பதில்:- கடந்த ஒரு வருடமாக அரசுடன் நாம் பேச்சு நடத்தியிருக்கிறோம். பேச்சு மூலமாக நியாயமான ஓர் அரசியல் தீர்வை - நிலைத்து நிற்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வை - பெறுவதுதான் எமது நோக்கம். அத்தகைய ஓர் அரசியல் தீர்வு, எமது மக்களுக்கு அத்தியாவசியமானது; இன்றைய சூழலில் அது மிக அவசியம் என்றே நாம் கருதுகிறோம்.

நாங்கள் மிகவும் விசுவாசமாகவே பேச்சில் ஈடுபடுகிறோம். ஒளிவுமறைவின்றி எமது நிலைப்பாட்டை மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் அரசிடம் முன்வைக்கிறோம். ஆனால், நீண்ட காலமாக அரசின் நடவடிக்கைகள் எமக்கு நம்பிக்கை தருவனவாக அமையவில்லை. அவர்கள் பேச்சில் ஈடுபட்டு வருவது உண்மை. ஆனால், பேச்சை முன்னகர்த்தக்கூடிய வகையில் அவர்களது செயற்பாடுகள் அமையவில்லை.

பேசவேண்டிய விடயங்கள் சம்பந்தமாக தற்போது, அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் பேச்சில் ஈடுபடுகிறோம். அதிலும் நாங்கள் திருப்தியடைந்திருக்கிறோம் என்று கூறமுடியாது. ஆனால், பேச்சின் மூலமாக ஒரு தீர்வைக் காணவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதனால் தற்போதும் பேச்சு தொடர்கின்றது. எங்களது முயற்சி தொடரும்.

இறுதி முடிவு கூடுதலாக அரசின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. ஆனால், எமது மக்களுக்கு ஒரு நியாயமான, நீதியான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருப்போம்.

**கே:- பேச்சில் அரசின் போக்கு நம்பிக்கை தருவதாக இல்லாததற்கு என்ன காரணம்?**

ப:- காரணம் என்னவென்பதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், பேச்சு மூலம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு காணப்படவேண்டும் என்றால் அதற்கான விருப்பம் அவர்களது உள்ளத்தின் அடி ஆழத்தில் இருந்து வரவேண்டும். அது விடயம் சம்பந்தமாக அவர்களது சிந்தனை தெளிவாக இருக்கவேண்டும். காரணங்களைத் தேடிப் பிடிக்க நான் எத்தனிக்க மாட்டேன்.

நாங்கள் கூறவேண்டியது என்னவென்றால் - பேச்சு மூலமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமாக இருந்தால் அரசின் தற்போதைய போக்கில் நிச்சயமாக, முன்னேற்றகரமான மாற்றம் தேவை என்பதைத்தான்.

**கே:- வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற விடயங்களே இப்போது பேச்சுக்கு முட்டுக்கட்டை என்று தெரிகிறது. உங்கள் தரப்போ அல்லது அரசு தரப்போ இந்த விடயங்களில் விட்டுக்கொடுப்பைச் செய்யும் நிலைமை இருக்கிறதா?**

ப:- பேச்சின் மூலமாக தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் என்று அடையாளம் காணப்பட்டவை இவை மூன்று மாத்திரமல்ல. வேறு பல விடயங்களும் இருக்கின்றன. ஆனால், டிசெம்பர் மாத ஆரம்பத்தில் அரச தரப்பால் விசேடமாக இந்த மூன்று விடயங்களையும் குறிப்பிட்டு இந்த விடயங்கள் சம்பந்தமாக தங்களுக்கு சில நெருக்கடிகள் இருப்பதாக எம்மிடம் கூறினார்கள். அந்த நெருக்கடிகளுக்கு என்ன காரணம் என்பதை அவர்கள் எமக்குக் கூறவில்லை.

**அடிப்படை விடயங்களில் நாம் மிகவும் உறுதியாக இருப்போம். அதைப் பற்றி சந்தேகத்துக்கே இடமில்லை; தேவையுமில்லை. எமது மக்களுடைய உரிமைகளை நாம் தாரை வார்த்துக் கொடுக்கமாட்டோம். அதைச் செய்வதற்கு எமக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை. ஆனால், இரு தரப்பினரும் பேசியே ஒரு தீர்வைக் காணவேண்டி இருக்கிறது. அதையும் நாங்கள் தெளிவாகப் புரிந்திருக்கின்றோம்.**

அரசு தெரிவித்த இந்த மூன்று விடயங்கள் சம்பந்தமாகவும், பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் தொடக்கம், அதற்கு பிறகு நடைபெற்ற பேச்சுகளில் காணப்பட்ட இணக்கங்கள் வரை அவர்களுக்கு எடுத்து விளக்கினோம்.

என்னென்ன காரணங்களுக்காக இந்த மூன்று விடயங்களிலும் முட்டுக்கட்டை இருப்பதாக நீங்கள் கூறுவீர்களாக இருந்தால், அந்தக் காரணங்களைப் பற்றி பேசலாம் என்று அரச தரப்பினிடம் தெரிவித்திருக்கிறோம். அதில் ஒரு விடயமான காணி விடயம் சம்பந்தமாக நாம் தற்போது தொடர்ந்து பேசுகின்றோம். அடிப்படை விடயங்களில் நாம் மிகவும் உறுதியாக இருப்போம். அதைப்பற்றி எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமுமில்லை; தேவையுமில்லை. எமது



உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி

மக்களுடைய உரிமைகளை நாம் தாரைவார்த்துக் கொடுக்க மாட்டோம். அதை செய்வதற்கு எமக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை.

ஆனால், இரு தரப்பினரும் பேசியே ஒரு தீர்வைக் காணவேண்டி இருக்கிறது. அதையும் நாங்கள் தெளிவாகப் புரிந்திருக்கின்றோம். ஆனபடியால் எந்த விடயங்களாக இருந்தாலும் எங்களுடைய போக்கு நிதானமானதாகத் தான் இருக்கும்.

**கே:- நீதித்துறையின் ஊடாக அதாவது நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரமே வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் சில ஏற்பாடுகளை, திருத்தங்களைச் செய்வதன் மூலம் வடக்கு, கிழக்கை மீண்டும் இணைக்கலாம் என்று முன்னாள் நீதியரசர் அண்மையில் உதயனிடம் தெரிவித்திருந்தார். இதைப்பற்றி பேச்சு மேசையில் நீங்கள் ஏதாவது விவாதித்திருக்கிறீர்களா?**

ப:- இதைப் பற்றி நாம் தெளிவாக பேசியிருக்கின்றோம். வடக்கு, கிழக்கு இணைப்பு எமது கடும் முயற்சியின் காரணமாக - அதாவது, இந்திய அரசினூடாக இலங்கை அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள், விசேடமாக மூவர், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் நான் ஆகியோர் பேசியே இந்த இணைப்பை ஏற்படுத்தினோம்.

எங்களுடைய கடும் முயற்சியின் காரணமாகத்தான் வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்பட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்பட்டது. இந்தப் பிரதேசங்களில் சரித்திர ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள், வாழ்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. அது மிகவும் நியாயமான நிலைப்பாடு. அதை எவரும் மறுக்கமுடியாது.

1827ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் அரைவீதமே வாழ்ந்தனர். 1881ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்த வீதம் நான்கு. 1921 ஆம் ஆண்டும் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்த வீதம் நான்கு. நாடு சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த சிங்கள மக்களின் வீதம் ஒன்பது.

1957ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்த வீதம் 13. 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் வீதம் 19. இறுதியாக 1981 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் எடுக்கப்பட்ட சனத்தொகை புள்ளிவிவரங்களின்படி கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த சிங்கள மக்களின் வீதம் 25. எனவே, தமிழ்பேசும் மக்கள் அந்தப் பகுதியில் சரித்திர ரீதியில் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தவர்கள் என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது.

இந்த உண்மையைப் புறந்தள்ளிவிட்டு மக்கள் விடு

# …களின் …ளை …த்து …விடமாட்டோம்

1

செவ்வி கண்டவர்:
ஆர்.சிவராஜா

## அதற்கான அதிகாரம் தனக்கில்லை என்கிறார் இரா. சம்பந்தன்

தலை முன்னணியினர் என்று கூறுகின்ற ஜே.வி.பியினர் மூன்றுபேர் போய் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த மாகாணங்கள் இணைக்கப்பட்டு 18 வருடங்களுக்குப் பிறகு தங்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்று கூறினர்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக கூறும் ஒரு வழக்கை சாதாரணமாக 30 நாள்களுக்குள்தான் தொடுக்க வேண்டும். ஆனால், அவர்கள் 18 வருடங்களுக்குப் பிறகு சென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

ஜே.ஆர்.ஜெயவர்தனா.... அவர்தான் இணைப்பை உருவாக்கியவர். ஜனாதிபதி பிரேமதாஸ, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் அதனை அங்கீகரித்து தொடர்ந்தும் இணைத்தே வைத்திருந்தனர்.

18 வருடங்களாக நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு வருட வரவு-செலவுத் திட்டத்திலும் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு என்ற பிராந்தியத்துக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதாவது, நாட்டின் நிர்வாக மற்றும் சட்டத் துறைகளின் உச்ச அதிகாரங்களில் இருந்தவர்கள் வடக்கு, கிழக்கு இணைப்பை 18 வருடங்களாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ஆனால், மூன்று ஜே.வி.பியினர் சென்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தபோது சரித்திர ரீதியாக அந்தப் பிராந்தியத்தில் வாழ்ந்த மூன்று தமிழ் மக்கள் அந்த வழக்கில் தாங்கள் தலையிடுவதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கேட்டார்கள். அது நிராகரிக்கப்பட்டது. அவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு இடமளிக்கப்படவில்லை.

நீதிமன்றத்தில் விசாரணை நடந்த தினம் நான் அறிந்த வகையில் வெளிநாட்டவர்கள், விசேடமாக வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் நீதிமன்றத்திற்கு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தகைய ஒரு சூழலில்தான் வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்தன இணைப்பை ஏற்படுத்திய விதத்தில் நடைமுறைத் தவறு இருப்பதாகக் கூறியே அந்த இணைப்பு துண்டிக்கப்பட்டது. அந்த மாகாணங்களை மீண்டும் இணைக்க முடியாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவில்லை. இருந்தாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எங்களுடைய கருத்தின்படி அது நியாயப்படுத்தக் கூடிய ஒரு தீர்ப்பல்ல. அதை நாங்கள் நாடாளுமன்றத்தில் மிகவும் தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். இதுவிடயம் சம்பந்தமாக, தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து அந்த நடைமுறையான தவறை மாற்றுவதற்கு, திருத்துவதற்கு ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருமாறு கேட்டிருக்கிறேன். என்னுடைய கோரிக்கையை எழுத்து மூலமாகவும் கொடுத்திருக்கிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை - ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை - அவ்விதமான பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதனை தாம் ஆதரிக்கத் தயாராக இருக்கிறார் என்று கூறியிருக்கிறார். ஆனபடியால் வடக்கு, கிழக்கு துண்டிக்கப்பட்டிருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுதான் நிலைமை. அது துண்டிக்கப்பட்டதாக இருக்க முடியாது என்பதே எமது கருத்து.

***கே:- உங்களின் கருத்துப்படி வடக்கு, கிழக்கு இணைப்பு இப்போதும் சாத்தியமானதுதான். தற்போதைய பேச்சின் ஊடாக அதனைச் சாதிக்கலாம் என்று கருதுகிறீர்களா?***

ப:- நான் ஒன்றையும் பற்றி எதிர்வுகூறப்போவதில்லை. இதற்கு மேலதிகமாக ஒன்றும் நான் சொல்லமாட்டேன். அது என்னவிதமாக நடைபெறும் என்பதைப் பேச்சின்போது ஆராய்வோம். பேச்சை முறிக்கக்கூடிய வகையில் நாங்கள் உங்களுக்குப் பதில் தரமுடியாது. நாங்கள் எதில் உறுதியாக இருப்போமென்பதையே உங்களுக்குச் சொல்ல முடியும். ஏனென்றால், பேச்சு மூலமாக தாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு கிடைக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்காகத்தான் மக்கள் எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். அந்தக் கடமையை நாங்கள் முறையாகச் செய்யவேண்டும். ஆனபடியால் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற அடிப்படையில் நான் பேசமாட்டேன். நாங்கள் எதில் உறுதியாக இருப்போம் என்பதையே நாங்கள் சொல்கிறோம். பேச்சு நடக்கும்.

***கே:- இல்லை. நான் முன்னாள் நீதியரசரை செவ்வி கண்டபோது வடக்கு, கிழக்கை இப்போதும் இணைக்கலாம் என்று அவர் கூறியிருந்தார். அந்த சாத்தியப்பாடுபற்றிதான் கேட்கிறேன்?***

ப:- நான் கூறியதன் பிரகாரம், ஜே.ஆர்.ஜெயவர்தன இணைத்த நடைமுறையில் ஒரு தவறு இருப்பதாகக் கூறியே வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டது. அந்த நடைமுறைத் தவறுகூட இல்லையென்பதுதான் எமது கருத்து.

***கே:- அந்த நடைமுறைத் தவறு என்ன? சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படாததா?***

ப:- அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ்தான் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. மாகாண சபைச் சட்டமென்று ஒரு சட்டமும், அந்த நேரத்தில் உருவாக்கப்பட்டது. மாகாண சபை சட்டத்தின் கீழ்தான் இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் இணையலாம் என்ற ஏற்பாடு கொண்டுவரப்பட்டது.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரை அவ்விதமாக இணைவதற்கு அந்த மாகாணசபைச் சட்டத்தில் ஒரு விசேடமான நிபந்தனையும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இரு மாகாணங்களும் இணைக்கப்படும்போது ஆயுதமேந்தியவர்கள் இருக்கக்கூடாது, போர் முடிவுக்கு வந்திருக்கவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

தென்மாகாணங்களைப் பொறுத்தவரை அவ்விதமான நிபந்தனைகள் இருக்கவில்லை. அன்றைக்கு ஜே.வி.பியினரும் ஆயுதமேந்தி தென்மாகாணத்தில் ஒரு கிளர்ச்சியை நடத்திக்கொண்டிருந்தனர். அப்படி இருந்தபோதும் தென்மாகாணமும், மேல்மாகாணமும் விரும்பி இருந்தால் இணைந்திருக்கலாம். ஏனென்றால், அவர்களுக்கு நிபந்தனை இருக்கவில்லை.

இது வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை. அது தவறு. அது சட்டத்தின் மூலமாக ஒரு பிராந்தியத்துக்கு, ஒரு மக்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை. உண்மையில் அந்த விதமான நிபந்தனை முழு நாட்டுக்கும் இருந்திருக்க வேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்தன வடக்கு - கிழக்கை இணைப்பதற்குச் சிந்தித்தபோது இந்த நிபந்தனை அவருக்கு ஒரு தடையாக இருந்தது. ஏனெனில், அந்த நேரத்திலே தமீழீழ விடுதலைப் புலிகள் ஆயுதமேந்தி இந்திய அமைதிப் படையுடன் மோதிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய கையில் ஆயுதம் இருந்தது. 1987ஆம் ஆண்டு பிற்பகுதியிலும், 1988ஆம் ஆண்டு முற்பகுதியிலும் இது நடந்தது.

> **இந்த நாட்டின் நிர்வாக மற்றும் நீதி துறைகளின் அதியுச்ச பதவிகளில் இருந்தவர்கள் 18 ஆண்டுகளாக ஏற்றுக் கொண்டிருந்த வடக்கு, கிழக்கு இணைப்பை மூன்றே மூன்று ஜே.வி.பியினர் எதிர்த்ததும் நீதிமன்றம் பிரித்ததை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம்.**

அப்போது அந்தச் சட்டத்தை சமாளிப்பதற்காக அல்லது அந்த சட்டத்தை கையாள்வதற்காக அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஓர் ஒழுங்கு செய்யப்பட்டது.

சாதாரண சட்டத்தை மீறக்கூடிய வகையில் சில ஒழுங்குகளை செய்வதற்கு ஜனாதிபதி ஒருவருக்கு உரித்து இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆயுதம் ஏந்தியவர்கள் இருந்தாலும்கூட, ஒரு பக்கத்தில் மோதல் நடந்து கொண்டிருந்தாலும்கூட அதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததால், வடக்கு கிழக்கு இணைப்பு நடைபெறலாம் என்ற விதியை அவர் கொண்டு வந்தார்.

அந்த நேரத்தில் இந்திய அமைதிப்படை, தமீழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களைவதற்கு, அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது. எனவே ஜே.ஆர். தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி இணைப்பு ஏற்படுத்தலாம் என்றார். ஒரு சாதாரண சட்டத்தை ஜனாதிபதி ஒரு விதியின் மூலமாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் மாற்றியமைக்கலாம். அரசமைப்பில் உள்ளதை மாற்ற முடியாது. ஆனால், இது சட்டத்தில் இருந்த விடயம். மாகாணசபைச் சட்டத்தில் இது இருந்தபடியால், ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகால ஏற்பாட்டின் கீழ் இணைப்பைச் செய்தார்.

ஜே.ஆர். அப்படிச் செய்திருக்கக்கூடாது, அது தவறானது என்பதுதான் உயர்நீதிமன்ற நீதியரசருடைய வாதம். அதன் காரணமாகத்தான் அவர்கள் வடக்கு, கிழக்கு இணைப்பை துண்டித்தனர். இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது. *(நாளையும் வரும்)*



## பிரச்சினையற்ற வாழ்க்கை சாத்தியமா?



''அவனுக்கு என்ன கவலை? பிறந்தால் அவனை மாதிரி பிறக்க வேண்டும்.'' இப்படி பிறர் சௌக்கியமா இருப்பதாக நினைத்துப் பொருமுபவர்கள் பலர். தன்னைத் தவிர மற்றவர் சௌக்கியமாக இருப்பதாகப் புலம்புபவர்களுக்கு ஒரு வார்த்தை. நீங்கள் அவராக இருந்தால் தான் அவர் எவ்வளவு கஷ்டத்தில் இருக்கிறார் என்பதை உங்களால் அறிய முடியும்.

ராஜாதி ராஜாவாய் அயோத்தியை அரசாண்டு கொண்டிருந்த தசரதனுக்கு எல்லாம் இருந்தது. ஆனால் பிள்ளை இல்லையே என்கிற மனக்கவலை கறையான் மாதிரி மனதை அரித்துக் கொண்டிருந்தது. இப்படி, ஏதாவது ஒரு சோகத்தை, துயரத்தை, வருத்தத்தை மூட்டை கட்டிச் சுமக்கும் முட்டாள் சனங்கள் தாம் நாம்.

ஓர் அழகான கற்பனைக் கதை. பரம பக்தி உடைய ஓர் ஏழை விவசாயிக்கு கொஞ்சநாளாக மனஉழைச்சல்... வேதனை. சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த அவன் வாழ்க்கையில் ஒரு பிரச்சினை வந்து ஒட்டிக் கொண்டது. அவனுக்கு வாய்த்த மனைவிக்கு அடிக்கடி ஏதாவது வியாதி வந்து கொண்டே இருந்தது. மருத்துவர்களோ, ''மரணம் நேராது; கவலை வேண்டாம்'' என்றார்கள். என்றாலும் அடிக்கடி மருத்துவம், செலவு, மனைவி உடல் நலக்குறைவால் வீட்டு வேலை நடக்காமை' என்கின்ற பிரச்சினைகள் இருந்து கொண்டே இருந்தது. உடல் மெலிந்து மனம் வாடி மிகச் சோர்ந்து கடவுளிடம் முட்டி மோதி ''என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்... அந்தப் பண்ணையார் மாதிரி வைக்கக் கூடாதா? இந்தக் கடைக்காரர் வாழ்க்கை எனக்குக் கிடைக்கக் கூடாதா! நான் மிக அதிகமான துயரங்களோடு இருக்கிறேன். என்னுடைய துயரங்களை யாருக்காவது மாற்றிக் கொடுத்துவிட்டு அவரது துயரத்தையாவது எனக்குத் தரக் கூடாதா?'' என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்து வேண்டினான் விவசாயி.

பரமபக்தன் அழுது உறங்கிய பிறகு அன்று அவனது கனவிலே கடவுள் தோன்றி. ''மறுநாள் மாலைப் பொழுது சாய்வதற்குப் பத்து நிமிடம் முன்பு அந்த ஊரில் உள்ள கோயிலுக்கு எல்லோரும் வரவேண்டும்; வரும் போது அவரவர் கவலைகளையும் வருத்தங்களையும் பையில் போட்டு மூடையாகக் கட்டிக் கொண்டு வந்து கோயிலில் வைத்துவிட வேண்டும். சூரியன் மறைந்ததும் இருட்டான பிறகு கோயிலில் மணி அடிப்பார்கள். உடனே கையில் அகப்படுகிற ஏதாவது ஒரு மூடையை எடுத்துக் கொண்டு ஓடி வந்துவிட வேண்டும். இவர்கள் கவலை இவர்களை விட்டுப் போய்விடும். இவர்கள் எடுத்துக் கொண்டு வந்த கவலை இவர்களுக்கு வந்துவிடும். இப்படி ஓர் உத்தரவைப் போட்டிருந்தார்.

''ஆஹா... நம் கவலையைக் கோயிலில் போட்டு விட்டு பண்ணையார் கவலையை அல்லது ஜாலியான கடைக்காரர் கவலையைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்துவிட வேண்டும்'' என்கின்ற எண்ணத்தில் மறுநாள் பொழுது எப்போது சாயும் என்று காத்திருந்தான் விவசாயி. ஊர் முழுவதும் இதே பேச்சு. வானத்தில் ஓர் இடி இடித்தது. அசரீரியாக கடவுளின் உத்தரவு எல்லோருக்கும் கேட்டது. தனது கவலையை ஒரு துணிப் பையில் போட்டுக் கட்டி ''சனியன் ஒழிந்தது'' என்று பெரு மூச்சுவிட்ட படி கோயிலுக்கு ஓடினான் விவசாயி.

பிரமித்துப் போனான் விவசாயி. கோயிலுக்குள் பலர் பெரிய பெரிய மூடைகளைக் கொண்டு வந்திருந்தனர். பலர் தாங்களே தூக்க முடியாத கவலை மூடைகளை ஆள்களை வைத்துத் தூக்கிக் கொண்டு வந்து கோயிலுக்குள் போட்டனர். அங்கு வந்தவர்கள் கொணர்ந்த மூடைகளிலேயே சின்ன மூட்டை விவசாயி மூட்டைதான். பண்ணையார், கடைக்காரர் எல்லோரும் விவசாயின் மூடையையே வெறியோடு பார்த்தனர். தங்கள் பெரிய பெரிய கவலை மூட்டைகளை யார் தலையிலாவது கட்டி விட்டு விளக்கு அணைந்ததும், விவசாயி கொண்டு வந்த சின்ன மூடையுடன் ஓடப் பலர் தயாராக இருந்தனர். வெலவெலத்துப் போனான் விவசாயி.

''ஆஹா... விளக்கு அணைந்ததும் யாருடைய பெரிய மூட்டையாவது நம் கைக்குச் சிக்கி அத்தோடு வீட்டுக்குப் போனால் நம் கதி என்ன வாகும் என்று யோசித்தான். அதை ஓரிடத்தில் வைத்துவிட்டு அதையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். விளக்கு அணைந்ததும் அதை எடுத்துக்கொண்டு ஓடிவிடத் தீர்மானித்து விட்டான்.

ஓர் ஆச்சரியம்... விளக்கு அணைந்த பிறகு மணி அடித்ததும் வெளியில் ஓடிவந்த எல்லோரும் ஞாபகமாக அவரவர் மூடையையே தூக்கிக் கொண்டு வந்தனர். 'ஏன்' என்று கேட்டபோது. '' பழகிய பிரச்சினையே பரவாயில்லை. புதிதாக ஒரு பூதத்தைப் பிடித்துக் கொண்டு போய் அவஸ்தைப்படக் கூடாதே'' என்கிற ஞானம் தான் காரணம் என்கிறார்கள். எல்லோருக்கும் பிரச்சினை உண்டு. அதில் நமது பிரச்சினை எவ்வளவோ மேல்.

உதாரணத்துக்கு ஒன்று. ஒருவருக்குச் நீரிழிவு வியாதி பெரிய பிரச்சினை என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வியாதியை மூடை கட்டி கோயிலில் எறிந்துவிட்டு வேறொரு மூடையைத் தமக்கு என்று எடுத்துக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எடுத்த மூடையில் எயிட்ஸ் இருந்தால் என்ன ஆவது. அதற்குச் சக்கரை நோயே மேல் என்று அத்தோடு வாழ்ந்து பழகிக் கொண்டிருக்கலாம்.

சில பிரச்சினைகளைத் தீர்க்கவே முடியாது. அதனால் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு காலம் தள்ள வேண்டும். பிரச்சினைகள் அற்ற வாழ்க்கை என்பது முற்றிலும் சாத்தியம் இல்லை. எனவே சின்னச் சின்னப் பிரச்சின்னகளைப் பெரிய பெரிய பிரச்சினைகளாக ஆக்கிக் கொள்ளாது வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

**சுகி. சிவம்**

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திய வாராந்த நிகழ்வில் காரைநகர் கிழவன்காடு அற நெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை நிகழ்வில்
(எ–236)



# ஒருங்கிணைந்த சேவைகளை மக்களுக்கு வழங்க சமூக பராமரிப்பு நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன

## வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்

நாவற்குழி, டிசெ.21

உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைந்த சேவைகளை மக்களுக்கு வழங்க சமூக பராமரிப்பு நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன.

சமூக சேவைகள் அமைச்சின் நவீன சிந்தனையின் வெளிப்பாடாக உள்ள இந்த நிலையம் இன்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. பச்சிலைப் பள்ளி பிரதேச மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும் என வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பளை உதவி அரச அதிபர் பணிமனை வளாகத்தில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதியில் அமைக்கப்பட்ட சமூக பராமரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவிக்கையில்; நலிவுற்ற சமூகத்துக்குக் கைகொடுத்தல் எனும் குறிக்கோளுடன் எமது சமூக சேவைகள் திணைக்களம் இயங்கி வருகின்றது. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய வேறு திணைக்கள உத்தியோகத்தர்களும் கடமையாற்ற வேண்டியுள்ளது.

குழு நிலைக் கலந்துரையாடலின் மூலம் வறிய மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வு காண வேண்டிய நவீன உத்தியின் வெளிப்பாடாகவே இந்தச் சமூக பராமரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. பல உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைந்த சேவைகளை வறிய மக்களுக்கு வழங்க சமூக பராமரிப்பு நிலையங்கள் உதவுகின்றன.

சமூக சேவைகள் அமைச்சின் நவீன சிந்தனையின் வெளிப்பாடாக உள்ள இந்த நிலையம் இன்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்.

வறிய மக்கள் நலிவுற்ற மக்களுக்கான கொடுப்பனவுகள், சிறுவர் நன்னடத்தைச் சேவைகள், பெண்கள் தொடர்பான ஆலோசனைகள், சிறுவர் உரிமை மேம்பாட்டுக் கருத்துக்கள், உளவளத் துணைச் சேவைகள், முன்பிள்ளைப் பராயத்திலுள்ளோருக்கான உதவிகள் போன்றவற்றை இங்கு பெற முடியும்.

இங்கு நடைபெறும் குழு நிலைக் கலந்துரையாடல் மூலம் ஒருவரின் பல தேவைகள் இனங்கண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வழி ஏற்படுகிறது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் வடமாகாண தொழில்துறைத் திணைக்கள பணிப்பாளர் க.சிவகரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.
(எ-121)

# நோயாளர்கள் தமது நோய் தொடர்பாக அறிய கை கொடுக்கும் மருத்துவ நூல் வெளியீடுகள்

## டாக்டர் யமுனானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

நோயாளர்கள் தமது நோய் தொடர்பான தெரியாத விடயங்களை அறிந்து கொள்வதற்கு மருத்துவ நூல் வெளியீடுகள் கைகொடுக்கின்றன. இதன் மூலம் நோய் தொடர்பான விழிப்புணர்வு தானாகவே ஏற்படும் என யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் செ.சி. யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரன் எழுதிய ''நோய் நாடி நோய் முதல் நாடி'' எனும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நூல் வெளியீடு அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நூலின் வெளியீட்டுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:

தமிழ் மொழியைப் பயன்படுத்தி புற்று நோயாளர்களுக்கான பல்வேறு தகவல்களை இந்த நூல் கொண்டுள்ளது.

பொது மக்களுக்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வு கிடையாது. எனவே விழிப்புணர்வுகளை ஏற்படுத்த இந்த நூல் வெளியீடுகள் சாதகமாக அமையும்.

முக்கியமாக மருத்துவத் துறை சார்ந்த தாதியர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் நூலில் உள்வாங்கப்பட்டிருக்கும் தகவல்களைப் பெற்று நோயாளர்களுக்குவிளங்கப்படுத்தவேண்டும்.

அத்துடன் சமூக சேவைகளை வழங்கி வருபவர்கள் பொது மக்களுக்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுகளைக் கொண்டு வரும் போது ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எனவே இது போன்ற விழிப்புணர்வு நூல்களை ஏனைய மருத்துவத்துறை சார்ந்தவர்களும் வெளியீடு செய்வதன் மூலம் நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு வர முடியும் - என்றார்.
(எ-313)

# மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து உள்ளூராட்சி சபைகள் செயற்பட்டு வருகின்றன

## வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைவர்

நவாலி, டிசெ.21

உள்ளூராட்சி சபைகள் மக்களின் அடிப்படைத் தேவைகள் வசதிகளை அறிந்து செயற்பட்டு வருகின்றன. பிரதேச சபைகள் கருவிலிருந்து கல்லறை வரை செயற்பட்டு வருகின்றது என வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் தலைவர் அ. ஜெபநேசன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வுக்கு, தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், உள்ளூராட்சி சபைகளின் சேவைகளை எமது சபை உறுப்பினர்களும் சேர்ந்து செய்து வருகின்றனர்.

மேலும் சனசமூக நிலையங்கள் மக்களின் தேவைகளை அறிந்து செயற்பட வேண்டும். எமது பிரதேச சபை சிறப்பான முறையில் மக்களுக்கு சேவை யாற்றுகின்றது என்றார்.

இந்த நிகழ்வில் மாணவிகளின் நடனம், வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல், சபை உத்தியோகத்தர்களின் நாடகம் என்பனவும் இடம்பெற்றன.
(எ-100)

# தமிழரசுக் கட்சியின் செயற்குழுவில் தெரிவானோர்

கொழும்புத்துறை, டிசெ.21

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக் கிளைச் செயற்குழுத் தெரிவு தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணத் தொகுதிக் கிளையின் நடப்பு ஆண்டு செயற்குழுத் தலைவர் பெ.யேக்கப் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் செயற்குழுத் தெரிவு இடம்பெற்றது.

தலைவர் சொலமன் சூ.சிறில், உபதலைவர் சி.பரமநாதன், செயலாளர் ஈ.ஆனோல்ட், உப செயலாளர் எம்.ரி.இளங்கோ, பொருளாளர் தி.மைக்கல் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக பெ.யேக்கப், பி.அலன் கியூமர், ஏ.அகஸ்ரின், ம.சசிகரன் அ.கொர்னேசியஸ், ஏ.சகாயதாசன், எஸ். கிறேசியன், எ. தமிழினியன், க.அருள்நேசன், ம.சிங்கநாயகம், எம். சசிதரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தந்தை செல்வாவினால் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 62 ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களான எல்.எக்ஸ். குலநாயகம், சீ.வீ.கே. சிவஞானம், பெ.கனகசபாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.
(எ-135)

# பஸ்ரியன் இளைஞர் கழக அலுவலர் தெரிவு

வலி. வடக்கு, டிசெ. 21

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் மத்தி ஜே/184 கிராம அலுவலர் பிரிவுக்கான புதிய இளைஞர் சேவைகள் மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு உடுவில் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் எஸ். யுவராஜ் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பஸ்ரியன் இளைஞர் கழக உறுப்பினர்களாக பின்வருவோர் நடப்பாண்டுக்கான புதிய அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அமைப்பாளர் ஜெ.ஜெயதர்சி, தலைவர் எ.ஜெலன்ஸ், உப தலைவர், ந.ஜெனோதீபன், செயலாளர் மே.சஜீவன், உப செயலாளர் வி.ஒஸ்காகெனத், பொருளாளர் செ.ஜெயசீலன், விளையாட்டுப் பொறுப்பாளர் சூ.சுஜீவன், கலாசாரப் பொறுப்பாளர் நா.கிறிஸ்ரி, தொழில் முயற்சிப் பொறுப்பாளர் வே.கஜந்தன், ஊடகமும் தகவல் பொறுப்பாளர் ம.டிஸ்மினா, தேசிய சேவைப் பொறுப்பாளர் வி. நிலாஞ்சன், கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டலும் ஆலோசனைப் பொறுப்பாளர் பே.மேக்சி நிலூசா, ஒழுக்கக்குழு கமலயோகேஸ்வரன், ஆ.தர்மலிங்கம், ஆலோசனைக்குழு சி.சிவமோகன், சி. கோபிநாத், சு.சத்தியசீலன் சோ.புருசோத், கு.சிவகுகன், கணக்குப் பரிசோதகர் வே.தர்மபாலன்.
(எ-86)

# இனியும் முடங்காதீர்கள் எழுந்து வாருங்கள் மைதானத்துக்கு

விளையாட்டுக்களில் ஈடுபடுவோருக்குத் தேவையான அளவு சக்தி கிடைப்பதால் நோய்கள் அவர்களை அணுகா. விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட வயது வேறுபாடு கிடையாது. வெளிநாடுகளில் முதியோர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளே அதிகம் இடம் பெறுகின்றன. போட்டிகளில் பங்கு பெறும் முதி யோருக்குப் பெரும ளவு பரிசில்கள் வழங்கப்படுவதால் அங்குள்ள முதியவர் கள் ஓய்வு நேரத்தில் கூட பயிற்சிகளில் பங்குபற்றுகின்றனர். இதனால் அங்குள்ளவர்கள் நூறு வயதைத் தாண்டினாலும் நோய் நொடிகளின்றி வாழ்வதற்கு விளையாட்டுப் பயிற்சிகளே காரணமாகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள் தொடக்கம் முதியோர் வரை ஆர்வமாக உள்ள போதிலும் போதிய விளையாட்டுத் திடல்கள் இல்லாததால் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதில்லை.


எமது பிரதேச விளையாட்டு வீர வீராங்கனைகள் தற்போது தேசிய போட்டிகளில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போட்டிகளிலும் பங்கு பற்றும் அளவுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எமது வீர, வீராங்கனைகள் இலை மறைகாய்களாக வாழாமல் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விளையாட்டுக்கழகத் தில் இணைந்து பிரதேசத்தின் வீர, வீராங்கனைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பாடசாலைப் பருவத்துடன் விளையாட்டு நிகழ்வுகளில் சிலர் ஈடுபடுவதில்லை. ஒரு சிலரே தொடர்ந்தும் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.



விளையாட்டு பல்வேறு தரப்பினருடனும் பழகும் வாய்ப்பை உருவாக்குவதுடன் சிறந்த பண்பு, தலைமைத்துவம் போன்றவற்றை வளர்க்கும் கருவியாகவும் உள்ளது.

உலகத்தில் பெண்கள் பங்குபற்றாத விளையாட்டுக்களே இல்லையெனக் கூறும் அளவுக்கு விளையாட்டுத் துறை வளர்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வோரில் பலர் திருமணமானவர்களாகவும் பல பெண்கள் இரண்டு, மூன்று குழந்தைகளின் தாய்மாராகவும் உள்ளனர்.

உலக நாடுகளில் சிறந்த வீர வீராங்கனைகளாகக் காணப்படுவோரை பணம் கொடுத்து வாங்கி பெருமளவு நிதி செலவழித்து பயிற்சி வழங்கி ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றச் செய்கின்றனர்.

அவர்களின் நோக்கம் ஒரு வீரர் பதக்கம் பெற்றால் அதை அந்த நாட்டுக்கு கிடைக்கும் கௌரவமாகவே கணிக்கின்றனர்.பதக்கம் பெறும் வீர, வீராங்கனை களுக்கு பணத்தை அந்தந்த நாட்டு அரசும் அங்குள்ள தொழில் நிறுவ னங்களும் வாரி வழங்குகின்றன.

எமது நாட்டில் அந்த அளவுக்கு வசதி வாய்ப்புகள் இல்லாத போதிலும் எமது பிரதேச விளையாட்டு வளங்களைப் பெருக்க வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த மக்கள் உதவ முன்வர வேண்டும்.

வெளிநாடுகளில் எம்மவர்களால் விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவை விளையாட்டுக்களில் ஈடுபடும் எமது பிரதேச வீர, வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்த எம் உறவுகளுடன் உள்ளூரில் இருப்பவர்களும் கூட ஒத்துழைப்பை வழங்கி விளையாட்டுக்களில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்தும் வகையிலான பங்களிப்பினை வழங்கி தென்மராட்சி மண்ணின் வீர, வீராங்கனைகளின் எதிர்காலத்தை வளர்க்க வேண்டும்- என்றார். (207)

# ஆண்டு ஒன்றில் அகம் நெகிழ்ந்து பிரார்த்திக்கின்றோம்



## சிவபூசாதுரந்தரர் அமரர்

## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

கருவாய்:- 17.02.1920 சிவகதியாய்:- 01.01.2011

*திதி: மார்கழி அபரபக்கத் துவாதசி – 21.12.2011*

கசடறக் கற்பவை கற்று நின்றீர்
எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கற்பித்தீர்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றீர்
உரைத்தது போன்று நிலைத்ததில் நின்றீர்
உடையில், நடையில் வெண்மையும் வீறும்
உமக்கென ஒரு வழி உலகுக்குக் காட்டினீர்
இல்லறம் என்னும் நல்லறம் கண்டீர்
இருந்து ஓம்பி இல்வாழ்வில் விருந்து ஓம்பினீர்
சமயப் பணியும் சமூகப்பணியும் சாதனையாய்ப் புரிந்தீர்
ஆன்ம விசாரணையில் அகமது இலயித்தீர்
அன்பே சிவம் என்று அறிவித்து நின்றீர்
எண்ணிய எண்ணியாங்கு திண்ணியராய் எய்தினீர்
ஏகன் அனேகன் இறை அடி இணைந்தீர்
எப்பவோ முடிந்த காரியம் என்பீர்
அப்புவாய் அனைத்திலும் காட்சி தருகிறீர்
எந்தையாய் எம்மை அவையத்து
முந்தி இருப்பச் செய்த
தந்தை சொல்மிக்க மந்திரமுண்டோ?



மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"எபநேசர்", செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், 22.12.2011 வியாழக் கிழமை காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:
1. நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், அம்பாள்குளம், கிளிநொச்சி. 0776225944

(10964)(9-6-8)

## மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
இன்று 20.12.2011 முதல் 31.12.2011 வரை
விசேட கழிவுடன் விற்பனை
செய்யக்காத்திருக்கின்றோம்.

★ பட்டு சாறி வகைகள் 50 % கழிவு
★ ஆடவர் சேட் வகைகள் 25 % கழிவு
★ சல்வார் வகைகள் விசேட கழிவுடன்

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்

(ச/0900)(3.7.6)

## ஆஞ்சநேயர் ஆலயத்தில் சனிப்பெயர்ச்சி யாகம்

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேட யாகம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 108 சங்காபிஷேகம், திரவிய அபிடேகம், பாராயணம், விசேட பூசைகள் என்பன இடம்பெறும். ஆலய பிரதம கர்த்தா இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் விசேட யாகத்தை நடத்துவார். (வ)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
எஸ். மதிகரன்அவர்களின் பேர்த்தி
முருகேசு இராசம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை
பாடசாலைச் சமூகம்.

(11386)(6-9-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
P.A.A.பெஞ்சலோ அவர்க்ளின் அன்புத் தந்தை
பேதுறு அந்தோனிப்பிள்ளை

17.12.2011 அன்று காலமாகிவிட்டார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா இளைப்பாறிட இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(C/7101)(7-8-6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## தர்மலிங்கம் ரவிராஜ்



தோற்றம்:- 27.01.1958
மறைவு:- 11.01.2010

திதி:அபரபக்க ஏகாதசி
(21.12.2011) புதன்கிழமை

எத்துணை மக்கள் கூட்டம்
ஏங்கியே உந்தன் பிரிவால்
கத்திடும் கடலும் தோற்கக்
கரைந்துமே கண்ணீர் மல்கி
உத்தம ரவியே எங்கள்
உயிர்க்கினியான் என்றே
அத்தனை பேரும் சொன்னார்
ஆண்டுகள் இரண்டு சென்றும்
சித்தனே! உந்தன் பிரிவால்
அழுகுதே இன்னும் நெஞ்சம்

உதயபானு,
கண்டி வீதி, கொடிகாமம்.

அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனைவி, மகன், தாய்,
சகோதரர்கள், நண்பர்கள்.

(11874)(2-6-7)

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ-து

### பதவி வெற்றிடம்
எழுதுநர்

மேற்படி பணிநிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத் திட்டம்: 302/13- 9950-11700
85X10-90X10

காலத்துக் காலம் சுற்றுநிருபங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ). கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியலாளர்/எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

கூட்.சங். ஊழியர் 15ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த (சாதரணம்) கணிதம்/தமிழ்/வர்த்தகம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுது வினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

02. விண்ணப்ப முடிவுத் திகதி: 2011.12.30

03. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்ப படிவங்களை ரூபா 10 செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பத்தை சரிவர பூர்த்தி செய்து 2011.12.30 ஆம் திகதிக்கு முன் தலைவர், 127,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்ப படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "எழுதுநர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பொது முகாமையாளர்

(C/6988)(6,8,9)

Midea Electro Mart
விசேட விலைக்கழிவும்
இலவச மின் உபகரணங்களும்
Midea PC Show Room
08.12.2011 முதல் 31.12.2011 வரை
Authorized Dealer for Abans Ltd.




Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவை.

www.Mideamart.com

No.1-1,1-H, Stanley Road, Jaffna.
T.P:021 - 222 4566 Fax.021 222 1646

e-mail: midea21@gmail.com

No.4, New market, chavakachcheri.
T.P:021 227 0268, Fax: 021 227 0129

# முதன் முதலில் ஒற்றைத் தளத்தில் கோபுரம் அமைக்கப்பெற்ற காரைநகர் பயிரிக்கூடல் அருள் மிகு சிவசுப்பிரமணிய ஆலயம்

நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ள காரைநகரில் நெய்தல் நிலத்தின் நடுவே வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தின் வட பால் பயிர்கள் கூடலாக இருந்த பிரதேசம் 'பயிரிக்கூடல்' என்று அழைக்கப்பட்டு வந்தது. கார்காத்த பெருமக்கள் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க பயிரிக்கூடல் பகுதியில் வாழ்ந்த நம் முன்னோர் பசுக்கள் மீது பற்றும் பாசமும் உடையவர்களாக இருந்துள்ளனர்.



பண்டைக் காலத்தில் பசுக்கள் நீர் அருந்துவதற்கு நல்ல தண்ணீர் கிணறு வெட்டி நன்னீர் தொட்டி கட்டி பசுக்கள் தம் தினவைப் போக்க வசதியாக ஆவுரஞ்சுங்கல்லையும் கட்டி வைத்தனர், இந்தக் ஆவுரஞ்சிக்கல் நடைப் பயணத்தில் களைத்து வருவோரின் சுமைகளைத் தாங்கும் சுமைதாங்கியாகவும் பயன்பட்டது. காரைநகர் பசுக்கள் (கோ) நிறைந்த வளமான பிரதேசம். அதனால் கோவ ளம் என்று அழைக்கப்பட்டதாகவும் கோவளத்துப் பசுக்கள் எல்லாம் பயிரிக் கூடல் வழியாக வயல் நிலத்தில் புல் மேயச் சென்று திரும் புவதாகவும் அந்தப் பசுக்கள் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக பயிரிக் கூடலில் ஒரு குளம் கட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

ஆரம்பகாலத்தில் மருதனார்குளம் என்று அழைக்கப்பட்ட இந்தக் குளம் இன்று மளவராயன் குளம் என்று மருவி வழங்கப்படுகின்றது. அந்தக்காலத்தில் பசுக்களுக்கு கொடிய நோய் வந்தபோது அந்த நோயினின்றும் பசுக்களைக் காக்க வேண்டி பயிரிக்கூடலில் அம்மன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த ஆலயம் கிழக்குத் திசை நோக்கி இருந்ததால் கிழக்கு அம்மன் என்று அழைக்கப்பட்டது. இது சித்தபண்டாரம் என்பவ ரது காணியில் அமைக்கப் பெற்ற மடாலயமாக விளங்கியது.

அந்தக் காலத்தில் சித்தர்பண்டாரம் கோயில் என்றும் பிற்காலத்தில் அவரது பரம்பரையால் வந்த மொட்டையர் என்று அழைக்கப்படும் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை தம்பதியர் நீண்ட காலமாக பிள்ளைப் பேறு இன்மையால் பிள்ளை வரம் வேண்டி கிழக்கு அம்மன் ஆலயத்தில் முருகப்பெருமானை மூலஸ் தானத்தில் பிரதிட்டை செய்தனர். அன்று முதல் மொட்டையரின் முருகன்கோயில் என்று இந்த ஆலயம் வழங்கப்படலாயிற்று.

ஆரம்பகாலத்தில் வேல்,சூலம், மரத்தல் செய்யப்பட்ட அம்மன் சிலை என்பன இந்த ஆலயத்தில் வைக் கப்பட்டிருந்தன. 1918இல் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் சுண்ணாம்புக்கற்களால் கட்டப்பட்டு 1928இல் மாவிட்டபுரம் அப்பாக் குருக்களால் முதலாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இந்த ஆலயத்தின் ஆரம்பகால சிவாச்சாரியர்களான சிவானந்தையர் குமாரசாமிஜயர் மற்றும் அவரது அண்ணன் விசுவநாத ஐயர், சுப்பையா ஆகியோர் அப்பாக் குருக்களுடன் சேர்ந்து கும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்தனர்.

1928 இல் இடம்பெற்ற முதலாவது கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அப்பாக் குருக்கள் பரம்பரையினரைச் சேர்ந்தவர்களே ஆலய நித்திய பூசையைச் செய்து வந்தனர். 1945 ஆம் ஆண்டு தொடக்கம் குமாரசாமி ஐயர் சுமித்தேயவரசர்மாவும் 1996 இல் இருந்து குகனேச சர்மா சண்முகராஜக் குருக்களும் பூசைகளைச் செய்து வருகின்றனர்.

இந்த ஆலயத்தில் 1928, 1961, 1978, 1996, 2010 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. காரைநகரில் முதன்முதலாக ஒற்றைத் தளத்தில் கோபுரம் அமைக்கப்பெற்ற ஆலயம் இதுவாகும். 2010 இல் இந்த ஆலயத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய ராஜகோபுரம், மணிமண்டபம், மணிக்கோபுரம், பிள்ளையார், அம்பாள் சந்நிதிகள் என்பன புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வெள்ளிக்கிழமை விரதம் முருகப் பெருமானுக்குரியது. வெள்ளிக்கிழமை விரதத்தின் மகிமைபற்றி அம்பாள் முருகனுக்கு உபதேசம் செய்ததாக புராணக் கதைகளில் கூறப்படுகின்றது. காரைநகரில் அம்பாளும் முருகனும் அருளாட்சி செய்வதால் வெள்ளிக்கிழமை விரதம் அனுட்டிப்பதற்கு உகந்த ஆலயமாக பயிரிக்கூடல் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் விளங்கு கின்றது. இந்த ஆலய பெருந்திருவிழா தைமாத பூர்வபக்க சஷ்டியில் ஆரம்பித்து பூரணை தினத்தன்று சமுத்திரத் தீர்த்தத்துடன் நிறைவடையும்.

**டர்னிகன்**

இந்தப் பத்துத் திருவிழாக்களும் சிறப்பாக இடம்பெறும். கொடியேற்றத் திருவிழா அன்றும் தேர்த்திரு விழா அன்றும் 1008 சங்காபிஷேகம் நடைபெறுவதும் இந்த ஆலயத்தின் சிறப்பாகும்.

தைப்பூச தினத்தன்று நெல் வயல்களில் புதிர் எடுத்து புதிர் பூசை செய்த பின் சுவாமி ஈழத்து சிதம்பர புனித தீர்த்தமான கசூரினா தீர்த்தக் கரைக்குத் தீர்த்தமாடச் செல்வது வழமை.

(தொடரும்)


# துயரத்தைச் சுமந்த ஓராண்டு நிறைவு

அன்னை மடியில்
03.12.1983

அமரர்

ஆண்டவன் அடியில்
31.12.2010

## தேவராசா கேதீஸ்தரன் (தீசன்)



காற்றிலே மிதந்து வந்த உன் செய்தியால்
கருவறைக் குழந்தைகூட கண் கலங்கிப் போனதையா
ஆண்டொன்று உருண்டோடியது ஆனாலும்
ஆறவில்லை துயரம் தேம்பி அழுகின்றோம்

மாண்டவர் மீண்டுவருவதில்லை என்றுணர்ந்தும்
ஆண்டாகிப் போனாலும் காத்திருக்கிறோம் உனக்காக
வாராயோ ஒருமுறை உன்முகம் காண
பாராயோ உன் உறவெல்லாம் அந்தரிப்பதை

நாமூன்று மாதங்கள் ஆனாலும் – உனை
வாவென்று கதறுகிறாள் உன்னவள்
கனவில் மட்டும் நீ வந்து கதை பேசுகிறாய் – அவள்
நினைவிழந்து நித்தமும் தடுமாறுகிறாள் உனையிழந்து

கட்டி அணைப்பதற்கு துடிக்கிறாள் அன்னை
தொட்டுத்தழுவ ஏங்குகின்றன உறவுகள்
உணவை மறுக்கின்றன நீ வளர்த்த வீட்டுப் பிராணிகள்
துணையை இழந்து தனிமரமானாள் மனையாள்

ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எங்கள் சோகங்கள் – ஆதலால்
மீண்டுமொருமுறை நீ வந்து பிறக்கணும் அப்போது
நீண்டு செல்லணும் எங்கள் உறவுப்பயணம்.

குடத்தனை கிழக்கு, பருத்தித்துறை.

தகவல்:
மனைவி, தாய், சகோதரர்கள்.

(11799)(2-6-9)

# யுத்தம் முடிந்த பின்னரும் 60,000 படையினர் ஓட்டம்

கொழும்பு,டிசெ.21

நாட்டில் யுத்தம் முடிந்த பின்னரும் 60 ஆயிரம் படைச்சிப்பாய்கள் தப்பி ஓடியுள்ளனர். தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் அவமானங்களை சகித்துக் கொள்ள முடியாமலே அவர்கள் ஓடுகின்றனர். நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய படைச் சிப்பாய்கள் இன்று மலசலகூடம், வாய்க்கால்களைத் துப்புரவு செய்யவும், புல்லு நடவும், பாதை வெட்டவுமான கூலிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இது படையினருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் அவமானமாகும் - என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசின் இணையத்தளம் ஒன்றில் 1952 ஆம் ஆண்டுமுதல் இறுதி யுத்தம் வரையில் கடமையாற்றிய இராணுவத் தளபதிகளின் பெயர்ப்பட்டியல்கள் வரிசைப்படி வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், நாட்டைப் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்டெடுக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றி புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டிய சிறந்த தளபதி என்று ஜனாதிபதியாலேயே பாராட்டப்பட்ட மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயர் அந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

ஒரு படைத்தளபதி இன்றியா நீங்கள் பயங்கரவாதத்தை ஒழித்தீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். முன்பு கிராமப்புறங்களில் இருந்து பொலிஸ் மற்றும் முப்படைகளில் பணியாற்றச்சென்றவர்கள் தமது கிராமங்களுக்குத் திரும்பும்போது அந்தக் கிராமமே திரண்டு மேடை அமைத்து மலர்மாலை அணிவித்து வரவேற்றது. ஆனால், இப்பொழுது யுத்தத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டுத் திரும்பிய படையினர் வயல் வெட்டவும், பாதை போடவும், குப்பை அகற்றவும், மலசலகூடம் துப்புரவு செய்யவும், புல்லு நடவும் கூலிகளாக அமர்த்தப்பட்டுள்ளனர். யுத்தம் நடந்தபோது தப்பி ஓடியவர்கள் உயிருக்குப் பயந்து ஓடினார்கள். ஆனால், இப்போது அவமானம் தாங்க முடியாமல் தப்பி ஓடுகின்றனர்.

**கடந்த 3 மாதங்களில் 342 கடத்தல்கள்**

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் படையினருக்கு குளிக்கக்கூடத் தண்ணீர் இல்லை. அடிப்படை வசதிகள் கூட இல்லை. நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்துவிட்டன. கடந்த மூன்றுமாத காலத்தில் 342 கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுள் ஆக 27 விடயங்கள் மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன. அமைச்சின் அதிகாரி ஒருவர், அமைச்சர் ஒருவரின் செயலாளரது வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தக் கடத்தலுக்கு இராணுவ ஜீப் ஒன்று பாதுகாப்பு வழங்கியுள்ளது. சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் கடத்தல்காரர்களுக்கும், போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கும் பாதுகாவலர்களாகவே இயங்குகின்றனர்.

**கடத்தல்களில் ஈ.பி.டி.பி?**

இன்றைய அரசியல் கலாசாரத்தில் மக்கள் பலமற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். மக்கள் எல்லா விடயங்களுக்கும் அரசியல்வாதிகளின் பின் செல்லவேண்டிய நிலை. ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்க்கக்கூட அரசியல்வாதியின் அனுசரணை தேவைப்படுகின்றது.

மணல் ஏற்றிச்செல்லவும், பஸ் பாதை (ரூட்) அனுமதி பெறவும் பத்து லட்சம் ரூபா வழங்க வேண்டும். லஞ்சம் ஊழல் தலைவிரித்தாடுகின்றது. வடபகுதியில் இன்னும் சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. உங்களால் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு வடபகுதியில் இடம்பெற்ற கடத்தல்கள் மற்றும் கப்பம் கோரல் சம்பவங்களில் ஈ.பி.டி.பியினரின் தொடர்பு இருப்பதாகவும், இதுகுறித்து விசாரிக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக் காட்டி உள்ளது. இதனையும் அவதானிக்க வேண்டும்-என்றார். (ஓ-சி)

# சிறிகொத்தாவில் தாக்குதல் நடத்துவதை பார்த்துக்கொண்டிருந்தனர் பொலிஸார்

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 21

ஐ.தே.க. தலைவர் பதவிக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றவேளை, பொலிஸ் மா அதிபரிடம் உரிய பாதுகாப்பு கோரப்பட்டிருந்தபோதும் ஐ.தே.க தலைமையகத்திற்கு போதுமான அளவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை - என்று ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி அலுவலகத்திற்குள் இருந்தபோது வெளியில் இருந்து வந்தவர்கள் தாக்குதல் நடத்தியதை பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிகொத்தாவில் இடம்பெற்ற இந்த அசாதாரண நிலைமையால் அலுவலகத்திற்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதோடு உறுப்பினர்களின் வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டு அழைத்து வரப்பட்ட குழு இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. இதுதொடர்பில் விசாரணை நடத்தி பாரபட்சம் இன்றி சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ச)

# குற்றங்களைக் கட்டுப்படுத்த தவறிவிட்டனர் பொலிஸார்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.21

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலி ஸார் தவறிவிட்டனர் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த சில காலமாக நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராயும்போது இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் கொள்கை வகுப்புப் பிரிவின் பணிப்பாளர் பஸில் பெர்ணாண்டோ கூறியுள்ளார்.

தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை பொலிஸாருக்கு கிடையாது என்ற மனோபாவம் குற்றச்செயல் களில் ஈடுபடு வோருக்கு ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-சி)


# பத்தாம் வருட நீங்காத நினைவுகளில்

எம்மை அன்போடு அறிவுரை பல மொழிந்து
குடும்பவிளக்காய் சிறந்த தலைவனாய்
கற்றோரும், உற்றாரும், அயலவரும்,
போற்ற வாழ்ந்த உத்தமனே!

இடைநடுவில் எங்களைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர் ஐயா!!!
காலம் செய்த கோலம் உங்களது மனைவியை
தனிமையில் வாட்டுதையா!!!

ஆனாலும் நீங்காத நினைவலைகள்
நித்தம் நித்தம் வருகுதையா,
நிலத்திலே இடம் கொடுத்த ஆசானே!
உனது நிழலிலே தபால் நிலையம் உருவாகிறது.

வாழ் நாள்கள் தொடரும் வரை எங்களை விட்டு
நீங்காது உங்கள் நினைவலைகள்

எனது தந்தையின் இழப்பின் 10 ஆவது வருடத்தில்
காலடி எடுத்துவைக்கும் எனது அம்மாவுக்கு இதுவரை
உடனிருந்து உதவிய, ஆறுதல் கூறிய, அன்புள்ளங்கள்
அனைவருக்கும் எங்களது மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



தோற்றம்
15.06.1935

அமரர்

மறைவு
21.12.2001

மரியாம்பிள்ளை வைற்றஸ் (வீற்றப்பு)

(ஓய்வு பெற்ற மூப்பர், உப தபாலதிபர், தாளையடி)

என்றும் தங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி (பாஷையூர்),
அன்பு மகன் - மருமகள், பேரப்பிள்ளைகள் (சுவிஸ்)

போயிட்டி, இளவாலை. (11742)(2-6-7)

# மீனவர்களை விடுவிக்கக் கோரி ராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

இராமேஸ்வரம், டிசெ.21

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் தலைமை தபால் நிலையம் முன்பு மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தி னர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் பிரசாத், அகஸ்டஸ், வின்சன், லாங்லெட், எமர்சன் ஆகிய 5 மீனவர்களை பிடித்து இலங்கை கடற்படையினர் யாழ்ப்பாணம் சிறையில் அடைத்துளனர். மீனவர்கள் 5 பேரும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

நீதிபதி எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதிவரை 5 மீனவர்களுக்கும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

இந்தநிலையில் இலங்கைச் சிறையில் உள்ள 5 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு - பாண்டிச்சேரி மீனவர் கூட்டமைப்பு சங்க பொதுச் செயலாளர் என்.கே. போஸ் தலைமையில் இராமேஸ்வரம் தலைமை தபால்நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்த்தில் மீனவர் சங்கத் தலைவர்கள் தேவதாஸ், சேசு, மகத்துவம், ஜான்சன், அந்தோனி உள்பட 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் 5 மீனவர்களையும் விடுதலை செய்ய மத்திய-மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மீனவர்கள் கோஷம் எழுப்பினர்.

(வ)





## இந்தியாவில் விரைவில் சர்வதேச தர புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்

டில்லி, டிசெ.21

இந்தியாவில் உலகத் தரத்தில் புற்று நோய் ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பு சார்பில் இந்தியா-அமெரிக்க வர்த்தகக் கலந்துரையாடல் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்தநிகழ்வில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:


அமெரிக்க வைத்திய நிபுணர்களின் உதவியுடன் இந்தியாவில் உலகத் தரத்தில் புற்று நோய் ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (வ)

## மலையாளிகளை பாதுகாப்பதற்கு இணையத்தளம்

சென்னை, டிசெ.21

முல்லை பெரியாறு பிரச்சினையால் இரு மாநிலங்களிலும் எழுந்துள்ள பதற்றத்தை அடுத்து தமிழகத்தில் வாழும் மலையாளிகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் supportkerala.org என்ற இணையத்தளம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதில் தமிழ்நாட்டில் வாழும் மலையாளி கள் தங்கள் பெயர் விவரங்களை பதிவு செய்து கொண்டால் தக்க நேரத்தில் பாதுகாப்பு உதவிகள் பெற முடியும் என்று கூறப்பட்டுள்ளது. (வ)



கோவா சுதந்திர போராட்ட வீரர் குண்காவின் உருவப்படத் திறப்பு விழா, டில்லி நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி மற்றும் லோக்சபா சபாநாயகர் மீரா குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## ஹசாரேயின் உண்ணாவிரதத்துக்கு மும்பையில் அனுமதி கிடைத்தது

சமூக சேவகர் அன்னா ஹசாரே எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள உண்ணாவிரதத்துக்கு மும்பையில் அனுமதி வழங்கப்பட் டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வலுவான லோக்பால் பிரேரணையை நடப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படாவிட்டால், எதிர்வரும் 27 ஆம் திகதியில் இருந்து காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பேன் என்று அன்னா ஹசாரே ஏற்கனவே அறிவித்துள்ளார்.

டில்லியில் காலநிலை சரியில்லாவிட்டால், மும்பையில் உண்ணா விரதம் இருக்கப் போவதாக அவர் கூறியிருந்தார். அவரது உண்ணா விரதத்துக்காக மும்பை அதிகாரிகளிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது. இந்தநிலையில், அவரது உண்ணா விரதப் போராட்டத்துக்கு மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையம் (எம்.எம்.ஆர்.டி.ஏ.) அனுமதி அளித்துள்ளது. மும்பை பாந்திரா குர்லா வளாகத்தில் டிசெம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் 15 நாள்களுக்கு உண்ணாவிரதம் இருக்க எம்.எம்.ஆர்.டி.ஏ. ஒப்புதல் வழங்கி இருப்பதாக அன்னா ஹசாரே குழுவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

# சசிகலாவின் நீக்கம்; அ.தி.மு.க தொண்டர்களுக்கு பிறந்தநாள் பரிசு

சென்னை, டிசெ.21

அ.தி.மு.கவை நிறுவிய எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் அடுத்த மாதம் வரவுள்ள நிலையில் அ.தி.மு.கவினருக்கு சிறந்த பரிசாக அமைந்துள்ளது சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் அ.தி.மு.கவிலிருந்து நீக்கப் பட்டிருப்பது. இது ஜெயலலிதா அ.தி.மு.க. தொண்டர்களுக்குக் கொடுத்துள்ள சிறந்த பிறந்த நாள் பரிசு என்று கட்சியினர் சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றனர்.

அ.தி.மு.க. உருவான வரலாறு, கட்சியை எம்.ஜி.ஆர். வளர்த்த விதம், மக்களிடையே கட்சிக்கு நற்பெயரை உருவாக்கியது ஆகிய வற்றைத் தெளிவாக அறிந்த மூத்த கட்சியினருக்கு, சசிகலா வின் ஆதிக்கம் என்ற விட யத்தை ஆரம்பத்திலிருந்தே ஜீரணிக்க முடியவில்லை.

இது எம்.ஜி.ஆரின் கட்சியா அல்லது சசிகலா குடும்பக் கட்சியா என்ற ஆதங்கத்தில் அவர்கள் இத்தனை காலம் இருந்து வந்தனர். எப்போது சசிகலாவுக்கு ஜெயலலிதா முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தாரோ அன்றே அ.தி.மு.கவிலிருந்து எம்.ஜி.ஆர். காணாமற் போய் விட்டார்.

எம்.ஜி.ஆரையும், இரட்டை இலையையும் நீக்கி விட்டால் அ.தி.மு.க. பூச்சியம் என்பது பாலர் வகுப்புப் படிக்கும் குழந்தைக்குக் கூடத் தெரியும். அப்படிப்பட்ட இரு ஸ்டார் விடயங்களில், எம்.ஜி.ஆர். சுமார் அ.தி.மு.க வில் காணாமலேயே போய் விட்டார். தேர்தல் நேரத்தில் மட்டும்தான் இரட்டை இலை என்ற விடயமே கட்சித் தலைமைக்கு நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு அ.தி.மு.கவின் இயல்பு மாறிப் போயிருந்தது என்று அ.தி.மு.க. கட்சியினர் தெரிவித்தனர்.

(வ)

## மூவரின் உயிரைக் காக்க 2 லட்சம் 'மிஸ்ட் கோல்'கள்

சென்னை, டிசெ.21

ராஜீகாந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட மூவரின் மரண தண்டனைக்கு எதிரான இந்த 'மிஸ்ட் கோல்' பிரசாரத்துக்கு தமிழ் மக்களிடையே மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளது. நான்கு நாள்களில் 2 லட்சத்து 73 ஆயிரத்து 767 பேர் 'மிஸ்ட் கோல்' கொடுத்துள்ளனர்.

தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய தமிழ் ஆர்வலர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். தூக்குத் தண்டனைக்கு எதிராக பொதுமக்களின் கருத்தை ஒருங்கிணைக்கும் வகையில், மரண தண்டனை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் நூதன பிரசாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி தமிழ் திரைப்படத் துறையினர் இதனை ஆரம்பித்து வைத்தனர். 3 பேரின் உயிரைக் காப்பாற்ற விரும்புபவர்கள் 92822 21212 என்ற எண்ணில் 'மிஸ்ட் கோல்' கொடுக்கவும் என்று அறிவிக்கப்பட்டது.

தங்களது எதிர்ப்புக் குரலை 'மிஸ்ட் கோல்' மூலமாக பலர் பதிவு செய்து வருகின்னர். கடந்த 4 நாள்களில் 9282221212 என்ற எண்ணுக்கு 2 லட்சத்து 73 ஆயிரத்து 767 பேர் 'மிஸ்ட் கோல்' கொடுத்துள்ளனர். குறைந்த பட்சம் 20 லட்சம் மிஸ்ட் கோல்கள் பதிவான பின்னர் அதை மத்திய அரசிடமும், வலியுறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

# தமிழக - கேரள எல்லைப் பகுதியில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

## சீமான் உட்பட 500 பேர் கைது

சென்னை, டிசெ.21

நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் கொல்லம் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தத் திரண்டபோது பொலிஸார் அனைவரையும் தடுத்துக் கைது செய்தனர். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. இதனால் தமிழகத்துடன் கேரளாவை இணைக்கும் 13 வீதிகளில் பெரும்பாலான வீதிகளில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் முரண்டு பிடிக்கும் கேரளாவுக்கு பொருளாதாரத் தடை மூலம்தான் பாடம் புகட்ட முடியும் என்று பல்வேறு அமைப்புகள் உறுதியுடன் நம்பி தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு அத்தி வாசிய பொருள்கள் கொண்டு செல்லத் தொடர் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புளியரையில் முற்பகல் 11 மணி அளவில் நாம் தமிழர் இயக்குநர் சீமான் தலைமையில் போராட்டம் நடை பெற்றது. இதைய டுத்து பொலிஸார் அனைவரை யும் கைது செய்தனர். (வ)

## செங்கோட்டை எல்லையிலும் தமிழக ஐயப்ப பக்தர்கள் மீது தாக்குதல்

செங்கோட்டை,டிசெ.21

குமுளியைத் தொடர்ந்து செங் கோட்டை எல்லையிலும் தமிழக ஐயப்ப பக்தர்கள் மீது கேரள மாநிலத்தவர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் 25இற்கும் மேற் பட்ட வாகனங்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் செங்கோட்டை பாதையும் அடைக்கப்பட்டது. முல்லைப் பெரியாறு அணை விவகாரம் விசுவரூபம் எடுத்த தைத் தொடர்ந்து ஐயப்ப பக்தர்கள் மாற்று வழியான செங் கோட்டை வழியாக சபரி மலைக்குச் சென்று வருகின்றனர். இருப்பினும் ஆங்காங்கே ஐயப்ப பக்தர்களை கேரளத்தவர்கள் குறி வைத்துத் தாக்கி வருகின்றனர். (வ)

# சிறிகொத்தா மீதான தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற விசாரணை வேண்டும்

## சபையில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.21

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகம் தாக்கப்பட்டமை தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இத்தாக்குதலின் பின்னணியில் மகாராஜா வலையமைப்பு தொடர்புபட்டுள்ளதற்கான சந்தேகம் வலுப்பட்டுள்ளது. தொண்டர் நிறுவனம் என்ற பெயரில் வெளிநாட்டுப்பணமும் கைமாறப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே, இச்சம்பவம் தொடர்பாகப் பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை நடத்தி சூத்திரதாரிகள் கண்டறியப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதேவேளை, கட்சித் தலைவர் என்ற முறையில் தலைமையகத்தைப் பாதுகாக்க முடியாமைக்கு பொதுமக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதாகவும் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் சபையின் கவனஈர்ப்பு விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துப் பேசும்போதே ரணில் இப்படிக் கூறினார்.



...க்குதலில் சேதமான பகுதிகளை ரணில் பார்வையிடுகிறார்

அவரது உரையின் ஆரம்பத்தில், ''கடந்த வாரம் இந்தச் சபையில் பிரதம கொறடா, எதிர்க்கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுமா என்று கேட்டார். நான் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாது என்று அப்போதே கூறினேன். இப்பொழுது மீண்டும் அதனை உறுதிப்படுத்தியுள்ளேன்'' என்று அவர் குறிப்பிட்டார்.

எனது பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றாலும், எனது வாகனம் தாக்கப்பட்டுள்ளது.

கட்சிக்குள் பிரச்சினைகள், கருத்துமுரண்பாடுகள், மோதல்கள் இடம்பெறுவது சகஜம். அது உட்கட்சி விடயம். கட்சிக்குள் ஏற்படும் பிரச்சினைகளைக் கட்சிக்குள்ளேயே தீர்த்துக் கொள்வோம். நாங்கள் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றோம்.

ஆனால், ஒரு கட்சியின் தலைமையை மாற்றி அமைக்க ஊடகங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அதனை அனுமதிக்கவும் முடியாது.

சிறி கொத்தாவில் இடம்பெற்ற மோதல்களை மகாராஜா நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைக்காட்சி அடிக்கடி இடைச் செய்திகளை ஒளிபரப்பி நாட்டு மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

அதேவேளை, அனைத்து சம்பவங்களையும் நேரடியாக ஒளிபரப்புச் செய்தது.

தனிப்பட்ட முறையில் ஒரு கட்சிக்குள் இடம்பெற்ற மோதல்களை நேரடியாக ஒளிபரப்புவது என்றால் இப்படி ஒரு சம்பவம் இடம்பெறப்போகிறது என்பதைத் தெரிந்துகொண்டே திட்டமிட்டு செயற்பட்டதாகவே கருதுகின்றோம்.

இதனால் இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு மகாராஜா அமைப்பின் நேரடிப் பங்களிப்பும் உள்ளது என்ற சந்தேகமும் வலுப்பட்டுள்ளது.

அதேவேளை, உட்கட்சிப் பூசல்களை ஊதிப்பெருப்பிக்கும் வகையில் கட்சி உறுப்பினர் ஒருவர் ஊடாக வெளிநாட்டுப் பணப் பரிமாற்றமும் இடம்பெற்றுள்ளது என நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளோம். பின்னர் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மற்றும் ஒரு முறைப்பாட்டையும் செய்துள்ளோம்.

எனவே, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்தவேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவரின் வாகனம் இந்த நாடாளுமன்றத்தின் சொத்து. அது சேதமாக்கப்பட்டுள்ளது கண்டிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதனை அவதானித்த ரணில் விக்கிரமசிங்க வாகனத்திற்கு காற்றுப்போய்விட்டது - என்றார்.

எனினும், அப்படியானால் அந்த வாகனத்தில் சென்ற பெண் யார் என்று அஸ்வர் கேட்டபோது,

அதில் எந்தப் பெண்ணும் செல்லவில்லை. ரவி கருணாநாயக்கதான் சென்றார் என்று பதிலடி கொடுத்தார் ரணில்.

## மதுபோதையில் இடையூறு அபராதம் 1500 ரூபா

தென்மராட்சி, டிசெ.21

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் வெள்ளம் போக்காட்டியைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ங-207)

## முன்னேற்ற அறிக்கைகளை அனுப்புமாறு அறிவுறுத்து

யாழ்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்துப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாக டிசெம்பர் 15 வரையிலான முன்னேற்ற அறிக்கையினை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் இமல்டா சுகுமார் மாவட்டங்களில் உள்ள சகல திணைக்களங்களினதும் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ங-207)

# பொன்சேகாவின் விடுதலைக்காக என்னால் ஒன்றும் செய்ய முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.21

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலைசெய்யுமாறு பல்வேறு தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக எனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி நான் விடுதலைசெய்தால், என்னை சர்வாதிகாரி என்றும் கூறிவிடுவார்கள். பொன்சேகா விடுதலையில் தனிப்பட்ட ரீதியில் என்னால் ஒன்றும் செய்யமுடியாது.

- இவ்வாறு நேற்று நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

முன்னாள் இராணுவத் தளபதி விடுதலை பற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவை மட்டுமல்ல, ஊழல் செய்த, கொள்ளைகளில் ஈடுபட்டு சிறைகளில் உள்ள பலரையும் விடுதலை செய்ய பலர் என்னோடு பேசுகின்றனர். இது இன்று நேற்றல்ல. பதவிக்கு வந்த நாள் முதல் என்னிடம் இப்படியான கோரிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட முன்வைத்து வருகின்றனர்.

சிலவற்றை நான் முடியாதென்று கூறினால் கோபித்துக் கொண்டும் செல்கின்றார். விடுதலைக்காகக் கோருவதற்கு ஒரு முறை இருக்கின்றது. ஒபாமாவிடம் போகவேண்டிய தேவை இல்லை. 10 லட்சம் கையொப்பங்களைப் பெறவேண்டியதும் இல்லை.

ஒபாமாவுக்கு மனு அனுப்பினால், அவர் அதனை எனக்கே அனுப்புவார். அவர்களுக்கு இதில் அக்கறையில்லை. அமெரிக்காவோ, ஐரோப்பாவோ, பிரிட்டனோ இதில் தலையிடப் போவதில்லை. எவற்றுக்கும் ஒரு வழிமுறை இருக்கிறது. நினைத்தபடி எதனையும் செய்யமுடியாது. தனிப்பட்ட முறையில், பொன்சேகாவின் விடுதலைக்காக என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

சிலவேளை, நான் எனது தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தினால் என்னை சர்வாதிகாரி என்று கூறிவிடுவார்கள் - என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி.

(ஒ-சி)

# பொன்சேகா விடுதலை விவகாரத்தில் மன்னிப்பு என்ற சொல்லுக்கு இடமில்லை!

## அனோமா திட்டவட்டம்

எனது கணவரின் விடுதலை தொடர்பான விவகாரத்தில் மன்னிப்பு என்ற சொற்பதத்தை ஒருபோதும் பாவிக்கமாட்டோம்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா நேற்று ''உதயனு''க்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் ஜனவரி மாதம் முதலாம் திகதி சரத் பொன்சேகா விடுதலைசெய்யப்படுவார் என செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எனது கணவர் ஜனவரி மாதம் முதலாம் திகதி விடுதலைசெய்யப்படுவார் என பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன்.

அவர் விடுதலை செய்யப்பட்டால், அதனை நாம் ஏற்றுக்கொள்வோம். ஏனெனில், எனது கணவர் தவறிழைக்கவில்லை என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

ஆனால், நாம் அவரின் விடுதலைக்காக மன்னிப்புக் கோரமாட்டோம். மன்னிப்பு என்ற வார்த்தைக்கு ஒருபோதும் இடமில்லை - என்றார். (ஒ-சி)

# ஆளும் தரப்பு எம்.பி தாக்கியதாக நாடாளுமன்றில் நேற்று முறையீடு

## அருந்திக்க உதைத்தார் என்கிறார் ரங்கே பண்டார

''சபைக்குள் நீ என்ன பேசினாய்'' என்று கேட்டுக்கொண்டே என்னைக் காலால் எட்டி உதைத்தார் ஆளுங்கட்சி உறுப்பினரான அருந்திக்க பெர்னாண்டோ. இதனால் எனக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. ஆளுங்கட்சி உறுப்பினரால் நான் அவமானப்படுத்தப்பட்டதுடன், எனது சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளது. எனவே, இச்சம்பவம் தொடர்பாக பரீசீலனை செய்து எனக்கு நியாயம் வழங்க வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக விவாதம் இடம்பெற்றபோது எதிர்க்கட்சியின்சார்பில்விவாதத்தைஆரம்பித்து பேசிவிட்டுசபையிலிருந்து வெளியே சென்றபோது ஆவேசமாக ஓடிவந்த ஆளுங்கட்சி உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ, ''நீ சபைக்குள் என்ன பேசினாய்?'' என்று கேட்டுக்கொண்டே என்னைக் காலால் எட்டி உதைத்தார்.

இதனை நேரில் கண்ட சாட்சிகளான ஹரின் பெர்னாண்டோ, வசந்த அலுவிகார ஆகியோர் சபையில் சாட்சியம் அளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபைக்குவந்த எதிர்க்கட்சிக்கொறடாஜோன் அமரதுங்க என்னை அங்கிருந்து அழைத்துச்சென்றார். இல்லாவிட்டால், எனக்கு மேலும் விபரீதம் ஏற்பட்டிருக்கலாம்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்படுவது முதல் தடவை அல்ல. ஏற்கனவே பலர் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை தொடர்ந்தால் நாடாளுமன்றம் கேள்விக்குறியாகிவிடும். எனவே, இவ்விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்யப்பட்டு, எனக்கு நியாயம் வழங்கவேண்டும் என பாலித்த ரங்கே பண்டார வேண்டுகோள் விடுத்தார்.

அப்போது ஆளுங்கட்சி உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ தன்னுடைய பெயர் குறிப்பிடப்பட்டதால், தானும் விளக்கம் ஒன்று அளிக்கவேண்டும் என எழுந்தார்.

இது சிறப்புரிமைப் பிரச்சினை. இதனை பரிசீலனை செய்யும் போது உங்களுடைய விளக்கத்தைக் கூறலாம். இப்போது பேச அனுமதிக்கமுடியாது என பிரதி சபாநாயகர், அருந்திக்க பெர்னாண்டோவுக்கு பேச இடமளிக்கவில்லை. பாலித்த ரங்கே பண்டாரவின் சிறப்புரிமை பிரேரணை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு சிறப்புரிமைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என பிரதி சபாநாயகர் அறிவித்தார். (ஒ-சி)


# தீவிரவாதிகளுடன் ஈராக்கின் துணை அதிபருக்கு தொடர்பு

## குற்றச்சாட்டின் பேரில் பிடியாணை

பக்தாத், டிசெ.21

தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் ஈராக் துணை அதிபருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈராக் துணை அதிபர் தாரிக்-அல் ஹஸ்மியின் நெருங்கிய பாதுகாவலராக இருந்த குர்தீஷ் இனத்தவர் ஒருவர் சமீபத்தில் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருந்தன் காரணத்தால் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ஈராக்கில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களுக்கு அந்நாட்டின் துணை அதிபர் தாரிக் அல்-ஹஸ்மிக்கு தொடர்பிருந்தது தெரிய வந்துள்ளது.



இதைத்தொடந்து ஈராக் உள்துறை அமைச்சகம் துணை அதிபர் தாரிக் அல் ஹஸ்தி மீது நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து உள்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஏடல் தாஹம் தெரிவித்ததாவது;

துணை அதிபரான தாரிக்-அல் ஹஸ்மியின் பாதுகாவலரிடம் தொடர்ந்து நடத்திய விசாரணையின் மூலம் ஈராக்கில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பல் வேறு அரசு அலுவலகங்கள் , அரசு அதிகாரிகள் கொல்லப்பட்ட னர். இதற்கும் துணை அதிபருக்கும் தொடர்பிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புகாரின் பேரில், தீவிரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஈராக்கின் 5 நீதிபதிகள் கொண்ட நீதித்துறைக் குழு துணை அதிபர் மீது பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது - என்றார்.

ஈராக்கில் அமெரிக்கப்படைகள் முற்றிலும் வாபஸ் பெறப்பட்ட நிலையில் துணை அதிபர் தீவிரவாதிகளுடான தொடர்பு கொண்டிருப்பதாக வெளியான தகவல் அந்நாட்டில் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளதாக ஈராக் தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டுள்ளன.



ஈரான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்யாவின் டாடார்ஸ்டான் அதிபர் ருஸ்தம் மினிக்ஹானோவ் (இடது ) தலைநகர் தெஹ்ரானில் அதிபர் முகமது அகமதி நிஜாத்தைச் சந்தித்தார்.

# அமெ. ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பிரிட்டன் உளவு பார்த்து உதவியதா ?

## விளக்கம் கேட்டு வழக்குத் தாக்கல்

லண்டன், டிசெ.21

பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பிரிட்டன், உளவுப் பணியைச் செய்துள்ளது. இதற்கான விளக்கத்தை உடனே பிரிட்டிஸ் அரசு தரவேண்டும் எனக்கூறி நுர்கான் என்பவர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பாக லேடே என்ற நிறுவனம் பிரிட்டனின் வெளிவிவகாரத்துறை அமைச்சரான வில்லியம் ஹேக்கிடம் விளக்கம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்த நிறுவனத்தின் தலைவரான ரிச்சர்ட் ஸ்டீன் தெரிவித்ததாவது;

பிரிட்டன் அரச முகவர்கள் அமெரிக்காவின் படைகளுக்குப் பாகிஸ்தான் குறித்த விவரங்களை அளித்தனரா? என்பதைக் கூற வேண்டும் என்று வில்லியம் ஹேக்கிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் இதன் மூலமாக எமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையை அறிய விரும்புவதாகவும், இவ்வாறு இரகசியத் தகவல் கொடுப்பதற்கு இந்தக் கொள்கையில் இடம் இருக்கிறதா? என்பதையும் தெளிவாக அறிய விரும்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

(ந)

# புடினுக்கு நெருக்கமான ரஷ்ய மொடல் அழகி நாடாளுமன்றுக்குத் தெரிவு



ரஷ்யாவைச் சேர்ந்த நடிகையும், மொடல் அழகியுமான மரியா கொசெவின்கோவா அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி உள்ளார். இது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள அதேவேளை ரஷ்யப் பிரதமர் புடினுக்கு நெருக்கமாக இருந்தமையே இவர் தெரிவு செய்யப்பட்டமைக்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. அந்தநாட்டு நாடாளுமன்றம், அங்கு இடம் பெற்ற மோசடி மிக்க தேர்தலுக்குப் பின்னர் அடுத்த வாரம் கூடவுள்ளது. இதில் மரியாவும் பங்குபற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் புடினால் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அலினா கபாஹீவாவும் மொடல் அழகியே ஆவார். (ந)

# 'பேஸ்புக்'கை பயன்படுத்த தனது பிள்ளைகளுக்கு ஒபாமா தடை!



வொஷிங்டன்,டிசெ.21

இன்னும் 4 ஆண்டுகளுக்கு பேஸ்புக் பயன்படுத்தக் கூடாது என்று தனது 2 பெண் பிள்ளைகளுக்கும் அமெரிக்க அதிபர் ஒபாமா தடை விதித்துள்ளார்.

பேஸ்புக் உள்பட சமூக இணையத்தளங்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. அமெரிக்க அதிபர் ஒபாமா கடந்த 2008 தேர்தலின் போது, தனது பிரசாரத்துக்கு இந்த இணையத்தளங்களை அதிக அளவில் பயன்படுத்தினார். அதிபரான பின்பு, முதலாவது 'சோஷியல் மீடியா பிரசிடென்ட்' என்று பாராட்டு பெற்றார். அப்படிப்பட்டவர் இப்போது தனது 2 பெண் குழந்தைகளுக்கும் பேஸ்புக் பயன்படுத்தத் தடை விதித்துள்ளார்.

ஒபாமா மிச்சேல் தம்பதி மாலியா (13), சாஷா(10) ஆகிய தமது 2 பெண் குழந்தைகளையும் கட்டுப்பாடாக வளர்க்கின்றனர். இந்த நிலையில் குழந்தைகள் இருவரும் இன்னும் 4 ஆண்டுகளுக்கு பேஸ்புக் உள்ளிட்ட இணையத்தளங்களை பயன்படுத்தக் கூடாது என்று ஒபாமா தடை விதித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், எங்களுக்கு யாரென்றே தெரியாத எத்தனையோ பேர் எங்கள் குடும்ப விவரங்களை அறிந்துகொள்ள வேண்டிய தன் அவசியம் என்ன? குழந்தைகளின் தனிப்பட்ட வாழ்க்கை விவரங்களை வெளியிடுவதில் அர்த்தம் எதுவும் இல்லை. இன்னும் 4 ஆண்டுகள் அவர்கள் காத்திருக்கட்டும் - என்றார். (ந)

# இளம் மனைவியின் மூக்கு, உதடுகளை அறுத்தெறிந்துவிட்டு கணவன் தப்பியோட்டம்

இஸ்லாமாபாத், டிசெ.21

பாகிஸ்தானில், குடும்பத் தகராறு காரணமாக இளம் மனைவியின் மூக்கு, உதடுகளை அறுத்துவிட்டு தப்பியோடிய கணவனை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணம் தேரா காஸி கான் மாவட்டத்தில் உள்ளது காதிர் பக்ஷ் என்பவருக்கு சமீபத்தில் சல்மா என்ற 17 வயது இளம்பெண்ணுடன் திருமணம் நடந்துள்ளது. அதன்பின் இளம் தம்பதிக்குள் அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்தது.

அவ்வாறு நடந்த சண்டையின் போது மனைவியின் மூக்கு, உதடுகளை ஆத்திரத்தில் அறுத்துவிட்டு காதிர் தப்பியோடி விட்டார்.

இருவருக்குமிடையே என்ன தகராறு நடந்தது? காதிர் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார்? என்பன போன்ற விவரங்கள் தெரியவில்லை. எனினும் தலைமறைவான காதிரை காவல்துறையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர். (ந)

# கைப்பற்றிய உளவு விமானங்களை காட்சிக்கு வைக்க ஈரான் அரசு முடிவு

தெஹ்ரான்,டிசெ.21

ஈரானை உளவு பார்ப்பதற்காக வெளிநாடுகளால் அனுப்பப்பட்ட உளவு மற்றும் போர் விமானங்களை வெளிநாட்டு உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைக்க அந்தநாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

ஈரானை உளவு பார்ப்பதற்காக இஸ்ரேலும், அமெரிக்காவும் பல உளவு மற்றும் போர் விமானங்களை அனுப்பி வைத்துள்ளன. அவற்றில் சிலவற்றை ஈரான் இராணுவம் கைப்பற்றி வைத்துள்ளது. சமீபத்தில் அவ்வாறு ஈரான் வான்வெளிக்குள் நுழைந்த அமெரிக்க ஆளில்லா விமானம் ஒன்றை ஈரான் இராணுவம் கைப்பற்றியுள்ளது.


இதுதொடர்பாக மெஹ்ர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது;

ஈரான் வசம் உள்ள இஸ்ரேலின் நான்கு விமானங்களும், அமெரிக்காவின் மூன்று விமானங்களும் விரைவில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. இந்த விமானங்களைப் பார்வையிட தேசிய பத்திரிகையாளர்கள், தெஹ்ரானில் உள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் ஆகியோருக்கு மட்டும் அனுமதியளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

# முன்னாள் வெனிசுலா அழகி புற்றுநோயால் மரணம்

மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் வெனிசுலா அழகி இவா எக்வல் (வயது 28) மரணமடைந்தார். மிஸ் வெனிசுலா பட்டம் பெற்ற பின் நடிகையான இவர், பத்திரிகையாளராகவும் இருந்துள்ளார். மிகவும் பிரபலமாக விளங்கிய இவர் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டதுடன் சிறுநீரகப் பாதிப்புக்கும் உள்ளாகியிருந்தார்.



நோய் தாக்கத்தால் கடுமையாகப் போராடி வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். முன்னாள் அழகி ஒருவர் இளம் வயதிலேயே இறந்தது வெனிசுலாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. உடல் அழகை பேண நாம் அதிகம் செலவிடுகிறோம். ஆனால், உடல் நலத்தைப் பேணத் தவறிவிடுகிறோம் என்று முன்னாள் அழகி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

(ந)

# வென்றது மன்னார் சென். சேவியர்

யாழ்ப்பாணம்,டிசெ.21

கொழும்பு முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி நடத்திய அழைக்கப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ரி-20 கிரிக்கெட் போட்டியில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை கொழும்பு நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி அணியை எதிர்த்து மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற முகத்துவாரம் கிரிக்கெட் அணியின் தலைவர் மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வெற்றிநாதன் 54 ஓட்டங்களையும், ஆமோஸ் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி அணி சார்பாக டிலான் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மணிதரன் 4 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கிலும்விதாரன 48 ஓட்டங்களையும், கிளேடி 27 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை அணி சார்பாக மில்டன் 4 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜக்சன் 4 ஓவர் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் தமது அணி சார்பாக பெற்றார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மன்னார் சென்சேவியர் பாடசாலை அணி வீரன் வெற்றிநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

போட்டியின் தொடர் நாயகனாக முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி அணி வீரர் கிலும் விதாரன தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணி வீரர் மில்டன் தெரிவு செய்யப்பட்டார் சிறந்த களத்தடுப்பாளராக மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணி வீரர் அரவிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (த-23)

## சதுரங்கத்தில் வென்றோர்

வலி வடக்கு டிசெ.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமம் பிரதேசத்திற்க்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய நட்புக்கான வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு-

முதலாம் இடம் சி.வல்லவக் குமரன் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்)

இரண்டாம் இடம் ப.வசிகரன் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்)

மூன்றாம் இடம் தே.ஜெயானந்தன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) (த-86)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட தொடரில் மின் ஒளியில் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி, யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 54:35 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் கே.ஸி.ஸி.ஸி சிவப்பு அணிக்கு மிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' அணி 46:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் கே.ஸி.ஸி.ஸிவெள்ளை அணிக்கும் இடையில் இடம் பெறவிருந்த ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்கு சமூகம் தராமையினால் கே.ஸி.ஸி.ஸி வெள்ளை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-23)

## கிரிக்கெட் இறுதியாட்டத்தில் உடுவில், தெல்லிப்பளை அணிகள்

வலி வடக்கு டிசெ 22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமம் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட நட்புக்கான வெற்றிக் கிண்ணத்துக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாட உடுவில் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூவர் விளையாட வேண்டும் என்ற நிபந்தனை மூலம் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் வயது கூடியவர்களும் கூட இப்போட்டியில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை பலரினதும் பாராட்டைப் பெற்றுள்ளதுடன் முன்னைய வீரர்களும் களத்தில் விளையாட சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் மகிழ்சியுடன் தெரிவித்தார்கள். (86)

## கரம் சுற்றுப்போட்டியில் வல்லவக் குமரன் சம்பியன்

வலி வடக்கு டிசெ 22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமம் பிரதேசத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய நட்புக்கான வெற்றிக் கிண்ணத்துக்கான கரம் சுற்றுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் உடுவில் பிரதேச செயலகத்தைச்சேர்ந்த தி.கோசிகனும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.தவராசாவும் மோதிக்கொண்டார்கள்.இதில் கோசிகன் 30 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள தவராசா 5 புள்ளிகளை பெற்றுக் கொண்ட நிலையில் கோசிகன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச்சேர்ந்த சி.வல்லவக்குமரனும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச்சேர்ந்த ப.வசீகரனும் மோதிக்கொண்டார்கள்.

வல்லவக்குமரன் 26 புள்ளிகளைப் பெற்ற போதிலும் வசிகரன் புள்ளிகள் எதனையும் பெறாத நிலையில் வல்லவக் குமரன் சம்பியனாக தெரிவு செய்ப்பட்டார். (த-86)

## ஆஸ்திரேலிய மண்ணில் வெல்வது சிறப்பானது

''ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்வது சிறப்பான நினைவாகப் பதிவாகும்'' என்று இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான டிராவிட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் டிராவிட், இது குறித்து மேலும் கூறியவை வருமாறு:-

''ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்கு நான் உதக்விகரமாக இருக்க விரும்புகிறேன். ஆஸ்திரேலிய மண்ணில் நாம் இதுவரை டெஸ்ட் தொடரை வென்றது இல்லை.

எனவே, எல்லாம்முறையும் ஆஸ்திரேலியத் தொடரை வெல்லவேண்டும் என்ற இலக்குடன் செயற்படுகிறோம். ஆனால், அந்த இலக்கை எட்டுவது எளிதான காரியம் அல்ல. இருப்பினும், இந்த டெஸ்ட் தொடரை வெல்ல இந்திய அணி முழு முயற்சி மேற்கொள்ளும்.

நான் 5 சதங்களை அடிப்பதோ அல்லது 1000 ஓட்டங்களுக்குக் குறையாமல் சேர்ப்பதோ முக்கியமல்ல. இந்திய அணி டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதுதான் முக்கியமாகும்.

துடுப்பாட்ட வீரர்கள் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டால் நீண்ட நாள்கள் ஆட்டத்தில் நீடிக்கலாம். ஆட்ட நுணுக்கத்தையும், உடல் தகுதியையும் சிறப்பாகக் கடைப்பிடித்தால் நீண்ட நாள்கள் சிறப்பாக விளையாட முடியும். - இவ்வாறு டிராவிட் கூறினார்.



## ஸ்ரைன் சிறந்த பந்துவீச்சாளர்

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரைன் சிறந்த பந்துவீச்சாளர் ஆவார். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரான ஷேன் பொல்லக் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதிராக அண்மையில் செஞ்சூரியனில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் டில்ஷானின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம், தனது 250ஆவது விக்கெட்டை ஸ்ரைன் சாய்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்மதீனா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி.சிவப்பு அணி மோதவுள்ளது. (த-23)

## உடுவில் பிதேச செயலக அணி வெற்றி

வலி வடக்கு டிசெ.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வலிகாமம் பிரதேச பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய நட்புறவுக்கான வெற்றிக் கிண்ணத்திற்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் உடுவில் பிரதேச செயலக அணி 21 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கல்வியங்காடு ஸ்ரீ ஞான பாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் நடை பெற்ற போட்டி ஆட்டமொன்றில் நல்லூர் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

கோசிகன் 17 சந்திரகுமார் 16 பாஸ்கரன் 12 ஓட்டங்களை பெற்றனர்


நல்லூர் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த பிரசன்னா 3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் விஜிதன் 3 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

94 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி முதலில் ஓட்டங்களைப் பெற்ற போதிலும் தொடர்ந்து பின்னணி வீரர்கள் கை கொடுக்காத நிலையில் 12 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

முரளிதரன் 23 காண்டீபன் 17 ஓட்டங்களை பெற்றார்கள்.

உடுவில் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த லம்போதரன் 3 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் பாஸ்கரன் 3 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (த-86)

# தப்புமா பங்களாதேஷ்?



''இந்த அடி போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?''
அரைச்சதம் கடந்த அடானே அக்மல்





''நினைத்தது நடக்கிறது''
இலக்கு வேட்டை நடத்திய சகிப் தன் சகாக்களுடன்

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில், பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 114 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்துள்ளது. முன்னதாக பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 470 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சகிப் அல் ஹசன் 144, நபீஸ் 97, முஷ்பிகுர் ரகிம் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் உமர் குல், ஷீமா தலா 3, அஜ்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட தொடங்கிய பாகிஸ்தான் அணி, நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவு வரையில் 3 இலக்குகளை இழந்து 292 ஓட்டங்களைக் குவித்திருந்தது. துடுப்பாட்டத்தில் தௌபீக் உமர் 130 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். களத்தில் யுனிஸ் கான் 48, மிஸ்பா 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றைய ஆட்டம் ஆரம்பமானதுமே யுனிஸ்கான் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த அஷாட் சபிக், அணித்தலைவர் மிஸ்பாவுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். மிஸ்பா நிதானமாக ஆடி தனது 14 ஆவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இவர்களின் இணைப்பாட்டமாக 66 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மிஸ்பா 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மிஸ்பாவைத் தொடர்ந்து அடானே அக்மல் களம் புகுந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய சபிக் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம்புகுந்த அப்துர் ரஹ்மான் 24, உமர் குல் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். இறுதிவரையில் நின்று போராடிய அக்மல் தனது முதலாவது சர்வதேச டெஸ்ட் அரைச்சதத்தை கடந்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி 154.5 பந்து வீச்சுக்களில் சகல இலக்குகளையும் இழந்து 470 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பங்களாதேஷ் அணி சார்பில் சகிப் அல் ஹசன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

132 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், நஷிம் முதீன் களமிறங்கினர். இந்த ஜோடி அடித்து விளையாடி ஓட்டங்களைக் குவித்தது. தமிம் இக்பால் வேகமாக ஓட்டங்களைக் குவித்த போதும் நீண்ட நேரம் களத்தில் தாக்குப்பிடித்து நிற்க முடியவில்லை. அணி 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இக்பால் 19 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து முதலாவது இன்னிங்ஸில் சிறப்பாக ஆடிய நபீஸ் களம் புகுந்தார். இருப்பினும் முதலாவது பந்து வீச்சிலேயே அவர் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நஷிம் 12, மகமதுல்லா 32, முதலாவது இன்னிங்ஸில் சதமடித்து அசத்திய சகிப் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேற பங்களாதேஷ் அணி 95 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது. நாஷர் ஹூசைனுடன் இணைந்து அணித் தலைவர் முஷ்பிகுர் ரகிமும் நேற்றைய ஆட்டநேர நிறைவு வரை சிறப்பாக ஆடினர். இறுதியில் 35 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகள் நஷ்டத்துக்கு 114 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் நாஷர் ஹூசைன் 30, ரகிம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 18 ஓட்டங்கள் பங்களாதேஷுக்கு தேவையாக உள்ளது. கைவசம் 5 இலக்குகள் உள்ளன. இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். (ங-15)

# அச்சுறுத்தல் தொடரும்



இலங்கை கிரிக்கெட் அணியை தொடர்ந்தும் வேகப்பந்துவீச்சால் அச்சுறுத்தவுள்ளதாக தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சு பயிற்றுநரான அலன் டொனால்ட் சவால் விடுத்துள்ளார். இலங்கை அணி முடியுமானால் அதனை எதிர்கொண்டு பார்க்கட்டும் என்றும் அவர் கர்ஜித்துள்ளார்.


அடுத்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இலங்கை அணியை வேகப்பந்துவீச்சின் மூலம் கட்டுப்படுத்த எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் இலங்கை தோல்வியடைந்தது. மூன்று நாட்களில் முடிவுக்கு வந்த இந்த டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை அணியால் ஓர் இன்னிங்ஸில் கூட 200 ஓட்டங்களை எட்டமுடியவில்லை.

இதேநிலை அடுத்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் தொடரும் எனவும், இலங்கை அணியை பிரகாசிக்கவிடப் போவதில்லை என்றும் அலன் டொனால்ட் குறிப்பிடுகிறார். இலங்கை பலமான அணி என்றாலும் தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சுக்கு உகந்த ஆடுகளங்களில் தமது வீரர்களால் பிரகாசிக்க முடியும் எனவும் அணியின் பந்துவீச்சு பயிற்றுநரான டொனால்ட் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி டேர்பனில் ஆரம்பமாகவுள்ளது. (ங-15)

# ஒலிம்பிக்கும் பணிந்தது இந்தியாவிடம்




லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இருந்து சர்ச்சைக்குரிய 'டவ் கெமிக்கல்ஸ்' நிறுவனத்தின் இலட்சினையை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1984 இல் இந்தியாவின் போபாலில் உள்ள யூனியன் கார்பைட் நிறுவனத்தில் விஷ வாயுக் கசிவு ஏற்பட்டது. இதில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு முறையான நிவாரணம் வழங்கப்படாத நிலையில், யூனியன் கார்பைட் நிறுவனத்தை, அமெரிக்காவின் 'டவ் கெமிக்கல்ஸ்' வாங்கியது.

இந்த நிறுவனம் லண்டனில் அடுத்த வருடம் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியின் அனுசரணையாளராக உள்ளது. இதற்கு இந்தியா சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் 'டவ் கெமிக்கல்ஸ்' நிறுவனம், தனது இலட்சினையை ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ள மைதானத்தில் இருந்து நீக்கிக் கொள்வதாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய ஒலிம்பிக் சங்க (ஐ.ஓ.ஏ.) தற்காலிக தலைவர் வி.கே. மல்கோத்ரா கூறுகையில், இந்த முடிவில் மகிழ்ச்சி இல்லை. இலட்சினையை நீக்குவதால் என்ன பயன் இருக்கிறது. 'டவ் கெமிக்கல்ஸ்' நிறுவனத்துடனான அனுசரணை ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை, என்றார். (ங-15)

## 69ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### சின்னையா வீரசிங்கம்

பெரியமாவடி சாவகச்சேரியில் வசிக்கும் சின்னையா வீரசிங்கம் தனது 69ஆவது பிறந்தநாளை இன்று (21.12.2011) தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

அவர் நீடு வாழிய வாழிய என மணற்பிட்டி பிள்ளையார் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெற்ற அரசு , அரசியல் யுத்தத்தில் கூட்டமைப்பிடம் மண்டியிடக்கூடாது.

அரசுக்கு எதிராக தமிழ்க் கூட்டமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது. இந்நிலை தொடருமானால் நாடு படுபாதாளத்தை நோக்கிப் பயணிக்க வேண்டிய அபாயகரமான நிலை ஏற்படும்.

கூட்டமைப்புடனான பேச்சுகளை அரசு உடன் நிறுத்திக்கொள்ளவேண்டும். எமது ஆலோசனைகளை மீறி அரசு செயற்படுமானால் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படும்.

தமிழ்க் கூட்டமைப்பினர் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிராகரிப்பார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும். அது குறித்து நாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை.

இலங்கை அரசை சர்வதேச பிடிக்குள் சிக்க வைக்கும் கூட்டமைப்பின் சதி முயற்சிகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

புலிகளைப் போற்றி அரசியல் பிழைப்பு நடத்திய கூட்டமைப்பு, புலிகளின் கொள்கைகளையே தங்களது அரசியல் கொள்கைகளாகக் கடைப்பிடிக்கின்றது.

கூட்டமைப்பு தொடர்ந்தும் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது. இதனை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்கப் போவதுமில்லை.

எமது சமூகத்தை ஒன்றுதிரட்டி விரைவில் இவற்றுக்கு எதிராகப் போராடுவோம். மிக விரைவில் எமது சமூகத்தினர் கிளர்ந்தெழுவர் - என்றார். (ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை ஐயாத்துரை



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தட்டாதெருவை வசிப்பிடமாகவும், ஏழாலை மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஐயாத்துரை அவர்கள் 19.12.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- இலட்சுமி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அன்னபூரணம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமார்(பிரான்ஸ்), தேவமலர் (பிரான்ஸ்), ஜீவமலர், ஐலஜா (கனடா), வதனி (கனடா), சதீஸ்குமார் (ஐங்கரன்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாமா, அருமைச்செல்வம், இளங்கோவன், கணேசலிங்கம், சிறீரஞ்சன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், சிவாந்துஜா, சிந்துஜன், சிந்தூரன், ஸ்ரீதாரணி, தர்சனா, தனுஜா, சுபேகா, சோபிகா, தீபிகா, றம்சன், ஜதுசன், அர்ஜீன், பிரசாந்த், பானுஜா, அனித், ஆரபி, அனிசன், ஷர்மிகா, ஷஞ்சய், ஷாருஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இளங்கோவன்
(மருமகன்).

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

### கந்தையா குமாரசாமி



தாவடியைப் பிறப்பிடமாக்வும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசாமி (19.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-ராசம்மா தம்பதியரின் மருமகனும், ரத்தினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மனோன்மணி, மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் செல்லையா, ராஜேஸ்வரி, பூபதியம்மா, கௌரியம்மா, கதிர்காம சுந்தரம்(கணேஸ்), ஜோகேஸ்வரி, ராசேந்திரம்(சுவிஸ்), ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், கமலேஸ்வரி, மற்றும் தயாணந்தன், பவானந்தன்(சுவிஸ்), சகிலா, அகிலா, ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரன், நிர்மலா, கேதீஸ்வரி(சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனும், கஜபரன், பவதரன், சர்மிகா, றபீதன்(சுவிஸ்), சுபீதன்(சுவிஸ்), சோபிகா, நிதூசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.12.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரி லேன், கோண்டாவில்
மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியங்களைப் பறைசாற்றும்

# யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் 2012

2012 தைத்திங்கள் 11 முதல் 15 வரையில்

போட்டிகள் — பொழுது போக்கு நிகழ்வுகள்
கலை நிகழ்ச்சிகள் — வர்த்தக சந்தை

**கலை, பொதுப் போட்டிகள்**
பாட்டுப் போட்டி
நடனப்போட்டி
தமிழன், தமிழிச்சி தெரிவுப் போட்டி
பொங்கல் போட்டி

**விளையாட்டுப் போட்டிகள்**
மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்
நீச்சல் போட்டி, கிளித்தட்டு
வள்ளம் தாங்கல் போட்டி
தயிர் முட்டி உடைத்தல்
மாட்டு வண்டிச் சவாரி
கிறீஸ் மரம் ஏறுதல்

- போட்டிகளில் ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம்
- விண்ணப்பப் படிவத்தை யாழ் மாநகரசபை கலாசாராப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
- விண்ணப்பப் படிவம் 100 ரூபா. தபால் மூலம் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்
- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 31-12-2011க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத் திருவிழா – பொங்கல் 2012
கலாசாரப் பிரிவு, யாழ் மாநகரசபை

மேலதிக விபரங்களுக்கு: தொ.பே: 021 222 2275

**கலை நிகழ்ச்சிகள், வர்த்தக சந்தை**
யாழ்ப்பாணத் திருவிழா: பொங்கல் 2012 நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள், புத்தாக்க முயற்சிகளை வழங்க விரும்புவோர் மற்றும் வர்த்தக சந்தையில் பங்குபெற்ற விரும்பும் வர்த்தகர்கள் யாழ். வர்த்தகர் சங்கம் மூலமாக அல்லது Ashokavatika Holidays, இல.49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே.: 0759 360 370 உடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

ஏற்பாட்டுக் குழு

அனுமதிகள் 26.12.2011
2.00 - 5.00 மணிவரை

# Children's World

Centre for Child Development
PreSchool ஆங்கில மொழி பாலர் பாடசாலை

சிறுவர் அபிவிருத்தி மகளீர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது

(கடந்த 3 வருடங்களாக யாழ் நகரில் இயங்கி வந்த எமது பாடசாலை தற்போது K.K.S வீதி கோண்டாவில் மேற்கு உபதபாலகம் அருகில் அமைந்துள்ளது.)

- Language Development
- Knowledge Development
- Skill Devlopment
- Values Development
- Speach & Drama Class.

அனுமதிகள் 2 1/2 வயது முதல்

Open The Door To Your Child's Future

ஆரம்பம்
04.01.2012

K.K.S வீதி கோண்டாவில் மேற்கு
[உபதபாலகம் அருகில்]

கடந்த வருடம் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் அனைவரும் பிரபல பாடசாலைகளில் தரம் 01 அனுமதி பெற்றுள்ளனர்.

முன் அனுமதிக்கு
0777729525 ,0774685174

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

முதல்வர் நாடாளுமன்றத்தில் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார். 30 வருட கால யுத்தம், அதனால் ஏற்பட்ட அனுபவங்கள், சீர்செய்யப்படவேண்டிய விடயங்கள் பற்றி நாம் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். இறுதியான காலகட்டத்தைப்பற்றி மட்டும் ஏன் பேசுகிறீர்கள்? ஏன் முழுமையான காலப்பகுதியில் நடந்தவைபற்றி பேச மறுக்கிறீர்கள்? பல்வேறு நாடுகளில் இதேபோன்ற மோதல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இலங்கைக்கு மட்டும் சில வழிமுறைகளை ஏன் பின்பற்றுகிறீர்கள் என்று கேட்க விரும்புகின்றேன்.

அமெரிக்காவின் இந்த அறிக்கை நீதியானது அல்ல. அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**இப்படிக் கோரலாமா?**

இலங்கையில் நடந்த ஒன்றுக்காக சர்வதேச விசாரணை கோரிய ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான். இதுவரை காலமும் இப்படி எவருமே இந்த வகையிலான கோரிக்கைகளை முன்வைத்ததில்லை. வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெளிவாகக் கூறினார். விசாரணைகள் உள்நாட்டில் நடத்தப்படவேண்டுமென்பதை அவர் வலியுறுத்தினார்.

ஆனால், சம்பந்தனோ, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை விமர்சித்து சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை விடுக்கின்றார். இது கவலைக்குரிய விடயம். அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் ஒருவர், உள்நாட்டுப் பிரச்சினை யொன்றுக்காக வெளிநாட்டுத் தலையீட்டைக் கோருவது மிகவும் துரதிஷ்டவசமானது.

- என்றார் அமைச்சர் பீரிஸ். (ஒ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

எல்லையுண்டு.

- இவ்வாறு நேற்றுக் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுக்காலை சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கருத்து களை வெளியிட்டார் ஜனாதிபதி.

அப்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்க் கூட்டமைப்பு இடம்பெறவேண்டும் என்பது முக்கியமானது. இதற்கு உறுப்பினர்களின் பெயரை அனுப்புமாறு நாம் தெளிவாகக் கூறியிருக்கிறோம். ஆனால், புலிகள் செய்ததைத்தான் கூட்டமைப்பும் செய்கிறது. பேச்சு மேசையில் அமர்வார்கள். பிறகு ஏதாவது நிபந்தனையை விதித்துவிட்டு வெளியேறுவார்கள். பிறகு வருவார்கள், பேசு வார்கள். நாமும் மிகப் பொறுமையாகப் பேசுகிறோம். எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு.

தமிழ்க் கூட்டமைப்பினரின் மனநிலை மாறவேண்டும். போர்ச்சூழல் மனநிலையிலிருந்து அவர்கள் விலகவேண்டும். நான் பேச்சுக்கு செல்லாமைக்கும் இதுதான் காரணம். தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஒரு தரப்புடன்தான் நாம் தீர் மானங்களை எடுக்கலாம். ஆனால், கூட்டமைப்பினர் இப் படியான நிலையில் இல்லை. தனியாக ஒரு தீர்மானத்தை அவர்களால் எடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அவர் கள் வெளித்தீர்மானத்திற்கு உட்பட்டு செயற்படவேண்டிய நிலையில் இருக்கின்றனர். புலிகளின் அடிவருடிகளும் வெளிநாட்டுச் சக்திகளும் அவர்களின் பின்னணியில் இருக்கின்றன- என்றார் ஜனாதிபதி.

(ஒ-சி)

**விழிநீர் சொரியும் 5 ஆம் ஆண்டில்**



**அமரர் நல்லதம்பி கணேசன்**

(கணேசா ஸ்ரோர்ஸ், பசறை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க ஏகாதசி
21.11.2011

**அன்பு காட்டி எமை அரவணைத்து
புகழுடன் வாழ வைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆன்மா
சாந்திபெற எல்லாம் வல்ல வாரிவளவு கற்பக
விநாயகனின் பதார விந்தங்களில்
மலர் தூவி வணங்குகின்றோம்.**

*9/5, கோபால் லேன்,
யாழ்ப்பாணம்.*

**மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

## சிறிகொத்தா தாக்குதல் 10 பேருக்கு மறியல்

கொழும்பு, டிசெ.21

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தா அலுவலகம் மீது தாக்குதல் நடத்தினர் எனக் குற்றம் சுமத்தப்பட்ட ஐ.தே.க. மேல் மாகாணசபை உறுப்பி னர் களான மைத்திரி குணரட்ன மற்றும் ஷிரால் லக்திலக உள்ளிட்ட 10 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகே கொட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

## அறிக்கை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

அம்மையார் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழு ஊடக சுதந்திரம், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு, படைக்குறைப்பு, காணாமற் போதல்கள் போன்ற விடயங்களில் சில உருப்படியான பரிந்துரைகளை - முன் வைத்துள்ளது. அதேவேளை, நாங்கள் முழுமையான அறிக்கையை ஆய்வு செய்கிறோம்.

ஆனாலும், போரின் இறுதிக்கட்டத் தில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டு களுக்கு இந்த அறிக்கையில் முழுமை யாகப் பதிலளிக்கப்படவில்லை என்பதை நாம் கூறியேயாக வேண்டும்.

குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவ டிக்கை எடுப்பதற்கான விரிவான திட் டம் ஒன்றை முன்வைக்க ஆணைக்குழு தவறியுள்ளதால், உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப் புக்கூறல் தொடர்ந்தும் கேள்விக்குறி யாகவே உள்ளது.

அறிக்கை முழுமையாக இல்லாது போனாலும், இந்த அறிக்கையின் பரிந் துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசிடம் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையர்கள் இந்த விவகா ரங்களில் முழுமையாகப் பதிலளிக்க வேண்டும் என்பதையே நாங்கள் நீண் டகாலமாகக் கூறி வருகிறோம் - என்றார் அவர்.

அதேவேளை, இலங்கை மீது அனைத் துலக விசாரணை தேவைப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த விக்ரோ ரியா நூலன்ட், ''அவர்கள் முன்னோக் கிச் செல்கிறார்களா என்று பார்ப்போம்'' என்று பதிலளித்துள்ளார்.

ஆனால், ஆணைக்குழுவின் அறிக் கையில் நம்பிக்கையீனத்தை வெளி யிட்டுள்ள தமிழ்க் கட்சிகளும் மனித உரிமை அமைப்புக்களும் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றே அவசியம் என்று கூறியுள்ளது.

(உ)

## மர்மப்பொருள்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

ருக்கு இந்தச் சத்தம் பெரிதாகக் கேட் கவில்லை. பின்னர் தன்னுடைய பெற் றோர் வீடு திரும்பியதும் சிறுவன் நடந் ததைக் கூறினான். சிறுவன் காட்டிய இடத்தில் பெரும் குழி ஒன்று ஏற்பட்டி ருந்ததுடன் அதனுள் கலங்கிய நிலை யில் நீரும் தேங்கி இருந்தது. உட னேயே இது குறித்து கிராம சேவகருக் கும், பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட் டது. சம்பவ இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் குழியை ஆராய்ந்த பின்னர், அதனுள் ஆபத்தான வெடிபொருள் இருக்கக் கூடும் என் பதால் யாரும் அதனருகே செல்ல வேண்டாம் என்று எச்சரித்தனர். அத்துடன் இரவு வேளையில் அதனை மீட்க முடியாது என்பதால் இன்று காலை அதனை மீட்பதாகக் கூறிச் சென்றுள்ளனர்.

தங்கள் வீட்டின் முன்னால் வீழ்ந்தது எறிகணையாகத் தான் இருக்கும் என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

மர்மப்பொருள் வீழ்ந்துள்ள வீட்டின் அண்மையில் கிழக்குப் புறமாக கடற் படை முகாம் அமைந்திருப்பதாக கூறப் படுகிறது.

(ங)

## இலங்கை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்து வருகிறது. ஆனால் போர் நடந்த ஏனைய நாடுகளில் இவ்வாறான நிலைமையைக் கையாள்வதில் மெத்தனப் போக்கே இருந்தாலும் அதனை அமெரிக்கா கண்டுகொள்வதில்லை. ஆனால் இலங்கை மீது மட்டும் இத்தகைய அழுத்தத்தை பிரயோகித்து வருகிறது - என்றார்.

(ங)

## ஆணைக்குழுவின்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

யும் என குறிப்பட்டுள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்த அறிக்கையின் பரிந்துரைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே ஆஸ்திரேலியாவின விருப்பம் என தெரி விக்கப்பட்டுள்ளது. (ங)

## எம்மக்களை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

தெரிவித்தார் மூத்த அரசியல்வாதியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

அரசுடன், கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சு உட்பட பல விடயங்கள் குறித்து அவர் தமது செவ்வியின் போது விளக்கமாக விவரித்தார்.

அரசின் வறட்டு நியாயங்கள் நாட்டுக்கு உதவமாட்டா என்றும், இவ்விதமான போக்கின் காரணமாகவே இலங்கை அரசு சர்வதேச ரீதியாகக் குற்றவாளிக்கூண்டில் நிற்கிறது என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

*(சம்பந்தன் வழங்கிய விசேட செவ்வி 14, 15 ஆம் பக்கங்களில்)*

## மரண அறிவித்தல்கள்

### *சின்னத்துரை ஜெயராஜா*



நவாலி சின்னப்பா வீதியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெயராஜா 19.12.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின் னத்துரை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலா (சின்னக்கி ளியின்) அன்புக் கணவரும்,ஜெயரஞ்சன் (கனடா),ஜெயக்குமார் (பிரான்ஸ்), குலமணி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியா, பிரதீபன் (இத் தாலி), பிரகலதன்(பிரபு), பிரகாஷ்(பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், துரேஷன், நாகசொரூபி(இத்தாலி), தர்மினி (கொழும்பு) ஆகியோரின் மாமனும், சானுஜன், சஞ்சைஜன், யதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2011) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக் காக பூதவுடல் நவாலி, கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி கிழக்கு,
சின்னப்பா வீதி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

### *சின்னையா நடராசா*



கூழாவடி, ஆணைக்கோட்டையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராசா நேற்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவ ரும், சறோஜினி மற்றும் காலஞ்சென்றவர்க ளான ரவீந்திரன், சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா அவர்களின் மாமனும், சுகன்யா, சுஜான் ஆகியோரின் பாசமிகு பேரனும், அல்லி, மகேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், தங்கராசா, சின்னராசா, திலகவதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2011) புதன் கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**கூழாவடி லேன்,
ஆனைக்கோட்டை.**

**சிவராசா சறோஜினி (Certist lanka Home Nursing Asst. Manager)**

### *திருமதி குருசாமி தனலட்சுமி*



கல்லூரி வீதி காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும் கேளம்பாக்கம் சென்னையை தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட குருசாமி தனலட்சுமி நேற்று (20.11.2011) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் இறைபதமெய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தி யாவில் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மனிப்பாய் வீதி,
உடுவில்.**

**தகவல்:
முத்துமலர்**

# மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரப்பகிர்வு வேடிக்கையானது என்று தொண்டமானே கூறுகிறார்

## இந்தியாவிடமும் அவர் கூறியுள்ளார் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.21

மாகாணசபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது வேடிக்கையான ஒரு விடயமென அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெளிவாகக் கூறியிருக்கிறார். இதனை இந்தியாவிடமும், அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

இப்படி நேற்றுக் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அலரிமாளிகையில் நேற்று பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்த ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்குப் பரவலாக்கினால் ஏற்படும் விளைவுகளுக்குச் சிறந்த உதாரணமாக நாம் இந்தியாவைக் குறிப்பிடலாம். மும்பையில் தாக்குதல் நடந்தபோது, முதலமைச்சருடன் தொடர்புகொள்ள மத்திய அரசுக்கு இரண்டு மணி நேரம் ஏற்பட்டது. புதுடில்லிக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தப்பட முன்னர் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. பொலிஸ் அதிகாரத்தைக் கொடுப்பது பற்றி நன்கு ஆராய வேண்டும்.

இப்போது தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைகின்றனர். அப்போது தமிழர்கள் பொலிஸில் இணைய இடமளிக்கப்படவில்லை. மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது என்பது பெரிய பிரச்சினை. முதலமைச்சரைப் பற்றி ஏதாவது எழுதினால், அவர் நேராகவே ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடும்நிலைமைகூட வரலாம். என்னிடமாவது தப்பலாம். ஆனால், அந்த நிலைமை அப்படியிருக்காது - என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி.

**அலுவலகர் தேவை**

MyWay இன் நெல்லியடி. சாவகச்சேரி. சங்கானை. அச்சுவேலி மற்றும் யாழ்பாணம் அலுவலகங்களில் பணிபுரிய A/L படித்த அல்லது பட்டம் பெற்ற ஆண், பெண் அலுவலர்கள் தேவை

சுயவிபரக்கோவையுடன் 21.12.2011 புதன் இன்று காலை 9 -11 அல்லது மாலை 2-4 யாழ் அலுவலகத்திற்கு நேரில் வரவும்

**MyWay English**
182, Stanley Rad, Jaffna
077 33 63 456

**படிவம் விற்பனையாகிறது**

சமூக சேவைகள் அமைச்சு
முகாமைத்துவ உதவியாளர் (தரம்-III)

தகைமை: O/L, A/L மட்டும்
முடிவு திகதி: 31.12.2011

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி மற்றும் சுன்னாகம்
**அபான்ஸ்** வழங்கும்
அதிரடி சலுகையும் விசேட விலைக்கழிவும்





பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டும்

LapTop (மடிக்கணினிகள்) கணினிகளை மாதாந்த தவணைக் கொடுப்பனவு முறையில் இன்றே பெறுவதற்கு விரையுங்கள் சுன்னாகம் மற்றும் திருநெல்வேலி அபான்ஸ் கிளைகளுக்கு.....

ஹோம்தியேட்டர்கள், மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும் 12 மாத தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக்கொள்ளலாம் அரச ஊழியர்கள், நிரந்தர வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

(C/7112)(5)

160A, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 0212240440
269, பலாலி வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி. 0212220247
Abans

**பிரத்தியேக வகுப்பு**

O/L 2012, தரம் 10, 9 மாணவர்களுக்கு கணிதம் A இற்கு **சங்கர்** ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:
T.P.:0776597370
யாழ்ப்பாணம்.

**காணவில்லை**

கறுப்பு-வெள்ளை கலந்த நாய்க்குட்டி ஒன்று 20.12.2011 அன்று மதியம் 11 மணிமுதல் காணவில்லை. கண்டவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

இராமச்சந்திரன் சிறிலவன்,
548/2, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



அமரர் **ஆ.சி.நடராஜா**

அவர்களின் மரணச்சடங்கு நிகழ்வில் சகல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களைப் பிரசுரித்தவர்களுக்கும், மலர்வளையங்களை வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து மலர்வளையங்களை உடன் அனுப்பியவர்களுக்கும், உள்ளூர்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கும், அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச சபை ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய். (C/7105)(5,6,7,9) குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

*நாகலிங்கம் காங்கேயன்*

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் காங்கேயன் நேற்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னம்மாவின் பாசமிகு கணவரும், ஆழ்வாப்பிள்ளை, உதயகுமார், விஜயகுமார், ராஜேஸ்வரி, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாயகி, பவளம், முத்துலிங்கம், குமுதா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2011) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ ஒற்றைப் பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (மகன்)
மறவன்புலோ கிழக்கு,
சாவகச்சேரி.
நா.ஆழ்வாப்பிள்ளை குடும்பம்.

புது வருட மலிவு விற்பனை
**REXINE SPOT**

கார், ஆட்டோ மற்றும் எல்லா வாகனங்களுக்கும் தேவையான
- ரெக்சின்கள்
- உள் அலங்காரப் பொருள்கள்
- சோபா செட்டிகளுக்கான துணி வகைகள்
- வெல்வெட் வகைகள்
- றூவும் கவர்கள்
- கூட்குசன் வேலைகளுக்குத் தேவையான அனைத்துப் பொருள்கள்
- காபட் வகைகள்
- மோட்டார் சைக்கிள் சீட்கவர்கள்

எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்

REXINE SPOT 32, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம்.தொலைபேசி இல: 0212219095/0776912493

(11756) (10.6)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டுகள் நான்கு ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே பேபி
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா
உங்கள் பாலகன் நான் திருவரங்கன்
உங்கள் முகம் பார்க்குமுன்னே எங்குதான் சென்றீரோ!

மண்ணில்
27.07.1976

விண்ணில்
21.12.2007

## அமரர் சிவபாலன்

ஐங்கரன் இல்லம்,
தொல்புரம், வழக்கம்பரை.

பிரிவால் துயருறும்,
சி.தயாளினி (மனைவி),
சி.திருவரங்கன் (மகன்).

(11887)(5)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.